கலைமகள் வாசகம்

முதற் புத்தகம்

[பொது]

ஆசிரியர்:
புலவர். சரவண ஆறுமுக முதலியார், M. A., B. O. L., L. T.
தமிழ்ப் பேராசிரியர்,
ஆசிரியர் கல்லூரி, சென்னை.

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
நுங்கம்பாக்கம் : : சென்னை.

பதிப்புரிமை] 1951 [விலை அ. 0-12-0

முதற் பதிப்பு — 1951

S. V. S. PRESS, MADRAS-2

6396

THE MADURA TAMIL SANGAM

உரிமை உரை

எதிர்காலத் தமிழகத்தின் தனிப்பெருந் தலைவர்களாகவும், குடி மக்களாகவும் வரப்போகும், நிகழ்காலத் தமிழ் மாணவ மணிகளுக்கு இப்பாடநூல் உரியதாகுக.

முன்னுரை

ஆழ்ந்தபடிப்பு, அகன்றபடிப்பு என்று இருவகை யாக்கக் கூடிய மொழிப்படிப்பில் பாட நூல்கள் (Detailed texts) ஆழ்ந்து படித்தற் குரியவை. துணைப்பாட நூல்களிற்போல், (Non-Detailed texts) மேலெழுந்த வாரியாக நுனிப்புல் மேய்ந்து படிக்காமல், ஆழ்ந்து நுட்பமாகச் சுவைத்துப் படித்தற் குரியன இவை. இந் நூல்கள் பொதுவாக மொழி அறிவை வளர்ப்பதோடு, சிறப்பாக இலக்கியச் சுவை உணரும் ஆற்றலை உண்டு பண்ணி அதை வளர்த்து, இலக்கியப் பற்று, தாய் மொழிப் பற்று, தாய்நாட்டுப் பற்றுகளையும், நல்லொழுக்க, சமய, உணர்ச்சிகளையும் விளைவித்து, பள்ளிக் கூடங்களை விட்டு மாணவர் அகன்ற பின்னரும், வாழ்நாள் முழுவதும் இவை நிலைத்திருக்குமாறும் செய்யவேண்டும்.

அங்ஙனம் படித்தால், முன் கூறியவற்றை அடைந்து, பாடப் பகுதிகளிற் காணலுறும் சொல், பொருள் நயங்களை உய்த்துணர்ந்து இன்புறும் வழக்கத்தையும் பெறுவர். மேலும் இவற்றின் வழியாய், இவற்றின் துணைகொண்டு, பாடங்களில் வரும் தலைவன் தலைவியர் முதலிய பல மக்களின் இயல்புணர்தலும், அவற்றிற் பயிலும் இலக்கணக்

குறிப்புகள், அரிய சொல்லாட்சிகள், சொற்றெடர், மரபுத் தொடர்கள் முதலியவற்றை அறிந்து, அவற்றை, "முன்னோர் மொழி பொருளே யன்றி, அவர் மொழியும் பொன்னேபோற் போற்றுவம்" என்னும் தமிழ் மரபுக்கு ஏற்ப, தம் பேச்சிலும் எழுத்திலும் வைத்து வழங்குவதற்குரிய பன்முறைப் பயிற்சியும் (Drill), பிழையறவும், தெளிவாகவும், கோவையாகவும், எளிய, இனிய, தூய நடையில் குறித்த ஒரு பொருள்பற்றி எழுதவும், பேசவும், கருத்துவளம், சொற்களஞ்சியம் (Vocabulary) முதலியன உறுதி பெறவும், ஒரு பத்தியில் (paragraph) வரும் பொருளைச் சுருக்கமாக அறிந்து கொள்ளவும், காரண, காரியத் தொடர்பு (rogical arrangement) உணர்ந்து வகுத்துப் பார்க்கும் (analytic) நுண்ணறிவு பெறவும் பாட நூல்கள் உறுதுணையாயிருக்கும்.

இத்தகைய நன்னோக்கங்களும், பயன்களும் கருதியே, தாய்மொழி முதன் மொழியானபின், அரசியலார் புதிய பாடத்திட்டங்களை அண்மையில் வெளியிட்டனர். புதிய தமிழ்ப் பாடத் திட்டத்தை அடியொற்றிப் பின்பற்றியே கீழ் அமைப்புகளுக்கு (Lower forms) இப்பாட நூல்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை, முற்கூறப்பட்ட நோக்கங்களையும் பயன்களையும் தரும் வழியில் மாணவர்களைச் செலுத்துமேல், அதையே என்பணியின் பயனாகக் கருதுவேன்.

பாடத்திட்டப்படியே பொது, சிறப்பு ஆகிய இரு பிரிவுகளுக்கும் செய்யுட் பகுதிகள் பல திறத்தனவும், பல சுவையுடையனவும் ஆகவும், முற்கால இடைக்காலத் தற்காலங்களுக்கு எவ்வளவு வரிகள் ஒதுக்கப்படவேண்டும் என்ற வரையறைக்குட்பட்டும் தொகுக்கப்பட்டுள்ளன. வாழ்த்துப் பகுதிகள், கடவுள், மொழி, நாடுகளுக்கு எனச் சேர்க்கப்பட்டுள்ளன. அறவுரையிலும் பாடத்திட்டப்படி பல வகை நூல்களிலிருந்து பகுதிகள் எடுக்கப்பட்டுள்ளன. வரலாற்று (கதைப் போக்கு)ப் பகுதியும் அமைக்கப்பட்டுள்ளது. பல்சுவைப் பகுதியில், முற்கால, இடைக்காலத், தற்காலப் புலவர்களின், தனிப்பாடல்கள், இயற்கை வருணனைப் பாடல்கள், எளிய இனிய பாடல்கள், நாட்டுப் பாடல்கள், கிராமத் தொழில் பற்றியவை, இசைப் பாடல்கள், முதலிய பலவகைகளும் உள்ளன.

உரைநடைப் பகுதியும், பொது, சிறப்பு ஆகிய இருபிரிவுகளுக்கும் எளிய, இனிய, தூய நடையில், பாடத்திட்டத்தை ஒட்டிய பொருள் வகைகள் கொண்டு விளங்குகிறது. ஏறக்குறையப் பாதி அளவுக்கு மறைமுகமாகவும், நேர்முகமாகவும்,பாடங்கள் இலக்கியத் தொடர்புடையனவாக உள்ளன. பழைய இலக்கியப் பகுதிகளில் சுவையூட்டுமாறு. உரைநடைப் படுத்தப்பட்ட பழைய இலக்கியப் பகுதிகளும், கற்பனை நகைச்சுவைக் கதைகளும், அறிவியற் புதுமைகள், கிராமக் குடிசைக் கைத்தொழில், இன்ப வெளிச் செலவு, நீர்ப்பாசன வசதி, சிறந்த

பெருமக்கள் வாழ்க்கை வரலாறு, சிற்பம், சிறந்த வரலாற்று நிகழ்ச்சி, கலை, உரைநடை நாடகம் முதலிய பலவகைப் பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பாட நூலுள் வரும் இக்காலப் புலவர்களாகிய, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை, பாரதிதாசன், பாரதியார், சுத்தானந்த பாரதியார், கரந்தைக் கவியரசு, ம. வி. இராகவன் முதலிய பலரின் கவிதைப் பகுதிகளிலிருந்து எடுத்துப் பாடல்களைப் போட்டுக் கொள்ளும்படி உதவிய அவற்றின் உரிமையாளர்களுக்கு என் உளமார்ந்த நன்றி உரியதாகுக.

இப்பாடநூலை, நன்முறையில் வெளியிட்ட "எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி" உரிமையாளர்கட்கும் என் நன்றி உரித்தாகுக. இப்பாடநூலை, நாட்டாண்மை, நகராண்மைக் கழகத்தார்களும், பிற பள்ளிக் கூடங்களை நடத்துவோர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும், சிறப்பாக மாணவர்களும் விரும்பி ஏற்றுக் கொள்வார்கள் என்னும் நம்பிக்கை எனக்கு மிகுதியாக உண்டு.

ஆசிரியர் கல்லூரி
சைதாப்பேட்டை
25—11—51

ச. ஆறுமுக முதலியார்
தமிழ்ப் பேராசிரியர்.

THE MADURA TAMIL SANGAM

உள்ளடக்கம்

உரை நடைப் பகுதி.

1.	தமிழ் மொழி	1
2.	நமது உணவும், உடையும்	6
3.	நல்வினையாளனும், தீவினையாளனும்	14
4.	எனக்கு வந்த வாழ்வு	22
5.	காளத்தி முதலியார்	30
6.	இன்பவெளிச் செலவு	37
7.	குதிரை பிடிக்கத் தூண்டில் போட்டது	43
8.	வானொலி	50
9.	மகாபலிபுரம்	58
10.	வாய்மையும் இன்னாசெய்யாமையும்	66
11.	விபுலானந்த அடிகள்.	75
12.	வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி	83
13.	பிளாஸ்டிக் செல்லுலாய்டுப் பொருள்கள்	91

செய்யுட் பகுதி

1. வாழ்த்துப் பகுதி

1.	பொதுமை வேட்டல்	99
2.	மலரும் மாலையும்	100
3.	தமிழன் இதயம்	102
4.	நாடு	103

II. அறவுரைப்பகுதி.

அ. திருக்குறள் 106
ஆ. மூதுரை 110
இ. நல்வழி 112
ஈ. அறப்பளீசுர சதகம் 114
உ. திருவேங்கடசதகம். 115
ஊ. விவேக சிந்தாமணி. 116

III. வரலாற்றுப் பகுதி.

1. தேசிங்குராஜன் கதை. 116
2. கண்ணன் பாட்டு. 123

IV. பல்சுவைப்பகுதி.

1. இன்னிசைப் பாடல்கள். 126
2. இயற்கை வருணனை. 129
3. நாட்டுப்பாடல் 135

கலைமகள் வாசகம்

முதற் புத்தகம்

உரைநடைப் பகுதி

(பொது)

1. தமிழ்மொழி

மாந்தர், தம் மனத்தில் தோன்றும் கருத்துக்களை வெளிப்படையாக ஒருவர்க்கொருவர் தெரிவித்துக்கொள்ளும் அறிவு நலம் வாய்ந்தவராவர். பொருள் விளங்கும்படி, பல சொற்றொடர்களால் அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றார்கள். அவ்வாறு தெரிவித்துக் கொள்ளும் வழக்கிற்கே மொழி என்று பெயர்.

உலகில் உள்ள நாடுகள் பலவாகும். அவற்றில் வாழும் மக்களின் வாழ்க்கைமுறை, சமயம் முதலியன வேறுபாடு உடையனவாய் இருக்கின்றன. அங்ஙனமே அவர்கள் பேசும் மொழிகளும் வேறுபடுகின்றன. வங்காளி ஒருவன் தனது மொழியில் பேசுவது நமக்கு விளங்குகின்றதா? இல்லை. ஏனெனில், அது நமது மொழிக்கு முற்றிலும் வேறானது. இவ்வாறு உலகில் பல்வேறு மொழிகள் வழங்குகின்றன. ஆங்கிலேயர் பேசுவது ஆங்கில மொழி. சீனர் பேசுவது சீனமொழி. அவை போலத் தமிழர் ஆகிய

நாம் பேசும் மொழிக்குத் **தமிழ்மொழி** என்பது பெயர்.

தமிழ் என்னும் சொல்லுக்கு 'இனிமை' என்பது பொருள். எனவே, தமிழ் இனிமையான மொழி என்பது விளங்கும். தமிழ்மொழி பேசுகின்ற நமக்குத் **தமிழர்** என்றும், தமிழராகிய நாம் வாழும் நாட்டிற்குத் **தமிழ்நாடு** என்றும் பெயர்கள் வழங்குவதற்குத் தமிழ் மொழியே காரணம் ஆகும் அல்லவா?

முன்னறி தெய்வமாகிய நம் தாய், நமது குழந்தைப் பருவத்தில் நம்மைச் சீராட்டிப், பாலூட்டித் தாலாட்டி வளர்த்தபொழுது நமக்குப் பேசக் கற்றுக் கொடுத்த மொழியே நமது தாய் மொழியாகும். அதனைப் போற்றுவது நமது அருங்கடமை. தாய் மொழியைப் போற்றுதல், அதனை இலக்கணப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பயில்வதால் அமையும். ஆகையால், நாம் நமது தாய்மொழியாகிய தமிழைத் திருத்தமாகப் பேசவும், எழுதவும் கற்றுக் கொள்வது இன்றியமையாததாகும்.

தமிழ்மொழி சிறந்த இலக்கண வரம்புடையது அது நேற்று இன்று தோன்றியதன்று; மிகவும் பழமையானது. கிழக்கில் வங்காளக் குடாக்கடலும் தெற்கில் கன்னியா குமரியும், மேற்கில் குடகும் மலையாள நாடும், வடக்கில் திருவேங்கட மலையும் ஆகிய நான்கு எல்லைக்கு உள்ளடங்கிய நிலப்பரப்பில் தமிழ்மொழி வழங்கி வருகிறது.

சிவபெருமான் தமிழ் மொழியை அகத்திய முனிவருக்குக் கற்பித்தார் என்றும், அக் குறுமுனிவர் அதனை வளர்த்தாரென்றும் நூல்கள் உரைக்கின்றன. அகத்தியர் தமிழுக்கு இலக்கண நூல் ஒன்று இயற்றியிருக்கின்றார். அதற்கு **அகத்தியம்** என்பது பெயர். அது முழுவதும் இக்காலத்தில் கிடைக்கவில்லை. அகத்தியருக்குப் பின் **தொல்காப்பியர்** என்பவர் ஓர் இலக்கண நூல் இயற்றியுள்ளார். அதற்குத் **தொல்காப்பியம்** என்பது பெயர். சுமார் எழுநூறு ஆண்டுகட்கு முன் இருந்த **பவணந்தி முனிவர்** என்பவர் சுருக்கமாக இலக்கணம் ஒன்று செய்துள்ளார். அதற்கு **நன்னூல்** எனப் பெயர் வழங்கும். நன்னூல் தன் பெயருக்கு ஏற்ப மிகவும் நல்லதொரு நூலே. இக்காலத்தில் தொல்காப்பியமும், நன்னூலும் ஒப்ப வழங்கி வருகின்றன. நீங்கள் இவற்றைப் பற்றி மேல் வகுப்புக்களில் விவரமாகத் தெரிந்து கொள்வீர்கள்.

தமிழ் இலக்கணம் **எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி** என்னும் ஐந்து பெரும் பிரிவுகளை உடையது. அவற்றுள் **எழுத்திலக்கணம்**, எழுத்துக்களின் வகை, எண்ணிக்கை, சேர்க்கை முதலானவற்றையும், **சொல் இலக்கணம்** சொற்களின் வகை, தன்மை ஆகியவற்றையும், **பொருள் இலக்கணம்** வாழ்க்கைத் தொடர்பான உலகச் செய்திகளையும் கூறும். **யாப்பிலக்கணத்**தால் செய்யுள் இயற்றும் விதிகளை அறியலாம். **அணி இலக்கணம்** செய்திகளை அழகுபடுத்திக் கூறும் முறைகளை விளக்கும்.

ஒருவன் எத்துணைச் செய்யுட்களைப் படித்து அறிந்தாலும், அவனுக்கு இலக்கணப் பயிற்சி இராவிடில், அப்படிப்பு பயனற்றதே ஆகும். இலக்கணம் என்பது பாடல்களின் பொருள் நுட்பங்களைக் கண்டறிய உதவும் ஒரு கருவி. ஆதலின், நீங்கள் நமது தாய் மொழியாகிய தமிழ் மொழியின் இலக்கணத்தை ஐயமறக் கற்று, அதன் துணையைக் கொண்டு நூல்களின் நுண்பொருள்களை ஊன்றி அறிந்து இன்புறுவீர்களாக.

பயிற்சிகள்

1. மொழி எப்படி நமக்குப் பயன்படுகிறது?
2. தமிழ் என்னும் சொல்லின் பொருள் என்ன?
3. தமிழைத் தாய் மொழி என்பது ஏன்?
4. தமிழ் நாட்டின் எல்லைகள் எவை?
5. தமிழ் இலக்கண நூல் இரண்டு கூறுக.
6. (1) தொல்காப்பியர், பவணந்தி—சிறு குறிப்புகள் வரைக.

(2) தமிழ் இலக்கணத்தின் பிரிவுகள் எத்தனை? அவற்றுள் மூன்றை விளக்குக.

7. வேறுபாடு, வழக்கு, சீராட்டி, நிலப்பரப்பு, இலக்கணவரம்பு, அழகுபடுத்தி—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் ~~உபயோகப்படுத்துக.~~ அமைத்து எழுதுக.

8. தொல்காப்பியர் இலக்கணம் செய்தார்—இதனுள் எ. ப. செ. கூறுக.

9. மேல்வாக்கியத்துள் உள்ள சொற்கட்குத் திணை, பால், எண், இடம் முதலியன கூறுக.

10. **வாக்கியம்** : கருத்து முடிந்து நிற்கும் சொல் தொடர்.

சொற்றொடர் : சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து நிற்றல். இது கருத்து முடிந்து நிற்கலாம் : முடியாமலும் நிற்கலாம். கருத்து முடிந்த சொற்றொடர் முற்றுச் சொற்றொடர் அல்லது **வாக்கியம்** எனப்படும். கருத்து முடியாத சொற்றொடர் 'எச்சச் சொற்றொடர்' எனப்படும்.

11. நிறுத்தக் குறிகள் :—காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி முதலியவற்றை எங்கெங்கு இடவேண்டும் என்பதை அறிதல் வேண்டும். கருத்து விளங்க வாசித்தற்கு இவை இன்றியமையாதவை.

, இது காற்புள்ளி : இது பொருள் விளங்கும் பொருட்டு நிறுத்த வேண்டும் இடங்களில் இடத்தக்கது, இது பெரிய வாக்கியங்களில் வினையெச்சத்தின் பக்கத்தில் இடத்தக்கது. சில இடங்களில் எழுவாயை அடுத்தும் இதனை இடலாம். வினைப்பெயர்களை அடுத்து இது வரும்.

; இது அரைப்புள்ளி : இது பெரிய வாக்கியங்களில் எழுவாய் அற்ற சொற்றொடரின் முடிவில் இடத்தக்கது. இது பொருளின் தொடர்பை உணர்த்தும் குறி.

. இது முற்றுப்புள்ளி ; இது வாக்கிய முடிவில் இடத்தக்கது.

! இஃது உணர்ச்சிக்குறி : இது வியப்பு, வருத்தம். ஏமாற்றம் முதலியன வரத்தக்க இடங்களில் இடத்தக்கது.

? இது வினாக்குறி ; இது கேள்விப் பொருளைத் தரும் வாக்கிய இறுதியில் இடத்தக்கது.

12. மேலே கண்ட, உணர்ச்சிக் குறியின் வகைகளுக்கு எடுத்துக்காட்டுகளைப் பல பாடங்களினின்றும் திரட்டி எழுதுக.

---

2. நமது உணவும் உடையும்

மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்கள் மூன்று. முதலாவது காற்று; இரண்டாவது நீர்; மூன்றாவது உணவு. இவற்றுள் முதல் இரண்டாகிய காற்றும், நீரும் மக்களின் முயற்சியின்றியே இயற்கையில் வேண்டிய அளவு கிடைக்கின்றன. உணவு, மனிதனுடைய முயற்சியினாலும் இயற்கையின் உதவியினாலும் கிடைக்கிறது. இவ்வுணவு, போதிய அளவு கிடைக்காவிட்டாலும், தக்கதாக இல்லாவிட்டாலும் உடல் வளர்ச்சி குன்றி நோயுற நேரும். உணவு உட்கொண்டு, உடலை நன்கு வளர்ப்பதால் மட்டும் மனிதன் மனிதனாக வாழமுடிவதில்லை. மனிதனாக வாழவும், தட்பம் வெப்பம் முதலியவற்றால் இன்னல் நேராதபடி உடம்பைக் காக்கவும் உடை இன்றியமையாதது. எனவே, மனிதன் நோயின்றி வாழ உணவும், நாகரிகத்தோடு நலமாக வாழ உடையும் வேண்டப் படுவனவாகும்.

இதனாலேயே தான், தொழில்கள் பலவற்றுள்ளும், மக்களுக்கு இன்றியமையாத உணவைத்தரும் பயிர்த் தொழிலையும், உடையளிக்கும் நெசவுத் தொழிலையும் தொழில்கள் யாவற்றினும் சிறந்தனவாகப் பெரியோர் கருதினர். இந்தக் கருத்தினாலே தான் நமது "நாட்டுக்" கவி பாரதியாரும் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று பாடினார். மேலும், நமது தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம், தொழுதுண்டு பின்செல்பவர்" என்று உழவுத் தொழிலைச் சிறப்பித்துத் தமது நூலில் கூறினார், மேலும். ஆடை நெய்யும் தொழிலைத் தமது தொழிலாகவும், அவர் மேற்கொண்டார்.

மக்களுக்கு மிகமிக இன்றியமையாதது உணவாம் என்பதை உணர்ந்த நம் முன்னோர்கள் மற்றவர்களுக்கு அதிலும் ஏழைகளுக்கு உணவளிப்பதைச் சிறந்த அறமாகக் கருதி வந்தனர். இவ்வுண்மையை "உணவினால் ஆகிய உடலுக்கு உணவு இன்றியமையாதது, இவ்வுணவை மற்றவர்களுக்குக் கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தவர் ஆவார்" என்று உரைத்துள்ளனர். இக்கருத்து "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று நமது பண்டைத் தமிழ் நூலாகிய புறநானூற்றில் வருகிறது.

இவ்வாறு உணவு அளிக்கும் பொது நிலையங்களுக்கு அக்காலத்தில் "அறக்கூழ்ச் சாலை" என்று பெயர் வழங்கிற்று. இக்காலத்தில் இத்தகைய இடங்கள் "அன்ன சத்திரம்" என்று வழங்கப்படும்.

அடுத்தது உடை. இது, மக்கள் மானத்தோடு வாழ்வதற்கு உதவுகிறது. அன்றியும் இது, இயற்கையின் தட்ப வெப்பநிலை மாறுபாடுகளால் ஊறு நேராதபடி நம்மைக் காத்துக் கொள்ள உதவுகிறது. கோடையில் வெப்பம் அதிகமாக இருக்கும். கார்காலத்தில் மழை மிகவும் பெய்யும். பனிக் காலத்தில் பனி கொட்டும். அவ்வக்காலங்களில் மனிதன் வெயிலாலும், மழையாலும், பனியாலும் துன்பமுறுவான். இத்துன்பத்தைத் தடுக்க உடையே அவ்வப்போது மனிதனுக்கு உதவுகிறது. குளிர் மிகுந்த நாடுகளில் வாழும் மக்களுக்கு, குளிரால் துன்பம் ஏற்படாதிருக்கவும், குளிரைப் பொறுப்பதற்குப் போதிய வெப்பமுண்டாக்கவும் ஏற்றஆடைகள் வேண்டும். அத்தகைய ஆடைகள் விலங்குகளின் மயிரினால் செய்யப்பட்டனவாயிருக்கும். கோடைக்காலத்தில் சூட்டினை அதிகமாக மேலே படாமல் காக்கவும், வியர்வை நீரை உறிஞ்சவும் ஏற்ற ஆடைகள் வேண்டும். இத்தகைய ஆடைகள் பருத்தி நூலினால் செய்யப்பட்டனவாயிருக்கும். பருத்தி ஆடைகளைவிட, மயிரினாலாகிய "கம்பளி" ஆடைகள் விலை உயர்ந்தவை. பருத்தியாடை குறைந்த விலைக்குக் கிடைக்கும். இவையன்றியும் பட்டுப் பூச்சியினால் உண்டாக்கப்படும் பட்டு

நூலால் ஆகிய உடையும் உண்டு. இவ்வாறு பல்வேறு வகையான ஆடைகளும் நமது நாட்டில் முற்காலத்தில் நிறைந்திருந்தன இவற்றைச் செய்யவல்ல தொழிலாளர்களும் நிறைந்திருந்தார்கள்.

நமது நாடு வெப்ப நாடாக உள்ளமையால் இங்குள்ளோருக்குப் பெரும்பாலும் பருத்தி ஆடையே சிறந்ததாகும் அதற்குரிய பருத்தி நமது நாட்டில் மிகுதியாக விளைகிறது. நாம் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தபோது நமது நாட்டுப் பருத்தியைப் பிற நாடுகளுக்கு அனுப்பி, அங்கிருந்து ஆடையாகப் பெற்று வாழ்ந்தோம். இன்று நாம் விடுதலை யடைந்தவர்களாக இருக்கிறோம். இனி, நமக்கு வேண்டிய பொருள்களை நாமே செய்து கொள்ள வேண்டும். இந்நாளில் இந்தியாவில் பல இடங்களில் நெசவு ஆலைகள் இருக்கின்றன. வட இந்தியாவில் ஆமதாபாத், பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் பல நெசவு ஆலைகள் உள்ளன. தமிழ் நாட்டில் கோவை, மதுரை முதலிய நகர்களில் பல நெசவு ஆலைகள் உள்ளன. இவை யெல்லாம் உற்பத்தி செய்யும் ஆடைகள் நமது இந்தியாவின் தேவைக்குப் போதா. மேலும் மேலும் ஆலைகளை ஏற்படுத்த வேண்டும். நம் நாட்டிற்கு வேண்டிய உணவைப் பற்றிய சில விதிகளைக் கவனிப்போம்.

உணவு தூய்மையானதாய் இருத்தல் வேண்டும். உடல் நலத்திற்கு ஏற்றதாகவும், உடம்பிற்கு உரம் தருவதாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய

உணவை உண்ணும்பொழுது நாம் கைக்கொள்ள வேண்டிய விதிகளைத் திருவள்ளுவர் "ஒருவன் உண்ணும் உணவு, அவனது அளவிற்கு மிகுதியாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும் உடலுக்கு நோய் உண்டாகும்;" "நன்றாகப் பசித்தபின்பே புசிக்க வேண்டும்" என்றெல்லாம் கூறுகின்றார். மேலும் அவர், "உண்டவுணவு செரித்தமையை நன்கு உணர்ந்து பின்னர் வேண்டிய அளவு உண்ண வேண்டும். குற்றமில்லாத உணவைப் போதிய அளவாக உண்பவர்கள் உடல் நோயுறுவதில்லை. தான் உண்ட உணவு செரித்ததை உணர்ந்து உணவு கொள்பவனுக்கு மருந்து என்பதே வேண்டியதில்லை. பேருண்டி கொள்வோன் பெரு நோயடைவான்' என்று கூறியுள்ளார். ஆதலின் நாம் நமது நாட்டிற்கும், காலத்திற்கும், உடலுக்கும் ஏற்ற தூய்மையான உணவினை அளவாகச் செவ்வியறிந்து உண்ணல் வேண்டும்.

அண்மையில் முடிவடைந்த உலகப்போரின் காரணமாக மக்களின் இன்றியமையாத அன்றாடத் தேவையான உணவிற்கும் உடைக்கும் பெரிய முட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உணவிற்கும் உடைக்கும் ஒரு நாடு மற்றொரு நாட்டை எதிர்பார்க்கும் நிலைமை நேர்ந்துவிட்டது. இத்தகைய காலத்தில் நாம் நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை நமது நாட்டிலேயே விளைவித்துக் கொள்ளவும், நமக்கு வேண்டிய ஆடையை நமது நாட்டிலேயே நெய்து கொள்ளவும் வேண்டும். உணவுப் பொருள்களை உதவும் பயிர்த்

தொழிலையும், உடை உதவும் நெசவுத் தொழிலையும் பெருக்க அரசாங்கத்தார் பெரிதும் முயன்று வருகிருர்கள். நமது கவி பாரதியார் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்," என்று கூறியதற்கிணங்க, நாமும் இத்தொழில்களில் ஈடுபட்டுழைக்க வேண்டும். அதனுல் நம்நாடு நலமுறும்.

பயிற்சிகள்

1. மக்களுக்கு இன்றியமையாதன யாவை? ஏன்? காரணம் தருக.

2. தொழில்களிற் சிறந்தன எவை? இதுபற்றித் திருவள்ளுவரும் பாரதியாரும் கூறுவது என்ன?

3. உணவு வழங்கல் சிறந்த அறமாகக் கருதப்பட்டது ஏன்?

4. உடை மக்களுக்குத் தேவையாவது எவ்வாறு?

5. குளிர் காலத்திலும் கோடைக் காலத்திலும் மனிதன் எத்தகைய ஆடைகளை அணிய வேண்டும்?

6. நம் நாட்டவர்க்குச் சிறந்த உடை யாது?

7. நம் நாட்டில் எங்கெங்கே நெசவு ஆலைகள் உள்ளன?

8. உணவு உட்கொள்ளும்போது மேற்கொள்ள வேண்டிய விதிகள் யாவை? இது குறித்து வள்ளுவர் கூறியவற்றில் நான்கு கூறுக.

9. உழவுத் தொழிலும் நெசவுத் தொழிலும் இன்றியமையாதன. இதைப் பற்றிப் பதினைந்து வரிகளில் கட்டுரை வரைக.

10. இப்பாடத்தில் வந்துள்ள பழமொழிகளையும் எடுத்துக் காட்டுகளையும் தனியே எடுத்து எழுதுக.

11. கீழே காணும் சொற்றொடர்களை நன்கு விளக்கி அவற்றை அப்பொருளிலேயே வழங்கி, உங்கள் நடையிலேயே, வாக்கியங்களிலே அமைத்துக் காட்டுக:—

முயற்சியின்றி, இன்னல்களை, தட்பவெப்பநிலை, உண்டு களித்திருப்போர், வல்லுநர், விடுதலை, தூய்மையின்மை, உடல்நலம், ஊறுவிளைக்காதது, செரித்தமை, மூட்டுப்பாடு, கலையுணர்வு, ஈடுபட்டு,

12. கீழே இரண்டு வரிசைகளில் சில எழுவாய்களும் பயனிலைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை நன்றாகப் படித்துப் பார்த்து, எந்த எழுவாய்க்கு, எந்தப் பயனிலை பொருந்தும் எனக் கண்டறிந்து, அந்த அந்த

எழுவாயின் எண்களை, அது அதற்கு ஏற்ற பயனிலைகளின் முன் எழுதிப் பொருத்திக் காட்டுக :—

எழுவாய்கள்	பயனிலைகள்
1. மக்களின் கூட்டு வாழ்க்கைக்கு மொழி.	உடையவர்கள்.
2. உழவுக்கும் தொழிலுக்கும்.	தண்ணிலவு பொழியும்.
3. இவ்வாறு பல்வேறு வகையான ஆடைகளும் நமது நாட்டில்.	இன்றியமையாதது.
4. நெய்தல் நிலத்திலே.	கசக்கிக் கட்டு.
5. பண்டைத் தமிழ் மக்கள் சிறந்த அறிவுநுட்பமும் கலையுணர்வும்.	நிறைந்திருந்தன.
6. உடை, மக்கள் மானத்தோடு வாழ்வதற்கு.	வந்தனை செய்வோம்.
7. கந்தையானாலும்.	உதவுகிறது.

3. நல்வினையாளனும் தீவினையாளனும்

(ஒரு கதை)

கங்கையாற்றின் கரையில் அமைந்த ஓர் ஊரில் நல்வினையாளன், தீவினையாளன் என இரு நட்பினர் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் தீவினையாளன், 'யானே கொடியனும் வறியனும் ஆவேன். ஆகையால், இந்நல்வினையாளனை அயல்நாட்டிற்குக் கொண்டு சென்று, இவன் துணையால் பொருள் சேர்த்து இவனையும் ஏமாற்றி நல்வாழ்வு வாழ்வேன் என்று எண்ணினான். மறுநாளே நல்வினையாளனை அழைத்து "நண்ப! அயல்நாடு சென்று அந்நாட்டு மொழி முதலியவற்றை அறியாதவனுடைய வாணாள் வீணாகும். அன்றியும், முதுமையில் தானே தன் செயலுக்கு எண்ணி இரங்குவான். மேலும் சிறுவர் களுக்கு என்ன புதுமைப் பொருள்களையும் கதை களையும் கூற அவனால் கூடும். மக்கள் வேற்று நாடு அடையாவிடில், கல்வி, அறிவு, சிற்பம் முதலியவற்றில் தேர்ச்சியடையார். ஆகவே நாமிருவரும் சென்று பயன் பெற்று வருவோமாக" என்றான்.

நல்வினையாளனும் அதற்கு உடன்பட, இருவ ரும் ஒரு நன்னாளில் புறப்பட்டனர். தீவினையாளன் தான் கருதியவாறு நண்பனின் அரிய குணங்களைப் பயன்படுத்திக்கொண்டு மிகுந்த செல்வம் ஈட்டினான்.

பிறகு இருவரும் ஊர் திரும்ப எண்ணங் கொண்டனர். புறநாடு சென்றவர்களுக்குத் தங்கள் வேலை முடிந்த பிறகு, தம்மூர் மிக அண்மையதாயினும் மிகவும் சேம்மையாகத் தோன்றுவது இயல்பன்றோ! இருவரும் தம்மூர் திரும்பினர். வரும் வழியில் தீவினையாளன், தன் கருத்தை நிறைவேற்றிக் கொள்ள இதுவே தக்க நேரம் எனக் கருதி. "நண்ப! இப்பொருளை யெல்லாம் நாம் ஒருமிக்க எடுத்துச் செல்லுதல் நலமன்று; அயலார் பொறாமை கொள்வர். உறவினரும் தமக்குத் தருமாறு வேண்டுவர். ஆகையால் இவ்விருண்ட காட்டிலேயே மண்ணில் பொருளைப் புதைத்து வைத்துவிட்டுச் சிறிது மட்டும் எடுத்துச் செல்வோம். வேண்டும் பொழுது மறுமுறை வந்து கொஞ்சங் கொஞ்சமாக எடுத்துச் செல்லலாம். அறிஞன் சிறு பொருளையும் பிறர் காணுவாறு காப்பான். செல்வம் என்றால் தவசியின் மனமும் குழையுமன்றோ! இறைச்சி, நீரில் மீன்களாலும், நிலத்தில் நாய்களாலும், வானில் பறவைகளாலும் கவரப்படுவதுபோல், செல்வந்தன் செல்வமும் எங்கும் கவரப்படும்" என்று எடுத்துரைத்தான்.

நல்வினையாளனும் நண்பனுரை கேட்டுத் தெளிந்தான். இருவரும் மட்பானையிற் பொருளை அடக்கஞ் செய்து மண்ணிற் புதைத்துவிட்டு இல்லமடைந்து இன்புற்றிருந்தனர். மறுநாளே தீவினையாளன் கானகஞ் சென்று பொருளை எடுத்துக் கொண்டு குழியை மண்ணால் நிரப்பிவிட்டு வீடு திரும்பினான். சில நாட்கள் கழிந்ததும் நல்வினையாளன்

தீவினையாளனிடம் சென்று, "நண்ப! பொருளின்மையால் யான் மிகவும் துன்புறுகிறேன். காடு சென்று சிறிது பொருள் எடுத்து வருவோம் வா" என்று கூறி அழைத்தான். இருவரும் வனஞ் சென்று குழியைத் தோண்டிப் பார்த்தபொழுது வெறும் பானையே இருந்தது.

தீவினையாளன் வயிற்றிலும் வாயிலும் புடைத்துக்கொண்டு "நல்வினையாளன் எனப் பெயர் கொண்டு தீவினை புரிந்தவன் நீயே. நம் இருவரைத் தவிர வேறு யார் இதை அறிவர். வஞ்சகம் செய்யாமல் எனக்கும் பாதிகொடுத்து விடு. இல்லையேல் அறங் கூறும் அவையத்தில் அறிவித்து உன்னைக் குற்றத்திற்களாக்குவேன்" என்று அச்சுறுத்தினான்.

நல்வினையாளன், கெடுவினையாளனைப் பார்த்து, "இவ்வாறு மொழியாதே யான் நற்செய்கையும் நல்ல எண்ணமும் கொண்டவனல்லவா? இத்தகைய தீச் செயலை நான் ஒருபோதும் செய்யேன். பிறர் செல்வத்தைக் களிமண் கட்டிபோலவும், பிற உயிர்களைத் தன்னுயிர் போலவும் கருதும் பண்பு உடையவன் அல்லவா யான்?" என்று கூறி, உண்மையை உரைத்து வாதாடினான்.

தீவினையாளன், அறம் கூறும் அவையம் சென்று வழக்குத் தொடர்ந்தான். தீர்ப்பாளர் "வழக்கைத் தீர்மானஞ் செய்ய ஓலை, காட்சி, கடவுள் ஆகிய மூன்று சான்றுகளும் ஏற்கப்படுகின்றன. இவற்றுள்

எது உனக்கு உள்ளது'' என்று வினவினர். தீவினையாளன் 'காட்டில் உறையும் கடவுளரே எனக்குச் சான்றுவார்'' என்று பெருமிதத்துடன் கூறினன். தீர்ப்பாளர் முதலியோர் மறுநாள் காலையில் கானகஞ் சென்று கடவுளர் முன்னிலையில் உண்மையை ஆராயவேண்டும் என்று முடிவு செய்தனர்.

இரவு, தீவினையாளன் தனது தந்தையாரிடம் சென்று நல்வினையாளனுக்கும் உரிய செல்வம் எல்லாம் என்னால் களவாடப் பட்டுள்ளது. இதைப் பற்றிய வழக்கும் அறங்கூறும் அவையத்தில் தொடரப் பட்டிருக்கிறது. இதில் நானும் உய்ந்து செல்வமும் நிலைக்கும் பொருட்டு, உமது உதவி பெரிதும் வேண்டியிருக்கிறது'' என்றான்.

தகப்பனாரும், செல்வம் தம்மை விட்டு அகலாமலிருக்க யாது வேண்டினும் செய்ய முன்வருவதாகக் கூறினர். தீவினையாளன், தன் தந்தையை நோக்கி, ''பானை புதைக்கப்பட்டிருந்த இடத்தினருகில் ஒரு பெரிய வன்னிமரம் உண்டு. அதில் பெரிய பொந்து ஒன்று உளது. நாளைக் காலை தீர்ப்பாளர் முதலியோர் அங்கு வருவதற்குள் நீர் அப்பொந்தினுட் புகுந்து மறைந்திருக்க வேண்டும். நான் கடவுளை விளித்து உண்மையைக் கூறும்படி கேட்கும்போது, 'செல்வத்தைக் கவர்ந்த கள்வன் நல்வினையாளனே' என்று நீர் கூறவேண்டும் என்று கூறினன்.

முதல்நாள் குறித்திருந்த வண்ணமே வழக்குக் தொடுத்தோன், தொடரப்பட்டோன், தீர்ப்பாளர்

ஆகிய அனைவரும் வன்னி மரத்தருகில் வந்தனர். தீவினையாளன் உரத்த குரலில், "மக்களின் செயலை ஞாயிறு, திங்கள், காற்று, தீ, வான், நிலம், நீர், தன்னுள்ளம், பகல், இரவு, காலை, மாலை, அறக்கடவுள் ஆகியோர் அறிகின்றனர். ஆகவே, வனக்கடவுளே எங்களுள் கள்வன் யாவன் என்று கூறுவீராக" என்றான்

வன்னிமரப் பொந்தில் இருந்த தீவினையாளனுடைய தகப்பன் "செல்வத்தைக் கவர்ந்த கள்வன் நல்வினையாளன் என்று புனைபெயர் கொண்ட

கொடுவினையாளனே ஆவான்'' என்று வானொலி கூறுவதுபோல் சொன்னான். அனைவரும் கேட்டு வியப்படைந்தனர்; பெயருக்கும் செயலுக்கும் உள்ள வேற்றுமையை எண்ணி நகைத்தனர்; பிறகு, அற நூல்படி விதிக்கத்தக்க தண்டனையை ஆராயலாயி னர். இதற்கிடையில் நல்வினையாளன் தீயுண்ணும் பொருள்களான புல் முதலியவற்றால் வன்னிமரத் தின் அடிப்பாகத்தைச் சுற்றித் தீ மூட்டினான். எரி யும்போது பாதி எரிந்த உடலுடன் பிதுங்கிய கண் ணுடையனாகி இரங்கி அழுதுகொண்டு தீவினையாள னின் தகப்பன் வெளி வந்து இறந்து விழுந்தான்.

இதைக் கண்ட அனைவரும் முன்னினும் பன் மடங்கு வியந்து "இது என்ன'' என்று ஒருவரை யொருவர் வினவினர். நல்வினையாளன் எல்லாச் செய் தியையும் எடுத்துச் சொன்னான். பிறகு அரசியலார் தீவினையாளனை வன்னி மரக்கிளையில் கட்டித் தொங்கவிட்டு ஊசலாட்டினர்; நல்வினையாளனைப் புகழ்ந்தனர். "உபாயமறிந்தவன் அபாயம் நேரிடும் வகையையும் ஆராய வேண்டும்'' என்பது ஆன்றோர் முதுமொழி.

பயிற்சிகள்

1. அயல் நாடு செல்வதன் பயன் யாது?

2. தீவினையாளன் எல்லாச் செல்வமும் தானே அடைவதற்குச் செய்த சூழ்ச்சி யாது?

3. செல்வம் பிறரால் கவரப்படுதற்கு அமைந்த உவமை என்ன?

4. வழக்கைத் தீர்மானிக்கும் சான்றுகள் எவை?

5. மக்களின் செயலை யார் யார் அறிகின்றனர்?

6. இக்கதையால் நீங்கள் அறியும் நீதி என்ன?

7. அண்மை × சேய்மை—எதிர்ச் சொற்கள். பின் வரும் சொற்களுக்கு நேர் எதிர்ச் சொற்கள் கூறுக:

இன்மை, இன்பம், நன்மை.

8. நண்ப—விளி வேற்றுமை. நண்பன் என்னும் சொல் ஈறு கெட்டு வந்தது. இதுபோல் இப்பாடத்தில் வந்துள்ள பிற விளி வேற்றுமைச் சொற்களை எடுத்துக் காட்டுக. அவற்றில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் நன்கு விளக்கி எடுத்துக் கூறுக.

9. ஒருமிக்க, புடைத்துக்கொண்டு, உடன்பட, அண்மையது, சேய்மையது, நிறைவேற்றிக்கொள்ள, அச்சுறுத்தினன், பெருமிதத்துடன், அறங்கூறு அவையம், தீர்ப்பாளர், வான் ஒலி, அற நூல், இவற்றைத் தனித் தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

10. இக்கதையை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.

11. ஏழாம் எட்டாம் பத்திகளை, இருவர் உரையாடுவதுபோல் எழுதிக் காட்டுக

12. நான்—தன்மை ஒருமைப் பெயர்   போனேன்—தன்மை ஒருமை வினைமுற்று.
நாம்—தன்மைப் பன்மைப் பெயர்   போனோம்—தன்மைப் பன்மை வினைமுற்று

இதுபோல இப்பாடத்தில் வந்துள்ள தன்மை ஒருமை தன்மைப் பன்மை வினைமுற்றுக்களை அவற்றின் எழுவாய்களோடு தொகுத்துக் கீழ்க்கண்ட அட்டவணையில் வகைப் படுத்தி எழுதுக;

தன்மை ஒருமைப் பெயர்கள் எழுவாய்கள்.	தன்மை ஒருமை வினைமுற்றுக்கள்.	தன்மைப் பன்மைப் பெயர்கள் (எழுவாய்கள்.)	தன்மை பன்மை வினை முற்றுக்கள்

4. எனக்கு வந்த வாழ்வு

பிள்ளைகளே, நான் சில ஆண்டுகளுக்குமுன் ஓர் ஏழையாக இருந்தேன். இன்றோ, நான் பெரிய பணக்காரனாக இருக்கிறேன். நான் வருந்திப் பொருள் சேர்க்கவில்லை. நான் திடீரெனச் செல்வனானேன். அஃது எதிர்பாராது வந்தது. நீங்கள் அவசரப்பட வேண்டா; அமைதியாக இருங்கள். எனக்குச் செல்வம் வந்த வரலாற்றை ஒரு கதையாகச் சொல்கிறேன், கேளுங்கள். கதையில் வரும் ஆட்களுள் நான் யார் என்பதை நீங்களே முடிவில் கண்டுபிடித்துக் கூறுங்கள், பார்ப்போம்.

சான்றோர் பலர் தோன்றிய தொண்டை நாட்டிலே, காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள மெய்ப்பேடு என்னும் சிற்றூரின் புறத்திலிருந்த வெளி நிலத்தில், ஒரு நாள் மாலைக் காலத்தில், இளைஞர் பலர் சேர்ந்து சிலம்பம் விளையாடிக்கொண்டிருந்தனர். அச்சமயம் அவ்வழியே வந்த அந்தணர் ஒருவர், அவர்கள் பயிற்சித் திறம் கண்டு வியந்து சற்று நேரம் நின்று பார்த்தனர். அப்பால் அவர் இளைஞர் குழாத்தை நெருங்கி, ஒருவரை நோக்கி, "அப்பா, இங்கே வா. உன் பெயர் என்ன?" என்றார். உடனே அவ்விளைஞர் அவரிடம் வந்து மரியாதையுடன், "ஐயா, என் பெயர் அரியநாதன்" என்றார். அந்தணர், "அரியநாதனா? சரி. எங்கே, உனது கையைச் சிறிது காட்டு, பார்க்கலாம்," என, அரியநாதரும் தம் கையை நீட்டினார்.

வேதியர், அரியநாதருடைய கைக்கோடுகளை உற்றுப் பார்த்துவிட்டு, "தம்பீ, நீ நல்ல வருவாய் உடையவன்! உனக்குக் கணக்கு நூல் நன்றாய் வரும்; படைக்கலப் பயிற்சியில் வல்லவனாவாய். உனக்கு அரசுப் பேறு இருக்கிறது. உன் கையில் செல்வக்கோடுகள் உள்ளன. ஒன்று சொல்லுகிறேன், கேள். இவ் வூரை விட்டு நீங்கி விஜய நகர நாட்டிற்குப் போ; அங்கு நல்ல பதவி பெற வழியுண்டு. ஆனால் தம்பீ, இந்த ஏழையை மட்டும் மறந்து விடாதே," என்றார்.

இங்ஙனம் ஐயர் கூறிய அனைத்தையும் அங்கிருந்த மற்ற இளைஞர்களும் சுற்றி நின்று கேட்டுக்கொண்டிருந்தனர். அவர் கூறிய வார்த்தைகளால் அக்கணமே அரியநாதருக்கு ஒருவித உற்சாகமும் ஊக்கமும் உண்டாயின. அவர் மறையவரைப் பார்த்து, "ஐயா! தாங்கள் உரைத்தபடி நடக்குமானால், ஏழையேன் தங்களை மறத்தல் எப்படி இயலும்?" என்றார். எனலும், ஐயர், "சரி, நான் கூறியபடியே நடந்தால் உனது வரும்படியில் நான்கில் ஒரு பங்காவது எனக்குக் கொடுப்பாயா? அப்பொழுது நான் வந்து கேட்டால், அன்பு இருக்குமா?" என்று வினவினர். அரியநாதர், "உண்மையாக அவ்வாறே செய்வேன்," என, ஐயர், "அப்படியானால் இந்த ஏட்டில் எழுதிக்கொடு," என்று சொல்லி, ஓலையும் எழுத்தாணியும் நீட்ட, அரியநாதர் தாம் கூறியவாறே எழுதிக் கைச்சாத்திட்டுக் கொடுத்தார். அந்தணர் அதைப் பெற்றுக்கொண்டு, "தம்பீ, சில ஆண்டுகளின் பின்னர் உனக்கு நல்ல தசை வருகின்றது. அப்பொழுது

அரசுப் பேறு கிடைப்பது உறுதி. ஆகையால், நீ தவறாமல் புறப்பட்டு ராயர் அரசவைக்குச் செல். நான் போய் வருகிறேன்,'' என்று கூறித் தம் வழி ஏகினர்.

அந்தணர் அகன்றபின் அங்கிருந்த இளைஞர் அரியநாதரைப் பரிகாசம் செய்பலாயினர். ஒருவன் "அரசே எனக்கு ஒரு கணக்கப்பிள்ளை வேலை தரவேண்டும்,,' என்றான். மற்றொருவன் "எனக்கொரு மந்திரி வேலை என்றான். இருட்டும் சமயமாகியதால், அவர்கள் விளையாட்டை நிறுத்தி, அரியநாதரைப் பரிகாசம் செய்தவாறே மெல்ல நடந்து தத்தம் இல்லமடைந்தனர்.

அரியநாதர் வீட்டிற்குச் சென்றதும் மாலையில் நடந்தவற்றைத் தம் பெற்றோருக்குக் கூறினர். அது கேட்ட அவருடைய பெற்றோர் வியப்புற்றனர். அரியநாதர் சிறு குழந்தையாய் இருக்கும்போது, ஒரு சமயம் அவரது தாய் அவரைத் தனியே ஒரு பாயில் கிடத்தி வெளியேக, அத்தருணம் கருநாகமொன்று அங்குற்று, அவர் தலைக்கு அருகில் மண்டலமிட்டுத் தன் படத்தை முகத்திற்குமேல் உயர்த்தியிருக்க, திரும்பி வந்த அவருடைய அன்னை, அதனைக் கண்டு வெருண்டு கூவலும், அயலில் இருந்த பலர் ஓடி வந்தனர். இதற்குள் நாகமும் மறைந்தது. இதனை அறிந்தார் பலரும், 'இவன் அரசுப் பதவி அடைவான்,' என்று கூறினர். அரியநாதர் இந்நிகழ்ச்சியைத் தம் தாயார் கூறப் பன்முறை கேட்டிருந்தமையாலும், அந்தணர் குறிப்பித்ததாலும், விஜய நகரத்திற்குச் செல்லவேண்டுமென்ற எண்ணம் அவர் மனத்தில் அது முதல் வேரூன்றலாயிற்று.

அரியநாதர் அன்று முதல கணக்கு நூலை ஊன்றிக் கற்கலானுர்; தமது படைக்கலப் பயிற்சியையும் பெருக்கி வந்தார்; இவற்றுடன் தெலுங்கு மொழியையும் கற்கத் தொடங்கினுர். சிறிது காலமான பின் தம்மை விஜய நகரத்திற்கு அனுப்பி வைக்கும்படி அரியநாதர் தம் தந்தையாரை வேண்ட, அவரும் மைந்தரைப் பிரிந்திருக்க மனமற்றவராயிருந்தும், 'நற்காலம் வருவதாயிருந்தால் நாம் அதைத் தடுப்பானேன்!' என்று கருதியவராய், நன்னுள் தேர்ந்து, அவரை அனுப்பி வைத்தார்.

அரியநாதர் பல நாட்கள் வழி நடந்து விஜய நகரத்தை அடைந்தார். சில நாட்களுக்குப் பின் விஜய நகர நாட்டில் படைத்தலைவராயிருந்த **நாகம நாயகர்** வீட்டில் கணக்கு எழுதும் வேலை அவருக்குக் கிடைத்தது. நாகம நாயகருக்கு **விசுவநாதர்** என்னும் ஒரு குமாரர் இருந்தார். அவரும் அரியநாதரும் ஏறக்குறைய ஒரே வயதினராயிருந்தமையால், இருவரும் நெருங்கிப் பழகிவந்தனர். விசுவநாதர் தேர்ந்த கல்விப் பயிற்சியும், நல்லறிவும், இணையற்ற படைக்கலப் பயிற்சியும் உடையவராய், பெருமிதம், அழகு, ஆள் வினையுடைமை ஆகிய தன்மைகளிலும் நிரம்பி விளங்கினர். அரியநாதரும் ஏறத்தாழ இவற்றில் நிரம்பியவராய் இருந்தமையால், விசுவநாதருக்கு அவரிடம் உள்ளன்பும், மதிப்பும் உண்டாயின. அக்காலத்தில் விஜய நகரப் பேரரசராக விளங்கிய ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் சிறந்த அறிஞர் ஆனதால், நாகம நாயகருடனும், விசுவநாதரோடும் அடிக்கடி அரியநாதர் வரக்கண்டு

அவரைப்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டார். இத ஞல் அரியநாதருக்கு அரசரின் அறிமுகம் ஏற்பட்டது. பிறகு ராயர் அவரைத் தேறுவதற்காக இட்ட சில பணிகளை அரியநாதர் நிறைவேற்றித் தமது திறமையை வெளிப்படுத்தியமையால், ராயருக்கு அவரிடம் பிரியம் உண்டாயிற்று. ராயர் அவருக்குத் தமது அரண்மனை யிலேயே வேலை அளித்தார்.

நாளாவட்டத்தில் ராயருக்கு அரியநாதரிடம் நம்பிக்கையும் அன்பும் வளர்ந்தன. அச்சமயம் கலிங் கத்திலும், இராய்ச்சூரிலும் சிற்றரசர்களாலும் முஸ் லிம்களாலும் கலகங்கள் விளைந்தன. அவற்றை அடக் கச் சென்ற ராயர் அரியநாதரையும் உடன் வரப் பணித் தார். அங்கு நடந்த போர்களில் தமது அறிவையும், சூழ்ச்சி வண்மையையும் காட்ட அரியநாதருக்கு வாய்ப்புக் கிடைத்தது. ராயர் அவரை மெச்சி, ஆலோசனைச் சபையின் உறுப்பினர் பதவியும், சிவிகை யேறும் தகுதியும் வழங்கினர். இதன் பின் அரியநாத ருக்கு விஜயநகரத்தில் திருமணம் நடைபெற்றது.

அக்காலத்தில் பாண்டி நாட்டை ஆண்டுவந்த சந்திர சேகர பாண்டியன் இறக்க, அவனுக்குப் பின் அந் நாட்டுரிமையை ஏற்ற சுந்தரகுமார பாண்டியனும் மரித் தனன். திறமையான ஆட்சி இல்லாததால், இவர்கள் காலத்தில் முளைத்த கலகங்கள் வேரூன்றித் தழைக்க லாயின. அப்பொழுது கிருஷ்ண தேவராயர் விசுவ நாதரைப் பாண்டி நாட்டிற்கு அரசராக்கி, அவருக்குத் துணையாய் இருக்கும்படி அரியநாதரையும் அனுப்பி

வைத்தார். அச்சமயத்தில் **தளவாய்** என்ற பட்டம் அரியநாதருக்கு ராயரால் வழங்கப்பெற்றது. அது முதல் அவர் **தளவாய் அரியநாத முதலியார்** என்று வழங்கப் பெற்றார்.

அரியநாத முதலியார் மதுரைக்குச் சென்றதும் படைத்தலைமை பூண்டு, விரைவில் கலகங்களை ஒடுக்கினார்; அரசியல் நிலையை ஆராய்ந்து, குடிகளின் குறைகளைப் போக்கி, கொள்ளைக் கூட்டத்தாரைச் சிறைசெய்து அடக்கினார். காடுகளை அழித்து ஊர்களை உண்டாக்கினார்; தாமிர பருணி யாற்றின் கரைகளைச் செப்பனிட்டார்; பாண்டி நாட்டை எழுபத்திரண்டு பாளையப்பட்டுக்களாக வகுத்து, நாட்டாட்சியை ஒழுங்குபடுத்தினார். இவர் செய்த ஏற்பாடுகளால் குடிமக்கள் இன்புற்று வாழலானார்கள்.

பலவாண்டுகள் கழிந்தன. ஒரு நாள் விசுவநாதரும் அரியநாதரும் பாளையக்காரர் சூழ மதுரை அரண்மனையில் கொலுவீற்றிருந்தனர். அச் சமயம் நடுத்தர வயதுள்ள வேதியர் ஒருவர், வாயில் காவலர் தடையையும் மீறி, மிக விரைவாய் அவைக்குட் புகுந்து, அரியநாதரை நோக்கி வந்தார். இதைக் கவனித்துக்கொண்டிருந்த அரியநாதர், அவரை நோக்கி, "ஐயா, காவலாளரையும் மீறி நீர் இங்கு வந்ததன் காரணம் என்ன?" என்று வினவினர். அந்தணர் அதற்கு மறுமொழி ஒன்றுங் கூறாமல், "தளவாய் அரியநாத முதலியார் என்பவர் தாங்கள்தாமே?" என்று கேட்க, அரியநாதர், "ஆம்; என் பெயர் அரிய நாதன் என்பதே," என்றார்.

அப்பால் அந்தப் பிராமணர், "அரசே, யான் காண வந்தது தங்களையே. நான் இருப்பது காஞ்சிபுரம்; காசிக்குச் சென்று கல்வி ஆராய்ச்சி செய்து மீண்டவன்; என் தகப்பனாருக்குச் சோதிடத்தில் நல்ல தேர்ச்சியுண்டு. கடந்த கலைமகள் விழாவன்று, யான் பழைய சுவடிகளை எல்லாம் எடுத்துப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கையில் என் தந்தையார் கைப்பட எழுதிய ஓலைச் சீட்டொன்றும், அதோடு 'அரிய நாதன்' என்னும் கையொப்பமுள்ள மற்றோர் ஓலை நறுக்கும் கிடைத்தன. இதோ பாருங்கள்! இதில் உள்ளது தங்கள் கையொப்பந்தானே?" என்று சொல்லியவாறே, ஓர் ஓலை நறுக்கைத் தம் இடுப்பிலிருந்து எடுத்து நீட்டினார். அதனை வாங்கிப் பார்த்ததும், நாற்பதாண்டுகளுக்கு முன்னர்த் தாம் மெய்ப்பேடு என்னும் கிராமத்தில், இளைஞர் பலரோடு கூடிச் சிலம்பம் பழகிக்கொண்டிருந்த சமயத்தில் சோதிடம் கூறிய வேதியர்க்கு எழுதித் தந்தது அது என்பது அவர் நினைவுக்கு வந்தது. உடனே அவர் பொருக்கென எழுந்து, அவ்வேதியரை வணங்கி, தமக்குப் பக்கலில் இருந்த ஓர் உயரிய இருக்கையில் அமரச் செய்து, விசுவநாதரையும் மற்றும் அங்கே இருந்தவர்களையும் நோக்கி மெய்ப்பேடு வரலாறு மெய்யானதை எடுத்துரைத்தார்.

பின்னர், அரியநாதர் அந்த அந்தணரை நோக்கி, 'சுவாமி, இஃது எனது கையொப்பமே. இவ்வுறுதிமொழியை நிறைவேற்ற யான் சித்தமாய் இருக்கிறேன்'' என்றார். இம்மறுமொழி அந்தணர்க்கு அடங்

காத மகிழ்ச்சியைத் தந்தது. அவர், "அரசரே, தங்களைப் போன்ற உண்மையாளர் யார்? என் தந்தையார் வாக்குப் பலித்ததே எனக்குச் சிறந்த நன்கொடையாம். எனக்கு எதுவும் வேண்டா. எங்கள் ஊரில் ஒரு வீடும், வயிறுர உண்பதற்கு ஏற்ற அளவில் கொஞ்சம் நிலமும், மாடு கன்றுகளும் அளித்தால் போதும்," என்ருர். அந்தணரது அவாவின்மையைக் கண்ட அரிய நாதர், அவர் கேட்டதினும் பன்மடங்குக்கு மேல் பரிசில்கள் அளித்து, அவரை வழியனுப்பியதுடன், அதுமுதல் அவரைத் தம் குருவாகவும் கொண்டொழுகி வந்தார்.

மாணவர்களே! அரியநாதருடைய நன்றியைப் பாருங்கள்! நாற்பது ஆண்டுகளின் பின் தாம் பெரிய அரசபதவியில் இருக்கும்போதும், எப்பொழுதோ ஓர் ஏழை வேதியர்க்குத் தாம் எழுதிக் கொடுத்த சீட்டா யிருந்தும், அரியநாதர் அதனை நிறைந்த மனத்துடன் நிறைவேற்றியது மிகவும் போற்றத்தக்கது அன்ருே?

பிள்ளைகளே நான் யார்? சோதிடரா? அரிய நாதரா? சோதிடர் மகனு? விசுவநாத நாயக்கரா? யார்?

பயிற்சிகள்

1. அரியநாதர்க்கு அந்தணர் கூறிய சோதிடக் குறிப்பு யாது?

2. கிருஷ்ண தேவராயர் அன்பிற்கு அரியநாதர் எவ்வாறு உரியவரானர்?

3. அரியநாதர் மதுரைக்கு வந்தது எப்படி ?

4. பாண்டி நாட்டில் அவர் செய்த நன்மைகள் எவை ?

5. அரியநாதர் நன்றியறிவுடையவர் என்பது எதனால் விளங்கும் ?

6. குழாம், மறையவர், அரண்மனை, மண்டலம் பேரரசர் பொருள் கூறுக.

7. பொருக்கென, கைச்சாத்து, வேறுன்றி, அவா இன்மை—வாக்கியங்களில் அமைத்தெழுதுக்

8. ஆரணர், அருங்குணம், சிற்றுயிர், கண்ணிமை, மேலாடை— பிரித்துக் காட்டுக.

---

5. காளத்தி முதலியார்

சென்னைக்கருகில் பல்வளமும் நிரம்பிய 'திருநின்றவூர்' எனப் பெயர் கொண்ட ஓர் ஊர் உண்டு. அவ்வூரின் வனப்பைக்கண்டு அப்பெயரிட்டு அழைத்தனர் போலும்! இக்காலத்தில் அது "தின்னனூர்" என வழங்குகிறது. அப்பதியில் காளத்தி முதலியார் என்ற வள்ளல் ஒருவர் வாழ்ந்து வந்தார். "வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்" என்றவாறு தன் மரபிற்கேற்ப வறியரையும் புலவரையும் அவர் புரந்து வந்தார். வழங்காத நாளைப் பயனற்ற நாளாக எண்ணி வருந்தும் இயல்பினர் என்று அவர் புகழ் எங்கும் பரவியிருக்கிறது.

அவ்வூரிலேயே அந்நாட்டரசரும் வாழ்ந்து வந்தார். அவர் ஒருவருக்கும் உதவும் இயல்பினர் அல்ல. எச்சிற் கையால் காக்கையையும் ஓட்டியறியார். அவ்வூரினரும் பிற ஊரினரும் காளத்தி முதலியாரையே போற்றிப் புகழலாயினர். வண்மைக்குணம் இவரிடமே குடி கொண்டிருந்தது. கேளாமலே குறிப்பறிந்து கொடுக்கும் காளத்தி முதலியாரின் தன்மையை யறிந்து வறியா யாவரும் அவர் இல்லத்தை நாடி வருவர்; வேண்டிய உணவை விரும்பிய நாள்வரை இருந்து உண்டபின் பரிசில் பெற்று வீடு திரும்புவர்.

நாளடைவில் காளத்தி முதலியார் ஏழையானார். இதில் வியப்பொன்றுமில்லை; கொடுத்துக்கொண்டே இருந்தால் பொருட் செல்வம் குறையாமல் இருக்குமா? இறுதியில் அவருக்கு உணவிற்கே வழி இல்லாமற் போயிற்று. சீரும் சிறப்பும் பெற்று, யாரும் தோல்வி யுறும் வண்ணம் வறியர்க்கீந்த வள்ளல் செல்வமிழந்த பின் தம்மூரில் வாழ விரும்பவில்லை; தம் மனைவியும் தாமுமாக வேற்றூர் செல்வதே நலம் எனக் கருதினார். ஒருநாள் நள்ளிரவில் அவ்விருவரும் பிறர் அறியாமல் ஊரை விட்டுப் புறப்பட்டனர்.

எங்கும் காரிருள் கவிந்திருந்தது. இடி இடித்தது. மின்னல் மின்னியது. மழை பெய்வதற்குரிய அறிகுறி கள் தோன்றின. என் செய்வார் வள்ளல்! தங்க இடம் வேண்டுமே என்று தவித்தார். சேய்மையில் ஒரு வீடு புலப்பட்டது. அருகிற் சென்று, சத்திரம் என அறிந்து இராப்பொழுதை அங்குக் கழிக்கலாம் என்று கருதி, ஒரு

பக்கத்தில் தரையில் படுத்தார். அங்கங்கு அமைதி நிலவத் தொடங்கியது. சத்திரத்தில் படுத்துறங்கும் மக்களின் உயிர்ப்பொலி ஒன்றே கேட்டது. காளத்தியார் தம் நிலையை எண்ணி எண்ணி வெறு நிலத்தே புரண்டு கொண்டிருந்தார் அந்த அமைதியிலே, தம் செவிகளில் ஓர் இனிய குரல் வீழ்ந்தது.

அது ஒரு செய்யுள்

"நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல் போல
நாளைக் கிருப்பையோ நல்குரவே"



என்றது அக்குரல். அதைக் கேட்டதும் காளத்தி பாடுபவர் புலவர் என்றும், பசியால் துயருறுகிறார் என்றும்

அறிந்தார். இவர் வறுமையை விளித்துக் கூறுகிறாரே! நாளை அதன் நிலை என்ன ஆகிவிடும்? அதை நீக்க யார் இருக்கிறார்? இருப்பின், அவர் யார்? என்மனம் அவருடைய பெயரை அறிய விரும்புகிறது, என்று எண்ணி அந்தக் குரல் எழுந்த இடம் நோக்கிச் சென்றார். "காளத்தி" என்று பாடுவான் மேலும் சொன்னது காதில் விழுந்தது. அக்குரல் தன் பெயரைச் சொல்வது கேட்டுத் திடுக்கிட்டு, தான் வந்ததுதான் அவனுக்குத் தெரிந்து விட்டதோ என்று ஐயுற்றுப் படுத்திருந்த இடத்திற்கே திரும்பவும் சென்றார். புலவர் செய்யுளின் பிற்பகுதியையும் அப்பொழுது பாடினார். அதாவது,

—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீஎங்கே நானெங்கே
இன்றைக்குச் சற்றே இரு."

எனபது. இப்பகுதியைக் கேட்டதும், "ஆ! புலவர் எவ்வளவு நம்மை நம்பியுள்ளார். நாளை அவர் நம் இருப்பிடம் சென்று, நம்மைத் தேடி ஏமாற்றமடைந்தால் எத்தகைய பாவத்திற்கு நான் ஆளாவேன்? ஐயோ! பசியின் கொடுமையால் வெயிலையும் பொருட்படுத்தாமல் நடந்துவரும் புலவரை வரவேற்று உணவு முதலியவற்றால் விருந்தோம்பல் என் கடமையல்லவா?" என்று எண்ணி அப்பொழுதே இல்லாளையும் எழுப்பிக்கொண்டு இரவு என்றும் கருதாது நடந்து தம் ஊருக்குச் சென்று வீடு சேர்ந்தார். பொழுது புலர்ந்தது. தம் மனைவியின் எஞ்சியிருந்த ஓர் அணியை எடுத்துச் சென்று விற்றுப் பொருள்பெற்று வந்தார். உணவும்

நன்முறையில் சமைக்கப்பட்டது புலவரும் வந்தார். அவருள்ளம் உவக்குப் வண்ணம் உண்டி முதலியன கொடுத்து விருந்து ஓம்பினார் வள்ளல்.

புலவர் தம் நிலையைக்கூறி இரந்தார். புலவர் இரக்கும் வரை காலம் தாழ்த்தல் காளத்தியார் இயல்பன்று. பொருளற்றவராகிய காளத்தி செய்வதறியாது புறக்கடைப் பக்கம் ஓடினார். அருகில் ஒரு புற்று இருந்தது.

இறப்போர்க்கொன்றீயாத இப்புன்மையன் இனி இருப்பதைவிட அரவம் தீண்டி இறப்பதே நலம் எனக் கருதி அதிற் கையை விட்டார். ஆனால், அப்புற்றி

லிருந்த நாகமோ வள்ளல் கையைத் தீண்டாமல் நாக மணிபோல் ஒன்றை நல்கிற்று. வீட்டிற் புகுந்து பேழையினின்றும் எடுத்து வருபவர்போல் இரவலனிடம் அந்த மாணிக்கத்தைத் தந்தார். புலவர் விலை மதிக்க வியலாத மாணிக்கத்தை மாற்றவேண்டி மன்னனிடம் சென்றார். வள்ளலின் வள்ளன்மையைக் கேட்ட மன்னர் மனம் புழுங்கினர்; விரைவில் காளத்தியை வருவித்து, மாணிக்கத்தின் வரலாற்றைக் கேட்டார். கேட்டதும் அரசர் மனமுருகிக் காளத்தியின் அருங் குணத்தை வியந்து பாராட்டினர். அன்று முதல் அவ்வேந்தர் "வறியவர்க்கு ஈதலே செல்வத்தின் பயன்" என்பதை உணர்ந்து, அவ்வாறே பொருள் ஈந்து வாழத் தொடங்கினர்.

பயிற்சிகள்

1. திருநின்ற ஊர் எங்குளது? அதற்கு இப்போது வழங்கும் பெயர் யாது?

2. காளத்தி முதலியாரின் சிறந்த குணங்கள் எவை?

3. மக்கள் காளத்தியைப் புகழ்ந்ததற்கும் வேந்தனைப் போற்றாததற்கும் காரணம் என்ன?

4. காளத்தி தம் ஊரில் எப்பொழுது வாழ விரும்ப வில்லை? ஏன்?

5. முதலியாரின் செவியில் விழுந்த செய்யுள் யாது?

6. செய்யுள் முழுதும் கேட்ட முதலியாரின் மனநிலை என்ன ஆயிற்று?

7. வெளியூர் புறப்பட்ட வள்ளல் ஏன் தம் ஊர் திரும்பினர்?

8. முதலியார் புலவர்க்குக் கொடுத்தது என்ன?

9. மாணிக்கத்தின் வரலாற்றினைக் கேட்ட பிறகு அரசன் மனநிலை எங்ஙனம் மாறியது?

10. வனப்பு, சீரும் சிறப்பும், உயிர்ப்பொலி, அறிகுறிகள், வள்ளன்மை, இரவலன், புரவலன், வள்ளல், விருந்தோம்பல், புன்மையன்- இவற்றை விளக்கி நும் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

11. நான்காவது பத்தியைச் சுருக்கி வரைக.

12. காளத்தி முதலியாரின் வரலாற்றைச் சுருக்கி 15 வரியில் வரைக.

13. கீழேகாணும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களை ஆராய்ந்து, அவற்றை அடியிற் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் வகைப்படுத்தி எழுதுக:—

பொருள்	இடம்	காலம்	சினை	குணம்	தொழில்

(1) குயில் கூவுகிறது. (2) ஓடுதல் நல்ல உடற்பயிற்சி. (3) யானை கருமை நிறம் உடையது. (4) தஞ்சை பெரிய ஊர். (5) இது பனிக்காலம். (6) கண் இல்லாதவன் குருடன்.

இதுபோன்றே இப்பாடத்தில் உள்ள 16 பெயர்ச் சொற்களைப் பொறுக்கி எடுத்து வகைப்படுத்திக் எழுதிக் காட்டுக.

6. இன்ப வெளிச் செலவு

மேட்டூர் அணை

மக்கள் பிறக்குங்கால் ஒரே தன்மையான அறிவுடையராய்ப் பிறக்கின்றனர். பின்னர், சுற்றுச் சார்புகளாலும், கற்றல், கேட்டல், காணலாலும், அவர் தம் அறிவு வளர்ச்சியுறுகிறது. பல பொருள்களைக் கற்று மனத்தில் இருத்திக் கொள்ளுதலைவிட நேரில் அவற்றைக்கண்டு மறவாது மனத்துள் வைப்பது எளிது. கண்ணால் பார்க்கும் பருப்பொருள் மனத்துள் பதிவது போல, அறிவால் உணரும் நுண்பொருள்கள் மிக விரைவில் மனத்துள் பதிவதில்லை. ஆதலின் ஒரு பொருளைப்பற்றி மறவாது மனங்கொள்ளுதற்கு, அதனைப்பற்றி நூல் வாயிலாகக் கற்றலைவிட, நேரே அது இருக்கும் இடம் சென்று கண்ணால் காண்பது சிறந்ததாகும்.

எடுத்துக் காட்டாக, குற்றால நீர்வீழ்ச்சியைப் பற்றிப் படித்தறிந்த ஒருவனையும், நேரே கண்டு மகிழ்ந்த மற்றொருவனையும் எடுத்துக் கொள்வோம். நூலிற் படித்தவன் மலைச்சாரலின் இயல்பும், அதனினின்று அருவி இறங்கி வழியும் காட்சியும், வானளாவ உயர்ந்துள்ள மலையின் மாண்பும், அதன்கண் நீராடுவோர் அடையும் மகிழ்ச்சியும் அறியும் இயல்பினன் ஆவானோ? நேரே காணும் பேறு பெற்றவனன்றோ அதனை முற்றுமுணர்ந்து மகிழ்தற்குரியவன். படித்த வளவிலே எல்லாம் உணரும் தன்மை இருந்தால், நாம் அமெரிக்காவை

யும் ஐரோப்பாவையும், பற்றிய செய்திகளை எல்லாம் படித்தே அறிந்து கொள்ளலாமே! படித்த அளவில் நில்லாது அவைகளைப் போய் நேரிற் காண வேண்டு மென்றன்றோ நம் உள்ளம் அவாவுகின்றது. மஹா பலிபுரம், கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சை முத லான வரலாற்றுத் தொடர்புடைய இடங்களை நேரிற் சென்றுகண்டால் அக்கால மக்களுடைய சிற்பத்திறமை நாகரிகம், வீரம் முதலியவற்றை நன்கு உணரலாம்.

சமயத் தொடர்புடைய, கோயில் என்று சிறப்பித் துக் கூறப்படும் சிதம்பரம், திருவரங்கம் முதலிய இடங் களைச் சென்று பார்ப்பதால் அக்கால மக்களுடைய கட்டட அமைப்புமுறை, ஓவியம், கடவுட் கொள்கை முதலியன புலனாகின்றன. அறிவியல் உதவிகொண்டு கட்டப்பெற்ற மேட்டூர் அணையினைத் தமிழ்நாட்டு மாணவர்கள் யாவரும் சென்று காணுதல் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது. மேட்டூர் அணையைச் சென்று காண்போமானால், அவ்வணையைக் கட்டியதன் நோக்கமும், அதனைக் கட்டுதற்குப் பயன்படுத்திய பெரிய கருவிகளும் கட்டிய வரலாறும் நமக்கு இன்னவெனத் தெரியும்.

மேட்டூர் அணை 1934 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ஆம் தேதி கட்டி முடிக்கப் பெற்றது. 'உணவெனப் படுவது நிலத்தொடு நீரே' என்றார் புறநானூற்றில் ஆதலால் காவிரியாற்று நீரை விளைநிலங்களுக்கும் பாயும் படி செய்தற்கு இவ்வணை கட்டப்பெற்றது. காவிரி குடகு நாட்டில் "சஹ்ய" மலையில் உற்பத்தி

யாகி 500 மைல் தூரம் ஓடிக் கடலிற் கலக்கின்றது. குடகு நாட்டில் பருவ மழை தவறாது பெய்யும். அஃதொழிந்த இடங்களில் பருவ மழை பொய்ப்பதுமுண்டு. ஆதலால் காவிரி தன்னுடைய முழுப்பலனையுந் தரமுடிவதில்லை. இக்குறையை நீக்குதற் பொருட்டே மேட்டூர் அணையினை அரசியலார் $4\frac{3}{4}$ கோடி ரூபாய் செலவிட்டுக் கட்டி முடித்தனர்.

மேட்டூர் என்பது சேலம், கோயம்புத்தூர் என்னும் இரண்டு மாவட்டங்களும் சேரும் இடம். அதன்



அருகில் காவிரியாறு இரண்டு மலைகளுக்கிடையே ஓடுகிறது. அதன் அகலம் 1100 அடி ஆகும். அந்த இடத்தில் இரண்டு மலைகளையும் எல்லைகளாகக்கொண்டு நடுவில் அணை கட்டப்பட்டிருக்கிறது. இதில் தேக்கப்

படும் நீர், காவிரியாற்றில் சுமார் முப்பத்து மூன்று மைல் தூரம் பரவக் கூடியதாகும். இந்த அணைக்கட்டின் உயரம் கடல் மட்டத்திற்கு மேல் எண்ணூறு அடியாகும். இதன் அகலம் இருபதரை அடி. அணைக்கட்டின் நீளம் ஒரு மைல் இருபது அடியாகும்.

இந்த அணை கட்டுவதற்கு ஆகுஞ் செலவைப்பற்றியும் மற்றக் கருவிகளைப்பற்றியும் ஒரு திட்டத்தைக் கர்னல் எல்லிஸ் என்னும் கட்டடப் புலவர் அரசாங்கத்தாருக்கு வரைந்து கொடுத்தார். இவ்வணை கட்டுவதற்குப் புதிய புதிய கருவிகள் இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்டன. அணை கட்டி முடிய ஆறு ஆண்டுகள் ஆயின.

இந்த அணையின் அமைப்பைப்பற்றி ஆராய்வோம். அணையில் மூன்று வகையான மதகுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அணையின் உயரம் கடல் மட்டத்திற்கு மேல் 790 அடிக்கு மேல் இருப்பதால், மூன்ருவது மதகு கடல் மட்டத்திற்கு 770 அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய பயன் யாதெனின், மிகுதியான நீர்ப் பெருக்கம் காவிரியில் ஏற்படுமாளுல், அக்காலங்களில் இக்கதவுகளைத் திறந்துவிட்டு அந்த மிகுதியான நீரை வழிந்துபோக விடுவதேயாகும். தேக்கத்தில் தண்ணீர் 770 அடிக்குக் குறைந்து 620 அடிக்குமேல் இருந்தால், இரண்டாவது மதகைத் திறந்து தஞ்சை விளை நிலங்களுக்குத் தண்ணீர் பாயுமாறு செய்யலாம். 720 அடிக்குக் கீழே தண்ணீர் குறைந்துபோய் விடுமாளுல், நிலங்களுக்குத் தண்ணீர் பாயும்படி செய்ய

மற்றொரு வரிசை மதகுகளால் இயலுகிறது. இவ்வரிசை கடல் மட்டத்திற்கு 690 அடி உயரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் சாதாரண காலங்களில் இதன் பயனை நாடுவது வேண்டியிருக்காது என்று கூறுகிறார்கள்.

மேட்டூர் அணை உலகத்தில் இதுவரை கட்டப்பட்டிருக்கும் எல்லா அணைகளைக் காட்டிலும் மிகுதியான தண்ணீரைத் தேக்கக் கூடியது. இதைக் கட்டி முடிக்க $4\frac{3}{4}$ கோடி ரூபாய் செலவாயிற்று. அன்றியும் இதுவரையில் உலகில் எங்கும் உபயோகிக்கப்படாத கருவிகள் இதற்காக உபயோகிக்கப்பட்டன. இந்தத் தேக்கம் 10 லட்சம் கன அடி நீரைச் சேமித்து வைப்பதுடன் நீரோட்டத்தில் மின்சார ஆற்றலையும் உண்டாக்க வசதியளிப்பதாயும் இருக்கிறது. மேற்கூறப்பட்ட மதகுகள் எல்லாம் மின்சார ஆற்றலினால் வேலை செய்கின்றன.

மேட்டூர் அணையினால் உண்டாகும் பலன்கள் பல. பட்டு, பருத்தி நூல் ஆலைகளுக்கும் காகிதம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கும் மேட்டூர் ஏற்ற இடம் ஆதலால் மின்சாரம் இவ்வணையிலேயே உற்பத்தி செய்து தொழிற்சாலைகளை நடத்தப் பயன்படுத்தப்பட்டால் மிக்க பலனை அடையலாம்.

பயிற்சிகள்

1. கண்ணால் கண்டு அறிதல் ஏன் சிறந்ததாகக் கருதப்படுகிறது?

2. மேட்டூர் அணை எங்குளது? அதன் அமைப்பைக் கூறுக?

3. அது கட்டப்பட்டதன் காரணம் என்ன?

4. இந்த அணைக்குத் திட்டம் வகுத்தவர் யார்? இதில் எத்தனை வகையான மதகுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன? அவற்றின் பயன் யாது?

5. இவ்வணையால் விளையும் நன்மைகள் யாவை?

6. நீர்வீழ்ச்சி, மலைச்சாரல், வானளாவ, வரலாற்றுத் தொடர்பு, சமயத் தொடர்பு, நீர்த்தேக்கம், மாவட்டம், நீரோட்டம்: இவற்றை அமைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

7. இன்ப வெளிச் செலவில் நீ கண்ட வேறோர் இடத்தைக் குறித்துப் பதினைந்து வரிகளுக்குள் ஒரு கட்டுரை எழுதுக.

7. குதிரை பிடிக்கத் தூண்டில் போட்டது

"அறிவற்ற குரு"

ஓர் ஊரில் "அறிவற்ற குரு" என்று பலரால் அழைக்கப்பெற்ற குரு ஒருவர் இருந்தார். அவர் மடம் ஒன்றில் வாழ்ந்து வந்தார். மடத்தில் மட்டி, மடையன் பேதை, மிலேச்சன், மூடன் என்று புகழ் பெற்ற ஐவர் மாணக்கர் ஆசிரியர் ஏவிய பணி செய்து கொண்டிருந்தனர். ஒருநாள் நாடு சுற்றி வரும் கருத்துடன் ஆசிரியரும் மாணவரும் புறப்பட்டனர். வழியில் கதிரவனின் வெம்மை தாங்காது அவர்கள் ஒரு குளிர்ந்த சோலையில் தங்கி இளைப்பாறினர். மிலேச்சன் அண்மையில் இருந்த ஏரிக்கு நீரருந்தச் சென்றான். கரையில் ஐயனார் கோவில் இருந்தது. கோயிலின் முன்புறத்தில் வரம் கிடந்தோரால் மண்ணுற் செய்யப்பட்டு வர்ணம் தீட்டிய குதிரை அமைக்கப் பட்டிருந்தது. அம்மண் குதிரையின் நிழல் ஏரியின் தெளிந்த தண்ணீரிற் காணப்பட்டது. தண்ணீர் குடிக்கச் சென்ற மிலேச்சன் அவ்வுருவத்தைக் கண்டு, தண்ணீரில் குதிரை நிற்கின்றது என்று வியப்புற்றான் பிறகு கரை நோக்கியபோது மண் குதிரையைக்கண்டு அதன் நிழலோ என்று ஐயுற்றான். ஆயினும் காற்றினால் அசைய, அதன் நிழலும் அசையத் தலைப் பட்டது. கரைமேல் நிற்கும் குதிரை அசைவில்லாமல்

அதைத் தின்ன எழும்பும், அந்நேரத்தில் பற்றிக் கொள்ளலாம்' என்றான் பின்னொருவன், 'குதிரை கனைப்பதுபோலக் கரைமேலிருந்தபடியே கனைத்தால் குதிரை இனப்பற்றுக் கொண்டு மேலே கிளம்பும், அப்பொழுது தப்பாமல் கை வசப்படுத்திக் கொள்ள லாம்' என்றான்; இன்னுமொருவன், 'எருமை போய் ஏரியில் விழுந்தால் தவளை தானே குதித்தோடும் என்பது போல் எருமைக்கிடாவை ஓட்டிக்கொண்டு போய்த் தண்ணீரில் விட்டால் அது நாலுபக்கமும் சுழன்று திரியும், அதைப் பொறுக்காது குதிரை கரை ஏறி வரும், அத்தருணத்தில் வருத்தமில்லாமல் பிடித்துக் கொள்ளலாம்' என்றான். இவ்வாறு நால்வர் கூறிய சூழ்ச்சிகளையும் ஏற்காமல் மிலேச்சன் மறுத்து 'யான் கூறும் வழியைக் கேளுங்கள்; தூண்டில் போட்டு மீன் பிடிப்பதுபோல், இதையும் பிடித்துக்கரைக்கு இழுக்க வேண்டும்' என்றான். அதற்கு அனைவரும் 'ஆம், ஆம், இது நல்ல வழிதான்' என்று உடன்பட்டனர்.

தங்களுக்குள் ஒருவன் வைத்திருந்த கருக்கரி வாளைத் தூண்டில் முள்ளாகவும், வழியில் உண்ப தற்குத் தாங்கள் கொண்டுவந்திருந்த கட்டுச் சோற் றினைத் தூண்டில் இரையாகவும், ஆசிரியர் தலையில் கட்டியிருந்த தலைப்பாகையைத் தூண்டிற் கயிறாகவும், அவர் கையிலே பிடிக்கிற பித்தளைப் பூண் கட்டிய தடியைத் தூண்டிற் கோலாகவும் ஆயத்தப் படுத்தி, தண்ணீருக்குள் குதிரை காண்கிற இடத்தில் எறிந்தார் கள். அது தொப்பென்று விழ, விசையுடன் மிகவும் தண்ணீர் அலைப்புண்டதால், அங்கே தோன்றிய

குதிரையும் துள்ளி எழுந்து நெளித்துக் குதித்துக் கிளம்பியதுபோல் காணப்பட்டதாக எல்லோரும் அச்சமடைந்து ஓடினர்.

தடியைப் பிடித்திருந்த ஒருவன் மாத்திரம் அஞ்சாமலும் அப்புறம் நீங்காமலும் அங்கேயே நின்றான். ஏரியின் அலை ஓய்ந்தபின்பு அதிலுள்ள பெரிய மீன்கள் மெள்ள மெள்ள அணுகிக் கட்டுச்சோற்று மூட்டையைக் கடித்து இழுத்ததைக் கண்டு அவன் மற்றவர்களை கைக்குறிப்பினாலேயே விளித்து 'குதிரை இப்பொழுதுதான் இரையைக் கடிக்கிறது' என்றான். சிறிது நேரம் சென்றபிறகு தலைப்பாகையை இழுக்க, துணியும் சோறும் இல்லாமையால் கருக்கரிவாள் அந்த முளைத்திருந்த ஏரிக் கோரையில் மாட்டிக் கொண்டது. அவன் அது குதிரை வாயில் மாட்டிக்கொண்டதாக நினைத்துக் குதிரை வாயில் தூண்டில் மாட்டிக் கொண்டபோதே குதிரை நம்முடையதாய் விட்டதென்று களிப்புடன் கூப்பிட, அனைவரும் கூடி வந்து, தலைப்பாகையைப் பிடித்திழுக்க, பாகை பழையதாகையால் அற்றுப்போய் விட்டது. எல்லோரும் ஒரு மிக்க விழுந்தனர்.

இவ்வாறு அவர்கள் விழுந்த நேரத்தில் ஒரு வழிப்போக்கன் அவ்வழியே வந்து, 'இது என்ன' என்று வினவ, எல்லாவற்றையும் ஒழுங்காகச் சொன்னார்கள். அதுகேட்ட அவன் இவர்கள் அறியாமையை உணர்ந்து கரைமீது இருந்த குதிரையை ஆடையால் மறைக்க நீரில் தோன்றிய குதிரை மறைந்தது. அதை அவர்களுக்குக் காட்டி அந்த மயக்கத்தை நீக்கினான்.

அப்போதவர்கள் தங்கள் குருவை அவனுக்குக் காட்டி, 'ஐயா, எங்கள் ஆசிரியர் மிகுந்த முதுமையை அடைந்துள்ளார். நடந்து செல்ல வலிமையற்றவர். ஆகவே ஏறிச் செல்வதற்குக் குதிரை மிகவும் தேவையா யிருக்கிறது. அது கொள்ளுதற்குப் போதுமான செல்வம் இன்மையினாலே, மலிவாக அதன் முட்டை வாங்கினோம்; அஃது உடைந்துவிட்டது; பின்பு வாடகை மாடு வைத்து அதன் பொருட்டு அல்லற் பட்டோம். 'இப்பொழுது இப்படியாயிற்று' என்று விவரமாக அவனுக்குக் கூறினார்கள். அவன் இவர்கள் பேதையர், வஞ்சமறியாதவர், நன்மனிதர் என்று, மனம் இரங்கி 'என்னிடத்தில் ஒரு நொண்டிக் குதிரை இருக்கிறது. அது உங்கள் வழிப் பயணத்துக்கு உதவும். அதற்காக நீங்கள் பொருள் கொடுக்கத் தேவையில்லை. நான் விலையின்றித் தருகிறேன். என்னூருக்கு வாருங்கள்' என்று அழைத்துப் போனான்.

பயிற்சிகள்

1. கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் வரைக ;—

வெம்மை, அண்மை, அறியாமை, புதுமை, பேதை, இன்மை, வலிமையற்றவர்.

2. கீழ்வரும் சொற்றொடர்களை விளக்கி, ஒவ்வொன்றையும் உங்கள் வாக்கியங்களில் வைத்து எழுதுக.

கைப்பற்றல், இளைப்பாறுதல், இனப்பற்று, அலைப் புண்டது, தலைப்பாகை, வழிப்பயணம்.

3. தண்ணீரில் கண்ட குதிரையைப் பிடிக்க மாணாக்கர் நால்வர் கூறிய வழிகள் எவை?

4. மிலேச்சன் தண்ணீரில் கண்ட குதிரையைப் பிடிக்கக் கூறிய வழியை உங்கள் நடையிலே 10 வரியில் எழுதுக.

5 இப்பாடத்தில் 3-ஆம் பத்தியில் வரும் கருத்தை உரையாடல் முறையில் வரைக.

6. அறிவற்ற குருவின் மாணாக்கர்கள் யாவர்?

7. மிலேச்சன் எதை உண்மைக் குதிரை என்று கருதினான்?

8. குதிரையை வெளியேற்ற மாணாக்கர்கள் கூறிய யுக்தி என்ன?

9. குதிரை வாயில் தூண்டில் மாட்டிக் கொண்டு விட்டது என்று மாணாக்கர்கள் எதனை நினைத்தார்கள்?

10. வழிப்போக்கன், மாணவர்களின் அறியாமை மயக்கத்தை எவ்வாறு நீக்கினான்?

11. இதில் உள்ள நகைச்சுவையை இரு எடுத்துக் காட்டுகளால் விளக்குக.

8. வானொலி

மிகமிகப் பழங்காலத்தில் மக்கள் காய் கனி களைப் பச்சையாகவே உண்டு, காடுகளில் அலைந்து திரிந்து வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அவர் களுடைய அறிவு வளர வளர வாழ்க்கையை இனி மையுடையதாக நடத்துதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொண்டார்கள். அறிவு முதிர்ச்சியாலும் நாகரிகப்போக்காலும், புதுப்புது முறையில் தமக்கு வேண்டியவற்றைச் செய்துகொள்ளத் தொடங்கினார் கள் இதனாலேதான் கால்நடையாக ஒரூரிலிருந்து மற்றோர் ஊருக்குச் சென்று கொண்டிருந்த செலவு தரையிலும், தண்ணீரிலும் பலப்பல மாறுதல்களும் முன்னேற்றங்களும் அடைந்து சிறந்து விளங்குகின் றது. அதுவன்றியும் விண்ணிலும் நினைத்த வண்ணம் செல்லும் அளவு முன்னேற்றமடைந்துள்ளது. இவ் வாறு மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறை யிலும், பலப்பல வசதிகள் வியக்கத்தக்க முறையில் தோன்றியுள்ளன. இங்ஙனம் தோன்றி மக்களுக் குப் பெரிதும் உதவிபுரியும் சிறந்த கருவிகள் பலவற் றுள் வானொலியும் ஒன்றாகும்.

வானொலி என்பது, நெடுந்தொலைவிற்கு அப்பா லிருந்து ஒருவன் பாடும் பாட்டையோ, பேசும் பேச் சையோ, மற்றொருவன் கேட்பதற்கு அமைக்கப் பட்ட ஒரு கருவியாகும். சிறு பிள்ளைகள் நீண்ட நூலின் இரு முனைகளில் அட்டைப் பெட்டியைப் பொருத்தி ஒன்றில் ஒருவன் பேச, மற்றொருவன் அதன் வழியாய்க் கேட்பதைப் பார்த்திருப்பீர்கள். அதைப் போலவே ஓரிடத்திலிருந்து, மின்சாரத்தின் உதவியால் கம்பி வழியாகச் செய்திகளை அனுப்பி வந்தார்கள். அதன் பலனே இவ்வானொலியாகும்

அமைதியான ஒரு நீர் நிலையில் ஒரு கல்லைப் போட்டால், அங்கிருந்து அலைகள் தோன்றி வட்ட

MADURA TAMIL SANGAM

மாகச் சுற்றிலும் அகன்று பரவியவண்ணமே சென்று கரையை அடைவதைப் பார்க்கலாம். இது போலவே நாம் உண்டாக்கும் ஒலியும் வான வெளியில் அலைகளாக நாலா பக்கமும் செல்கின்றது. தொலைவு அதிகமானால் நமது காதுகள் இந்த அலைகளை ஏற்றுப் பொருளை உணர்ந்து கொள்ள முடியாது. ஆகவே, நாம் பேசும்பொழுது உண்டாகும்

ஒலி அலையை, கருவிகளின் மூலம், மின்சார அலைகளாக மாற்றி வானவெளியில் அனுப்புகிறார்கள். அவ்வலை வானவெளி எங்கும் பரவுகிறது. இவ்வாறு செல்லும் அலைகளை வேண்டிய இடத்தில் மின்சாரக் கருவியினால் இழுத்து அவற்றை ஒலி அலைகளாக மாற்றி, பாட்டையோ பேச்சையோ கேட்கிறார்கள். **இதற்கு ஒலி பரப்புதல்** என்று பெயர். வானத்தில் வரும் செய்திகளை ஏற்று நமக்குக் கொடுக்கும் கருவிக்கு **வானொலிப்பெட்டி** (ரேடியோ) என்று பெயர்.

6396

மிகப் பயன் அளிக்கும் சிறந்த இந்தக் கருவியை இத்தாலி நாட்டு அறிஞரான மார்க்கோனி என்பவர் முதன் முதலில் கண்டு பிடித்தார். பிறகு பலர் அந்தத் துறையில் முயன்று இக்கருவியைப் பல வகையில் செப்பஞ் செய்தார்கள். பல இடங்களி லிருந்து செய்திகளையும் பிறவற்றையும் ஒலி பரப்பும் பொழுது, தமக்கு வேண்டிய இடத்திலிருந்து வரும் செய்திகளையும் பிறவற்றையும் கேட்டு மகிழ்வதற்கு ஏற்ற முறைகளை எல்லாம் சோதனை செய்தார்கள்.

இப்போது ஒரே வானொலிப் பெட்டியிலேயே உலகில் பல இடங்களிலிருந்து பரப்பப்படும் நிகழ்ச் சிகளில் நாம் விரும்பும் எதனை வேண்டுமானாலும் கேட்டு இன்புறலாம். சிறந்த இந்தக் கருவியைக் கண்டு பிடித்து, மக்கள் இனத்திற்கு மாபெருந் தொண்டு செய்த மார்க்கோனிக்கு உலகிலேயே உயர்ந்த பரிசாகிய நோபெல் பரிசு வழங்கப்பட்டது.

வானொலி மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளைச் செய்கின்றது. முன்னாளில் ஓரிடத்திலிருந்து செய்தி கள் மற்றோரிடத்திற்குச் செல்லப் பல நாட்கள் செல்லும். அன்றியும், பெருங் கடல்களுக்கு அப் பாலுள்ள நாடுகள், தீவுகள் முதலியவற்றிலிருந்து செய்திகளை எளிதிலும், விரைவிலும் அறிந்து கொள்ள இயலாது. வானொலியின் வாயிலாக லண்டன், நியூயார்க்போன்ற, பல்லாயிரக்கணக்கான கற்களுக்கு அப்பாலுள்ள இடத்தின் செய்திகளையும் உடனுக்குடன், நேரில் கேட்பது போல் அறிந்து கொள்ளுகிறோம், இக்கருவி இல்லாவிடில், காந்தியடி களின் முடிவு கண்டு உலகம் கதறிக் கண்ணீர் வடித் ததை நாம் உடனேயே எவ்வாறு அறிவோம்? வானொலி, உலக மக்களை ஒன்று சேர்க்கின்றது; இடத்தால் இடையிட்டவர்களாயினும் செய்திகளி

னால் அவர்களை நெருங்கியுள்ளவர்களாக்குகின்றது. ஒவ்வொரு நாட்டினுடைய கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை உணர்த்துவதால் "அனைத்துலகத் தொடர்பு" உண்டாகிறது.

மார்க்கோனி

மேலும், வானொலியின் வாயிலாகச் செய்திகளையன்றி இசை, இயல், நாடகம் முதலியவற்றையும் அறியலாம். ஒலிபரப்புவதால், அவ்வத்துறையிலுள்ளவர்கள் பெரும் பயனடைகிறார்கள். இசையில் விருப்பமுள்ளவர்கள் இசையமுதைப் பருகலாம். இலக்கியத்தில் விருப்பமுள்ளவர்கள் அவ்வின்பத்தை அடையலாம். அரசியலில் விருப்பமுள்ள

வர்கள் அரசியல் அறிவைப் பெறலாம். தொழில் முறைகளைப் பற்றிய உண்மைகளை அறிந்து அவ்வறிவினை அடையலாம். மாணவர்களுக்கென ஒலி பரப்பப் படுவதால் தங்கள் பாடங்களைப் பற்றியும், தங்களுக்கு வேண்டியவற்றைப் பற்றியும் அவர்கள் அறிந்து கொள்ளலாம். அறிவினாலும் உடலினாலும் உழைத்து வேலைகளைச் செய்து களைப்படைந்திருக்கும் மக்களுக்குப் புத்துணர்ச்சியும், புதுமகிழ்வும் தந்து ஊக்கமுறச் செய்கின்றது வானொலி.

கடந்த உலகப்போரில் இவ்வானொலி புரிந்த தொண்டு மிக மிகப் பெரிதாகும் அப்போதைக் கப்போது செய்திகளை மக்களுக்குணர்த்திப் போர் வீரர்களுக்கு ஊக்கத்தையும் உணர்ச்சியையும் ஊட்டியது வானொலியேயாகும். மலைகளிலும் காடுகளிலும், பாலை நிலங்களிலும் தங்கிய படை வீரர்கள் செய்தியறிந்து, உதவிபெறுவதற்கு இக்கருவியே தக்க சாதனமாகவிருந்தது. அதுபோலவே, கடலில் செல்லும் போதும் அங்கு இடையூறு வந்த காலத்திலும் போர்வீரர்க்கு உதவியளித்ததும் இக்கருவியேயாகும். நெடுந்தொலைவில் இருந்து வானொலியால் பாட்டு, பேச்சு முதலியனவற்றைப் போர் வீரர்கள் கேட்க முடிந்தது.

மனிதனுடைய அறிவும் தேவையும் இதனோடு நின்று விடவில்லை. இதற்கு மேலும் சென்று தொலைவில் பாடும் பாட்டைக் கேட்பதோடு, பாடுவோரையுங் காண விரும்பியது. அதற்கான முயற்சியில் அறி

ஞர்கள் இறங்கினர். அதிலும் வெற்றி கண்டுள்ளனர். அதன் மூலம் பாட்டையோ பேச்சையோ கேட்பதோடு, பாடுவோர் பேசுவோரையும் காண முடியும். இந்த அமைப்பிற்கு ஆங்கிலத்தில் "டெலிவிஷன்" என்று பெயர். இஃது உலகில் இன்னும் நன்கு பரவவில்லை.

முதன் முதலில் இந்தியாவில் வானொலி நிலையம் பம்பாயில் அமைக்கப்பட்டது. இப்பொழுது இந்தியாவில் டெல்லி, கல்கத்தா முதலான பல இடங்களிலும் உள்ளன. தமிழ் நாட்டில் சென்னையிலும், திருச்



சியிலும் வானொலி நிலையங்கள் இருக்கின்றன. மேலும் விஜயவாடாவிலும், திருவாங்கூர், மைசூர் முதலிய நாடுகளிலும் வானொலி நிலையங்கள் உள்ளன.

படத்தில் காட்டியிருக்கும் "வானொலி" பரப்பும் கருவியையும், அங்கு இன்னிசை கேட்கக் கூடியிருக்கும் மக்களையும் பாருங்கள். அதுதான் சென்னைத் திருவல்லிக்கேணிக் கடற்கரை. சென்னையில் எழும்பூரிலுள்ள 'ஈஸ்ட் நூக்' என்னும் கட்டடத்தில் நாள் தோறும் மாலையில் இன்னிசை அரங்கு முதலியன நடத்துகின்றனர். அங்கு நாற்புறமும் நன்கு மூடப் பெற்ற அறை ஒன்றில் ஒலியை ஏற்று வெளியனுப்பும் கருவியொன்று வைக்கப்பட்டுள்ளது. பாடுவோர் அதன் எதிரில் இருந்து பாடுவர். அக்கருவி அந்த ஒலியை ஏற்று வெளியில் அனுப்பும். அங்ஙனம் வெளிப்படும் ஒலியை இழுத்துப் பன்மடங்கு மிகுதிப் படுத்தித் திரும்பவும் மககள் கேட்குமாறு வெளியனுப்பும் கருவிகள் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் உள்ள மீன் காட்சிச்சாலைக்குப் பக்கத்திலும், இன்னும் பல்வேறு பொது இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நீங்கள் படத்தில் காண்பது அக்கருவியே ஆகும். அதைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் மக்கள் அமர்ந்திருப்பதைப் பாருங்கள். இந்த ஏற்பாட்டால், பொது மக்களுக்கு இருவித உதவிகள் வாய்ந்துள்ளன. நாள் முழுவதும் வீடுகளிலேயே அடைந்து கிடந்து வீட்டு வேலைகளைச் செய்யும் பெண்டிரும், அலுவல் அகங்களிலும் தொழிற்சாலைகளிலும் உழைக்கும் ஆடவரும் மாலைக் காலத்தில் இந்த வானொலியை முன்னிட்டாவது நாள்தோறும் கடற்கரைக்கு வருகின்றனர். உலாவவோ, வேடிக்கை பார்க்கவோ

கடற்கரைக்குச் செல்பவர் அனைவரும் இன்னிசை கேட்பதுடன், கடற்காற்றை உட்கொண்டு உடல் நலமும் பெறுகின்றனர். இன்னிசைப் பிரியர் வந்து கேட்டுத் தம் இசையறிவு வளர்ச்சியடையப் பெறுகின்றனர். மாணவர்களும் மற்றவர்களும் வானொலியை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு முன்னேற முயல வேண்டும்.

பயிற்சிகள்

1. நெடுந்தொலைவு, அமைதியான, செப்பஞ்செய்தல் அறிவியல், முன்னேற—இச்சொல் தொடர்களை விளக்கி, உமது நடையிலேயே வாக்கியங்களில் வைத்து எழுதிக் காட்டுக.

2. தொலைவில் பாடும் பாட்டைக் கேட்பதோடு பாடுவோரையும் காண விரும்பியது— இவ்வாக்கியத்திலுள்ள பெயர்கள் அடைந்துள்ள வேற்றுமைகளையும், அவற்றின் உருபுகளையும் எடுத்தெழுதுக.

3. வானொலி என்றால் என்ன ?

4. நீர் அலையையும் ஒலி அலையையும் ஒப்பிடுக.

5. கடந்த உலகப்போரில் வானொலியால் விளைந்த நன்மைகளைத் தொகுத்துப் பத்து வரிகளிற் கூறுக.

7. வானொலியை முதலில் கண்டு பிடித்தவர் யார்? அவருக்கு எப்பரிசு கிடைத்தது ?

9. மகாபலிபுரம்

இந்தியாவின் தென் பகுதியே நிரம்பக் கோயில் களைப் பெற்று விளங்குகின்றது. 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று சிறப்பித்துக் கூறப்படும் நிலப் பகுதியில் திருமால் திருப்பதிகள் பல உள்ளன. அவற்றுள் மகாபலிபுரம் என்பதும் ஒன்று. பழந்தமிழர் அதனை **மாமல்லபுரம்** என்று வழங்குவர்.

மகாபலிபுரம் சென்னைப்பட்டினத்திற்குத் தென் திசையில் ஏறக்குறைய முப்பது மைல் தொலைவில் கடற்கரையில் உள்ள ஓர் அழகிய சிற்றூர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தைத் தலைநகர மாகக் கொண்டு அரசாண்ட பல்லவனும், **மாமல்லன்** என்னும் மறு பெயருடையவனுமான **முதல் நரசிம்ம வர்மனால்** இங்குள்ள அரிய சிற்பங்கள் அமைக்கப் பெற்றன. அவன் பெயரை யொட்டி மாமல்லபுரம் என்ற பெயர் இதற்கு ஏற்பட்டது. திருக்கடல் மல்லை என்பதும் இதன் மற்றொரு பெயராகும்.

'கண்டவருக்கு விருப்பத்தை ஊட்டும் நிதிக்குவி யலுடன், பெரிய கைகளுடைய ஆண் யானைகளையும் நவமணிக் குவியல்களையும் சுமந்து, அசைந்தாடி வரும் மரக்கலங்கள் இடையறாத துறைமுகத்தை யுடையது' என்று இவ்வூர் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்றுள்ளது. பண்டு சீரும் சிறப்பும் பொருந்தி விளங்கிய இவ்வூர், இப்பொழுது தன்

பெருமை முற்றிலும் குறைந்து மண்மேடிட்டுக் காண்போர் உள்ளம் இரங்கும்படி பாழாகிவிட்டது.

நம் முன்னோரது சிற்பம் அமைக்கும் திறமையைக் கண்டறிய வேண்டுமானால், இந்த மகாபலிபுரத்திலுள்ள "ஏழு கோயில்கள்" (The Seven Pagodas) என்னும் கற்கோவில்களைக் காண்பதே போதும். அவற்றில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் நமது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வூரில் உள்ள திருமால் ஆலயத்தின் பின்புறத்திலும், உழக் கெண்ணெயீச்வரர் கோவிலின் பக்கலிலும் உள்ள சிற்பங்கள் மிக வியக்கத் தக்கவை.



திருமால் கோயிலில் காணப்படும் சிற்பங்களுள் அருச்சுனன் தவம் என்று யாவராலும் சிறப்பித்துக் கூறப்படும் சிற்பம் மிகவும் அழகு வாய்ந்தது. அருச்

சுனன் சிவபெருமானிடம் பாசுபதம் என்னும் படையைப் பெறவேண்டி ஒரு காலையூன்றி மற்றொரு காலைத் தூக்கிக்கொண்டு இருகைகளையும் தலையிற் குவித்த வண்ணம் நின்று தவங் கிடப்பதாய் அமைந்துள்ள சிற்ப வேலைப்பாடு போற்றத்தக்கது.

மற்றொரு சிற்பம் "கோவர்த்தன மலையேந்தல்" ஆகும். ஆய்ச்சியர்களும் ஆயர்களும் ஆனினங்களும் புடைசூழ, கோவிந்தன் கோவர்த்தன கிரியைக் குடையாய்த் தாங்கி நிற்பதாக அமைந்த இச்சிற்பம் பார்ப்போர் கண்ணொடு கருத்தையும் ஒருங்கே கவரத்தக்கதாய் விளங்கும். இதற்கெதிரில் அழகாகச் செதுக்கப்பெற்ற திருமாலின் பாம்பணைப் பள்ளியும், பூமாதேவியை அன்போடு அணைத்துக்கொண்டு ஆதி சேடன் தலையில் ஓரடி வைத்துத் தேவர்கள் துதிக்க நிற்கும் ஆதிவராக மூர்த்தியின் வடிவமும் களிப்பையும் வியப்பையும் அளிக்கவல்லன. வாமனர் சிற்பமும் மிகப் பொலிவோடு விளங்குகிறது.

இவ்வூர்க்குச் சிறிது தொலைவில், பாறைகளிற் குடைந்து செய்விக்கப்பெற்ற, புதுமையான வேலைப்பாடுடன் கூடிய ஒருவகைக் கற்கோயில்கள் காணப்படுகின்றன. காரணமறியாது 'பஞ்ச பாண்டவ ரதங்கள்' என்று இவை அழைக்கப் படுகின்றன. இவை ஒன்றன்பின் ஒன்றாக விமான உருவாகச் செதுக்கப் பெற்றிருத்தலாலும், பாண்டவர் உரு செதுக்கப்பெற்றிருத்தலாலும் இப்பெயர்பெற்றன என்பர் சிலர். உண்மையில் இவை சிவலிங்கங்கள் அமைந்த கற்கோயில்களாகும். நாளடைவில் இவைகளில் அமைந்த இலிங்கங்கள் அழிவுற்றுப் போயின. இவை மிக அழகுடையன. இவைபோல் வேறு அழகுடையன எங்கும் காணப்படா.

மேற்கூறிய ஐந்தில் மிகப்பெரியது "தர்மபுத்திர ரதம்." இது மூன்று வாயில் நிலைகளையுடைய மூன்று

அடுக்குக் கோவிலாய்ச் சித்திர வேலைப்பாடுகளுடன் மிளிர்கின்றது. இரண்டாவது அடுக்கின் நடுவில் கர்ப்பக்கிருகம் மாடப்புரையைப் போலச் சிறிதாக வெட்டி அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடியில் "சோமாஸ்கந்த" உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இத்தருமபுத்திர ரதத்தை அடுத்துள்ள "பீமசேன ரதத்தின்" முன்னும் பின்னுமாக, மண்டபங்கள் குடைந்து நிருமிக்கப்பட்டுள்ளன. பீமசேன ரதத்தை அடுத்திருக்கும் "அருச்சுன ரதத்திற்கும்" "திரௌபதி ரதத்திற்கு"மாகச் சேர்த்து ஒரு முன் மண்டபமும், யானை விக்கிரகமும், சிங்கச் சிலையும் மாறி மாறி இருக்கின்றன. திரௌபதி ரதம் என்று சொல்லப்படுவது ஒரு துர்க்கையின் கோயிலே ஆகும். இது கூரை வீட்டைப் போலக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இதன் பக்கத்திலுள்ள நகுல சகதேவ ரதம் வேலை தொடங்கி அரைகுறையாக விடப்பட்ட நிலையில் காணப்படுகிறது. இந்த ரதக் கோவில்களின் சிற்ப வேலைப்பாட்டைக் காண்பவர் வியப்பது ஒரு புறமிருக்க, திகைப்பது திண்ணம்.

திரௌபதி இரதத்தின் முன்புறம் ஒரே கல்லிற் செதுக்கப்பட்ட யானையின் உருவச்சிலை ஒன்றுண்டு. இதனை அடுத்தே 'பகீரதன் தவம்' என்ற சிற்பம் இருக்கிறது. இச்சிற்பம் சுமார் 29 கெஜ நீளமும், 10 கெஜ உயரமும் உடையது. இதில் மனிதர், தேவர் மிருகங்கள் உருவமாக 150-க்கு அதிகமான உருவங்கள் காணப்படுகின்றன. இருபுறமும் பெரிய பாறைகளால் அடைக்கப்பட்டு, அவைகளின் நடுவே தோன்றும் ஒரு பெரும் பிளவும் அப்பிளவில் சிறந்த நாகர் நாக கன்னியர்களின் சிலைகள் காணப்படுதலும் அதன் சிறந்த பகுதியாகும். இரண்டு பெரும் பாறைகளுக்கு நடுவில் தோன்றும் அகன்ற பிளவா

னது இயற்கையாகவே மழை நீர் பாயும் ஓர் அருவி யின் வழியாகும். கங்கை, தேவலோகத்தினின்று இறங்குவதை இது குறிக்கின்றது. மழைக்காலத்தில் அதன் வழியாகப் பாயும் நீரும், அப்பாறையின் மீது தங்கும் மேகமும், படும் மின்னல் ஒளியும் கங்கை வந்த வேகத்தால் ஏற்பட்டன போல, இயற் கையாகவே அந்த வரலாற்றைச் சிறப்பித்துக் காட்டுகின்றன. அதிலுள்ள பிளவுக்கு வடபுறத்தில் ஒருயானை அப்பிளவுக்கு நேராகத் தன் துதிக்கையை நீட்டிக்கொண்டிருப்பது போலவும் அதன் பின்புறம் மற்றொரு களிறு நிற்பது போலவும், அமைத்துள்ள சிற்பியின் கற்பனு சக்தியைக் கண்டு பரவசமாகா தவர் எவருமிலர்.

கடற்கரை யோரத்தில் திரைகள் மோதப் பெற்ற மிகப் பழமையான சிவாலயம் ஒன்றுளது உழக் கெண்ணெ யிச்வரர் கோயில் எனப்படும் இதில் காணப்படும் இலிங்கம் பன்னிரு பட்டைகள் உடையதாயும், பாதிக்குமேல் உடைத்தெடுக்கப் பட்டதாயும் இருக்கிறது. இக்கோவில் விமானத்தின் மீது முற்காலத்தில் கரையை நோக்கி வரும் கப்பல் களுக்கு வழியைப் புலப்படுத்தும் பொருட்டுப் பெரிய விளக்குகளை ஏற்றி வைப்பது வழக்கமாம். இப்பொ ழுது இவ்வூரில் ஒரு பெரிய கலங்கரை விளக்கம் (Light House) இருக்கிறது. இவ்வாலயத்தின் முன் னிருந்து அலை வீசும் கடற் காட்சியை நேரிற் கண்டே இன்புற வேண்டும்.

மஹாபலிபுரத்திற்குச் செல்பவர், அங்குள்ள சிற்பங்களின் உயர்வையும், முற்காலச் சிற்பிகளின் அரிய திறமையையும், அரசர்கள் அக்காலத்தில் சிற்பக் கலைக்குக் காண்பித்து வந்த செல்வாக்கையும் எண்ணி உள்ளம் பூரிப்பதுடன், அங்குள்ள ஆலயங்களின் பழுதுபட்ட நிலையைப் பார்க்கப் பார்க்க மனம் புழுங்காமல் இரார். மேல் நாடுகளிலிருந்து வரும் எவரும் மஹாபலிபுரத்திற்குப் போகாமல் திரும்புவதில்லை. அவர்கள் அங்குள்ள சிற்பங்களைக் கண்டு வியந்து நம் நாட்டுச் சிற்பக் கலைக்கும், அச் சிற்பங்களை நிருமித்த சிற்பிகளுக்கும் மரியாதை செலுத்துகின்றனர்.

அச்சிற்பங்களைப் பார்க்கச் செல்வதற்கு நல்ல பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வழியிலுள்ள கால்வாயைக் கடக்கப் படகு வசதியுண்டு. அரசியலார் அந்த ரதங்களை மிக்க கவனத்துடன் பாதுகாத்து வருகிறார்கள். நீங்கள் கட்டாயம் ஒரு முறை மஹாபலிபுரத்திற்குச் சென்று அக்காட்சிகளைக் காணவேண்டும்.

பயிற்சிகள்

1. மஹாபலிபுரம் என்று பெயர் வரக் காரணம் என்ன ?

2. மஹாபலிபுரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை ?

3. திருமங்கையாழ்வார் வாக்கால் மஹாபலிபுரத்தைப் பற்றி நீங்கள் அறிவதென்ன ?

4. பஞ்சபாண்டவ ரதங்கள் எவ்வாறு இயன்றுள்ளன?

5. 'பகீரதன் தவம்' என்னும் சிற்பத்தின் சிறப்பு யாது?

6. மஹாபலிபுரத்தில் முக்கிய மிகச் சிறப்புடையனவாக நீர் கருதும் சிற்பங்கள் எவை?

7. கற்கோயில் = கல் + கோவில், சிற்றூர் = சிறுமை + ஊர், இன்புற = இன்பு + உற, காட்சி = காண் + சி. இவைபோன்றவற்றை இப்பாடத்திலிருந்து எடுத்துப் பிரித்துக் காட்டுக.

8. மூன்றடி, அசைந்தாடி, கடற்கரை—பிரித்துக் காட்டுக.

9. ஏனம், வராகம், பன்றி—ஒரு பொருட் சொற்கள்
வீர், எழில், அழகு,—ஒரு பொருட் சொற்கள்.
இத்தகைய வேறு சொற்கள் இரண்டைக் கூறுக.

10. களிறு—ஆண் யானை; பிடி—பெண் யானை: இப்பாடத்தில் இத்தகைய எதிர்ப்பதங்கள் வேறு உளவா என்பதைக் கண்டுபிடிக்க.

11. இப்பாடத்தின் 2-ஆம் பத்தியில் உள்ள வினை முற்றுகள் எவ்வெக்காலத்தன.

12. அதே பத்தியில் உள்ள வாக்கியங்கட்கு எ. ப. செ. கூறுக.

13. அதே பத்தியில் உள்ள செய்வினைகள் எவை? செயப்பாட்டு வினைகள் எவை?

14. அந்தப் பத்தியில் உள்ள வேற்றுமைகள் எவை?

15. சிறுமை, பெருமை, அருமை, நன்மை, வெம்மை, என்பன **மை** யீற்றுப் **பண்புப் பெயர்கள்.** இவை பிற சொற்களோடு புணர்கையில் ஈற்று 'மை' கெடும்; மற்ற எழுத்துக்கள் சில மாறுதல்களைப் பெறும்:

கீழே வருபவற்றைக் கவனி:—

1. சிறுகுடி = சிறுமை + குடி
= சிறு + குடி—ஈறுகெட்டது:
= சிறுகுடி

2. வெந்நீர் = வெம்மை + நீர்
= வெம் + நீர்—ஈறுகெட்டது.
= வெந் + நீர்—'ம்'—'ந்' ஆகத்
= வெந்நீர். திரிந்தது.

இவைபோன்ற பண்புப் பெயர்கள் மூன்றை எழுதிக் காட்டுக.

16. மகாபலிபுரத்திற்கு நீங்கள் போய்ப் பார்த்து வந்ததாக அமைத்து 15 வரியில் ஒரு கட்டுரை வரைக.

17. சான்றோர், சீரும் சிறப்பும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும், புடைசூழ, கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க, களிப்பையும் வியப்பையும், வரலாறு, கலங்கரை விளக்கம், செல்வாக்கு—இச்சொற்றொடர்களை விளக்கி, தனித்தனியே உங்கள் வாக்கியங்களில் வைத்து எழுதுக.

18. (i) மாண்டார் மீண்டு வருவரோ—இதில் மாண்டார் வினையாலணையும் பெயர்.

(ii) தமிழிசை அரங்கில் பாடினனைப் பலரும் புகழ்ந்தனர்—இதில் பாடினன் வினையாலணையும் பெயர்.

இதுபோல் இப்பாடத்திலும் பிறபாடங்களிலும் வினையாலணையும் பெயர் உளவேல் பொறுக்கி எடுத்து எழுதி அவற்றிற்கு ஏற்ற வினைச்சொற்களைக் கொண்டு முடித்துக்காட்டுக.

10. வாய்மையும் இன்னாசெய்யாமையும்

காந்தி அடிகளார்

மாணவர்களே! இப்பரந்த உலகிலே பல்லாயிரக் கணக்கான மக்கள் பிறக்கின்றார்கள். சில காலம் வாழ்ந்து இறக்கின்றார்கள். மரங்களிலிருந்து வீழும் இலைகளைப் போல, பிறரால் எண்ணவும் படாமல் பலர் மாய்ந்தொழிய, சிலர் தம் புகழுடம்பினால் என்றும் அழியா நிலையை அடைந்திருக்கின்றார்கள். இவ்வாறு மக்களாய்ப் பிறந்தோருள் சிலர், பொன்றாப் புகழடைந்து என்றும் நின்று விளங்குவதற்குப், பலர் வறிதே மாய்ந்தொழிதற்கும் காரணமென்ன ?

மக்கள் பிறக்கும்பொழுது ஒரே படித்தான செம்மை செய்யப் பெறாத அறிவுத்திறனோடு பிறக்கின்றார்கள். பிறந்த பின்னர், அவர்களுடைய பெற்றோர்கள், சூழ்நிலை இவற்றிற்குத் தக்கவாறு அவ்வறிவு பெருக்கமும் வளர்ச்சியும் பெறுகிறது. இயற்கையில் மேலிருந்து வீழும் மழைத் தண்ணீருக்குத் தனிப்பட்ட மணமோ, நிறமோ சுவையோ இருப்பதில்லை. அந்நீர், சார்ந்த நிலத்திற்கு ஏற்றாற்போல மணத்தாலும், நிறத்தாலும், சுவையாலும் மாறுபடுகின்றது. அதைப் போலவே மக்களுக்கு இயற்கையில் மாசின்றித் தூய்மையாய் இருக்கும் அறிவு சூழ்நிலைக்கு ஏற்றவண்ணம் ஆற்றலிலும் வளர்ச்சியிலும் மாறுபட்டு, நல்ல தன்மை

யையோ தீய தன்மையையோ அடைகின்றது. இவ்வாறு நன்னிலையிலிருக்கும் அறிவுடைய மக்கள் சிறந்த பழக்கங்களையும், உயர்ந்த குணங்களையும் உடையவராகின்றார்கள். இவ்வாறு தூய அறிவும் உயர்ந்த குணமும் கொண்டோர்களே, தங்கள் செய்கையால் அழியாப் புகழ் உற்று, உலகில் விளங்குவார்கள். மக்களை உயர்ந்தவர்களாக, அழியாப் புகழுடையவர்களாக ஆக்கும் நற்குணங்கள் பலவற்றுள், **வாய்மையும் இன்னுசெய்யாமையுமே** சிறந்தனவாகும். அவ்விரு பண்புகளையும் உற்றவர் மாந்தருள் மாணிக்கமாவார். இப்பண்புகள் அற்றவர் மக்களாயிருந்தும் மாக்களேயாவர். இவையே பிற நற்குணங்களுக்கும் அடிப்படையாக விளங்குகின்றன.

வாய்மை என்பது பொய்யுரையாமையாகும். இப்பொருளைத் தரும் தனித் தமிழ்ச் சொற்கள், உண்மை, வாய்மை, மெய்ம்மை என்ற மூன்றுகும். இம் மூன்று சொற்களும் பொய் கூருமையாகிய ஒரு பொருளையே தந்தபோதிலும் இதில் அடங்கி நிற்கும் கருத்து தமிழ் மக்களின் உயர்ந்த பண்பாட்டை உணர்த்தி நிற்கின்றது. பொய்யல்லனவற்றை நினைத்தல் வேண்டும், பொய்யல்லனவற்றைப் புகல வேண்டும், பொய்யொடு படாதனவற்றையே புரிதல் வேண்டும் என்பதே பண்டைத் தமிழரின் பண்பட்ட கருத்தாகும். அதனுலேயே உள்ளம் பொய்த்தலாகாது என்ற கருத்தில் **உண்மை** என்றும், வாயாற் பொய்த்தலாகாது என்ற கருத்தில் **வாய்மை** என்றும், உடலால் அதாவது செயலிலும் பொய்த்தலாகாது உன்ற கருத்தில் **மெய்ம்மை** என்றும்

காந்தி அடிகளார்

ஒரு பொருளிற்கே மூச் சொற்களை வழங்கினர். இவ்வாறு உள்ளத்தாலும், உரையாலும், உடலாலும் பொய்யாதவன் நன்மை பயப்பனவற்றையே புரிவான். வாய்மையுள்ள நெஞ்சில் அன்பு தவழும். அது அருளாக மாறிப் பிறர்துயர் கண்டு கசிந்து உதவி செய்ய முற்படும். இவ்வாய்மை ஒன்றே அன்பு, அருள் முதலிய குணங்களை உண்டுபண்ணுவதனாலேதான் நமது தெய்வப் புலமைத் திருவள்ளுவரும்,

> "பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
> செய்யாமை செய்யாமை நன்று"

என்று கூறியுள்ளார்.

இன்னா செய்யாமையாவது, மன்னுயிர் பிறவற்றிற்கு யாதொரு தீங்கும் செய்யாமையாகும். மக்களிற் பலர் தங்கள் இன்ப வாழ்வை எண்ணிப் பிறர் துயரைக் கவனியாததினாலேதான் உலகில் பூசலும் பிணக்கும் பெருகியுள்ளன ; நேசமும் இணக்கமும் இல்லை. பிற உயிர்கள் அடையும் துன்பத்தைத்தான் அடைந்ததாக ஒருவன் கருதினால், துன்பமடையும் உயிரிடத்து அவனுக்கு இரக்கம் தோன்றும். அத்தகையவன் உள்ளம் பிறவற்றிற்குத் தீங்கு செய்ய நினைக்காது. இன்னாதவை எனத் தான் உணர்ந்தவற்றைப் பிறனுக்குச் செய்ய அவன் துணியான். இந்நிலையே "அகிம்சை" என்று கூறப்படும்.

புத்தர் போன்ற பெரியோர்களால், மக்கள் பிறவிப் பிணியகற்றி அழியாத இன்பம் பெற வழிகளாகக்

கூறப்பட்டன இக்குணங்களேயாகும். இவைகளே அழியும் மனிதனை அழியாத அமரனுக்கும் உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகள் மக்கள் உள்ளத்திலே மாரு இடம் பெற்று ஒளிவீசுவதற்கு அவரிடம் சிறந்து விளங்கிய வாய்மை, இன்னு செய்யாமை ஆகிய இவ்விரு பெரும் பண்புகளே காரணமாகும்.

காந்தியடிகளின் இளமைப் பருவத்தில் அவருக்குப் பல நண்பர்கள் இல்லை. நற்பழக்கமற்ற ஒருவன் அவருக்கு அப்போது நண்பனுனன். நமது அடிகள் பிறந்த பகுதியில் சமணர்கள் நிறைந்திருந்தார்கள். நண்பர்கள் உயிர்க்கொலையையும், ஊன் உணவையும் அறவே வெறுப்பவர்கள். அதைப் போலவே அங்குள்ள வைணவர்களும் ஊன் உணவை வெறுத்தனர். நம் காந்தியடிகளின் பெற்ருேர் ஆழ்ந்த வைணவப் பற்றுள்ளவர்களாதலின் காந்தியடிகள் மரக்கறி உணவையே உண்டு வந்தார். அக்காலத்தில், 'ஊன் உணவு உடல் வலிமையைப் பெருக்கும்' என்ற எண்ணம், பரவியிருந்தது. காந்தியடிகளின் நண்பன் இவ் வெண்ணத்திற்கு அடிமையானவன். ஆகலினுல், காந்தியடிகளையும் ஊன் உண்ணுமாறு வற்புறுத்தினுன். வெள்ளையர் வலிமை மிக்கவராய் நம்மை அடிமைப் படுத்தியதற்கு ஊன் உணவே காரணமாகும் என்றும், இந்தியர் அனைவரும் ஊன் உணவு உண்டு உடல் வலிமை பெற்ருல் தான் அவர்களை வென்று விரட்டலாம் என்றும் அடிக்கடி கூறிவந்தான். விடுதலை வேட்கை கொண்டு அடிமை அகற்றி, வெள்ளையரை ஓட்ட வேண்டுமென்ற நாட்டங்கொண்ட நமது அடிகள், அவன் கூறியதை

நம்பினுர். பெற்ருேர்க்குத் தெரியாமல், மறைவாக, நண்பன் கொண்டுவந்த ஊன் உணவை உட்கொள்ளத் தொடங்கினுர். அவ்வுணவு அவருக்குப் பிடிக்கவில்லை. பெற்ருேருக்குத் தெரியாமல் மறைவாக, இவ்வாறு செய்தல் அவருக்குச் சிறிதும் உடன்பாடில்லை. உண்ட அன்று, இரவெல்லாம் அவருக்கு உறக்கமே வரவில்லை. சற்றுக் கண்ணயர்ந்தால், கொலையுண்ட ஆடு கனவில் தோன்றிக் கதறுவது போலிருந்தது. உறக்கத்திலிருந்து எழுவார். வெள்ளையனை விரட்ட வேண்டுமே என்ற எண்ணம் சிறிது ஆறுதலளிக்கும். பொய்யை அறவே வெறுக்கும் அடிகள் இரண்டு நாட்களுக்குப் பின்னர், பெற்ருேரைப்பொய்த்து, வஞ்சித்து இவ்வாறு செய்தல் அடாது எனத் துணிந்தார். அன்றே அச்செயலைக் கைவிட்டார். பொய்த்துச் செய்யும் எந்தச் செயலையும் அன்று முதல் நம் அடிகள் வெறுத்து விலக்கினுர். "வாய்மையே" அது முதல் அவர் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்தது. இனி, காந்தியடிகளுக்கு அவருடைய இளமைப் பருவத்தில் மற்ருெரு தீய நண்பன் கிடைத்தான். அவனுடைய தொடர்பினுல் அடிகள் புகைபிடித்தலைக் கற்றுக் கொண்டார். புகை பிடித்தல் நாகரிகத்தின் அறிகுறி எனக் கருதியதால் சின்னுள் அப்பழக்கத்தை மேற்கொண்டார். சுருட்டு வாங்குவதற்குப் பணம் இல்லை. கடன்வாங்கிக் குடிக்கத் தொடங்கியதால் ஒரு சிறிது கடனும் கொடுக்கவேண்டியிருந்தது. எனவே கடனை அடைப்பதற்குத் தனது தமையனுருடைய, கைக் காப்பில் ஒரு பகுதியை நறுக்கி எடுக்க நேர்ந்தது. இந்தச் செயல் அடிகளைப் பெரிதும் வருத்தியது தனது

தவற்றைத் தந்தையிடம் கூறி அவருடைய மன்னிப் பைப் பெற்று ஆறுதலடைய எண்ணினார். ஆனால், நேரில் தந்தையிடம் கூறவும் துணிவில்லை. எனவே கடிதத்தில் தனது தவற்றை விளக்கி, மன்னிப்பு வேண்டித் தந்தை முன் நின்றார்.

நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்த அடிகளின் தந்தையார் எழுந்து கடிதத்தைக் கண்ணுற்றார். தனய னின் தவறு கண்டு கண்ணீர்வடித்தார்; ஒருகணம் சிந்தித்து மீண்டும் படுத்துக் கொண்டார். தந்தையின் அளவற்ற மனத்துயரைக் கண்டு அடிகள் அழுதுவிட் டார். கடுமொழி கூறவும் தண்டிக்கவும் வேண்டிய நிலை யில் அவ்வாறு செய்யாதது காந்தியடிகளின் சிந்தனை யைத் தூண்டியது. பிறரைத் துன்புறுத்தல் கூடாது, என்ற பெருங் குணத்தாலன்றோ தனது தந்தையார் தன்னைத் தண்டியாதுவிட்டார் என அறிந்துகொண்டார். அன்று முதல் அப்பழக்கத்தையும் விட்டார். பிறர் துன்பமடையுமாறு எச்செயல்செய்வதையும் விட்டொ ழித்தார், அன்று முதல் "பிறர்க்கு இன்னா செய்யாமை" என்பதும் அவர் வாழ்க்கையின் மற்றொரு குறிக்கோளா யிற்று.

இவ்வாறு இளமை முதல் இறுதிநாள் வரை காந்தி யடிகள் வாய்மை, இன்னா செய்யாமை ஆகிய இவ்விரு அறங்களையும் தவறாது மேற்கொண் டொழுகினார். அதனால் அல்லல் தரும் "அறச்சோதனை" பலவற்றிற்கு ஆளானார். அக்காலத்திலும் அவர் அவற்றிலிருந்தும் தவறவில்லை. இக்குணங்களே அவரை அழியாப் புகழு

டைய அமரராக ஆக்கியது. எனவே, நாம் ஒவ்வொரு வரும் இக்குணங்களை மேற்கொண்டு நற்பயன் எய்த முயலவேண்டும்.

பயிற்சிகள்

1. அறிவு பெருக்கமும் வளர்ச்சியும் எப்போது அடைகிறது?

2. மக்களின் இயற்கை அறிவு மாறுபடுதற்குக் காட்டிய உவமையை விளக்குக.

3. மக்களை உயர்ந்தவராக்கும் குணங்கள் எவை?

4. பொய்யுரையாமை என்னும் பொருளைத் தரும் மூன்று சொற்கள் எவை? ஒரு பொருளுக்கே முச்சொற்களை வழங்கியதின் கருத்து என்ன?

5. அகிம்சை எனப்படுவது எது?

6. காந்திஅடிகளின் நண்பன் ஊன் உண்ண வேண்டியதற்கு எடுத்துக் காட்டிய சான்றுகள் எவை?

7. காந்தி அடிகள் வாய்மை, இன்னுசெய்யாமை என்ற இரு பேரறங்களையும் மேற்கொண்டு ஒழுகினர் என்பதைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

8. மாய்ந்தொழிய, அழியாநிலை, வாய்மை, இன்னுசெய்யாமை, பிறவிப்பிணி, வறிதே, சூழ்நிலை, அறவே, பூசலும் பிணக்கும், உடன்பாடு, விடுதலை வேட்கை, அறச்சோதனை, இச்சொற்றொடர்களை விளக்கித் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

9. இயற்கை × செயற்கை, நன்மை × தீமை, இளமை × முதுமை, இதுபோலச் சில சொற்களை இப் பாடத்தினின்று பொறுக்கி எடுத்து அவற்றுக்கு ஏற்ற எதிர்ச் சொற்களை எழுதுக.

10. நீங்கள் உங்கள் இலக்கணப் பாடத்தில் (i) காற் புள்ளி (ii) அரைப்புள்ளி, (iii) முற்றுப்புள்ளி (iv) வினைக்குறி (v) உணர்ச்சிக்குறி (vi) மேற்கோள் குறி ஆகிய நிறுத்தக் குறிகளைப் போடவேண்டிய இடங்களைப் பற்றிப் படித்திருக்கிறீர்கள். அவ்வுதவிக் கொண்டு கீழே வரும் பத்தியில், ஏற்ற இடங்களில் இக்குறிகளை இட்டுக் காட்டுக ;—

அரசன் அம்மே கள்வனைக் கொல்லுதல் முறை யன்றோ என்றான் கண்ணகி சீறிச் சினந்தவளாய் அரசே என் கணவன் கள்வன் அல்லன் அவன் சிலம்பை விற்க வந்தவன் இதோ பார் மற்றொரு சிலம்பு இதன் உள் இருப்பது மாணிக்கப் பரல் என்றாள் அரசன் ஆ அப் படியா எங்கள் சிலம்பில் இருப்பது முத்துப் பரல் உனது சிலம்பை உடை உண்மை விளங்கும் என்றான்.

———

11. விபுலானந்த அடிகள்

நாம் வாழும் நாடு தமிழ் நாடு. இந்நாடு தமிழ் நாடு என வழங்கப்படுவதன் காரணம், இங்கு வாழ்பவர்கள் எல்லோரும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பதேயாகும். நம் தமிழ் நாட்டிற்கு எல்லைகள் வடக்கே வேங்கடமும், தெற்கே கன்னியாகுமரி முனையும், கிழக்கும் மேற்கும் முறையே வங்காள விரிகுடாவும், அரபிக் கடலும் என்று படித்திருக்கிறீர்கள். பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னர் மேலே கூறப்பட்ட நான்கு எல்லைகளுக்கும் உட்பட்டுள்ள தமிழ்நாடு கிழக்கே ஆஸ்திரேலியா கண்டத்தின் மேற்குக் கரை வரையிலும், மேற்கே ஆப்பிரிக்கா கண்டத்தின் கிழக்குக் கரை வரையிலும் பரவி இருந்தது. இவ்வளவு பெரிய நிலப் பகுதி "குமரிக் கண்டம்" என்ற பெயரால் அக்காலத்தில் வழங்கப்பட்டது. இன்று அந்நிலப்பரப்பு கடல் கோளால் நீர்ப்பரப்பாகிவிட்டது.

குமரிக் கண்டமாகிய அந்நிலப் பகுதியில் வாழ்ந்த நம் முன்னோர்களாகிய தமிழர்கள் தமிழ் மொழியை நன்கு வளர்த்து வந்தார்கள். தமிழை வளர்க்க அவர்கள் சங்கங்கள் பல நிறுவினார்கள். அவற்றில் சிறந்தன வாகச் சொல்லப்படுவன தலை, இடை கடைச் சங்கங்களாகும். இச்சங்கங்கள் மூன்றிலும் அரும் பெரும் தமிழ் புலவர்களும் மன்னர்களும் கூடித் தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் பல இயற்றினார்கள். அத்தொண்டின் வழியாக நம் செந்தமிழ் மொழி மிக உயர்ந்த நிலையை எய்தி யிருந்தது.

முன்னே கூறப்பட்ட குமரிக் கண்டம் என்ற அந்நிலப்பகுதிகடலால் மூழ்கடிக்கப்பட்டது என்று கூறினோமல்லவா? அவ்வாறு மூழ்கியபோது நம் முன்னோர்களால் இயற்றப்பட்ட அரும்பெரும் நூல்களும் கடலில் மூழ்கி மறைந்தன. கடல் கோளுக்குப் பயந்து தப்பிப் பிழைத்து வந்த நம் முன்னோர்களில் சிலர் இப்பொழுதுள்ள தமிழ்நாட்டின் தென் பகுதியில் உள்ள மதுரையில் சங்கம் ஒன்று நிறுவித் தமிழை வளர்க்கத் தலைப்பட்டனர். மிக்க சிறப்புடன் வளர்க்கப் பட்ட நம் தாய் மொழியாகிய தமிழ் மூன்று பிரிவுகளை யுடையது. அவை இயல், இசை, நாடகம் எனப்படும். இம்முப்பிரிவுகளையும் கொண்ட தமிழ் மொழியைத் தான், ஔவையார் "சங்கத் தமிழ் மூன்று" என்று கூறுகின்றார். இயற்றமிழ் எனப்படுவது செய்யுட் பகுதியும் உரைநடைப்பகுதியும் ஆகும். இசைத்தமிழாவது, இன்னோசையுடன் பாடக்கூடிய பண்ணோடு பொருந்தியும் தாளத்தோடு பயின்றும் வரும் பாடல் நூல்களும் இன்னிசைக் கருவிகளைப்பற்றிக் கூறுவனவுமாம். நாடகத்தமிழ் எனப்படுவது, மக்கள் தாம் கொண்ட சிறந்த கருத்துக்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லு வதற்கு இன்னிசையுடன் பாடியும் ஆடியும் நடித்துக் காட்டுவதற்கு ஏற்ற நூல்களும், ஆடலைப்பற்றிக் கூறு வனவுமாகும். இம்மூன்றனுள் மிகச் சிறந்தது என்று கருதியே இசைத்தமிழுக்கு நடுவிடங் கொடுக்கப் பட்டுள்ளது.

நடுவில் விளக்கும் இவ்விசைத் தமிழைப் பற்றி முன்னோர்கள் பல நூல்கள் வரைந்திருந்தார்கள் என

சிலப்பதிகாரம் என்னும் நூலால் நாமறிகிறோம். 'பெருநாரை,' 'பெருங் குருகு' என்பன முன்னோர்கள் இயற்றிய இசை நூல்களில் சில. இசையைக் கேட்டு மகிழாதார்கள் இவ்வுலகத்தில் இல்லை என்றே சொல்லி விடலாம். அஃறிணைப் பொருள்களான பாம்பு, மயில், ஆனினங்கள் முதலியன கூட இசையைக் கேட்டு மயங்கி விடுகின்றன என்றும், அவைகள் இசைக்குக் கட்டுப்பட்டுச் செய்வது இன்னதென்றறியாது தம் உணர்வு இழந்து விடுகின்றன என்றும் கூறக் கேட்டிருக்கிறோம். கண்ணன் குழலூதியதைக் கேட்டு ஆனினங்கள் எல்லாம் புல் மேய்வதையும் மறந்து அசைவற்று நின்று விட்டன என்று நாம் படித்தும் கேட்டும் இருக்கிறோம். பச்சிளங் குழந்தைகள் கூட அழும்போது தாய்மார் பாடுகின்ற தாலாட்டுப் பாடலைக் கேட்டு அழுகையை நிறுத்தி விடுகின்றன என்பதை நாம் நேரில் கண்டிருக்கிறோம் அல்லவா?

கடலால் கொள்ளை கொள்ளப்பட்ட இசைத்தமிழ் நூல்கள் போக எஞ்சிய இசைத்தமிழ் நூல்கள் இல்லை என்றே சொல்லிவிடலாம். நமக்குக் கிடைத்துள்ள சங்க இலக்கியங்கள் எல்லாமே இலக்கிய இலக்கண நூல்களேயாகும். கடைச்சங்க காலத்திற்குப் பின்னர் இயற்றப்பட்ட நூல்களில் ஒன்றான சிலப்பதிகாரம் என்ற ஒரு நூலால் நாம் இசைத்தமிழைப்பற்றியும் நாடகத்தமிழைப் பற்றியும் சிறிதளவு அறிந்துகொள்ள முடிகிறது.

இயற்றமிழ் நூலாகிய, ஈடும் எடுப்புமற்ற புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை,

பத்துப்பாட்டு, இறையனூர் அகப்பொருள், தொல்காப்பியம் முதலிய பல நூல்களைப் பெற்றிருக்கின்ற நாம், இசைத்தமிழ் நூல்களாக ஒரு சில நூல்களைக் கூடப் பெருமலிருப்பது நமக்கு அழுக்கன்றோ? இவ்விழுக்கு இப்போது சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வருகிறது. இதற்குப் பெரிதும் துணை செய்த பேரறிஞர் ஒருவர் வரலாற்றினையும், எவ்வாறு இவ்விழுக்கினைப் போக்கினுர் என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது கடமையாகும். நீண்டநாளாக இருந்துவந்த அக்குறையினைப் போக்கிய பெரியார் விபுலானந்த அடிகள் ஆவார். இவர் இயற்றிய "யாழ்நூல்" என்னும் "இசைத்தமிழ் நூல்" இல்லையெனில், இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் என்னும் நூலில் வரும் இசைக்கலை நுட்பத்தினை அறியவியலாது. ஆதலால் சிலப்பதிகாரம் என்னும் அவ்வினிய நூலில் வரும் இசைத் தமிழ்ப் பகுதிகள் குடத்தினுள் இட்ட விளக்குப்போல் ஒளி வெளியே புலப்படாது மங்கிக் கிடக்கும்.

அத்தகைய பெரிய தொண்டினைச் செய்த விபுலானந்த அடிகள் 1892-ஆம் ஆண்டு மார்ச் 29-ஆம் நாளில், வேளாண் மரபில், இலங்கைத் தீவின் கிழக்குப் பகுதியில் மட்டக்களப்பிலுள்ள காரேறுமூதூரில் பிறந்தார். இவர் தந்தையார் சாமித் தம்பி என்பவர். தாயார் கண்ணம்மையார் ஆவார். தமிழர்களின் தவப்பயனுய்த் தோன்றிய அடிகளாரது இளப்பருவப் பெயர் மயில்வாகனன் என்பதாகும். இளமையில் தம் நுண்ணறிவால் ஆங்கிலம், தமிழ் என்னும் இரு மொழிகளிலும் பெரும்

புலவராகி, வடமொழியும் பயின்று, அறிஞராய் விளங்கினர்.

மயில் வாகனனர் நம் நாட்டின் பண்டைய பெருமையையும் அஃது இன்று அடைந்துள்ள இழிநிலையினையும் எண்ணி வருந்தினர். நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைப்பதே சிறந்த தொண்டு என்ற முடிவிற்கு வந்தார். துறவற நிலையே தொண்டாற்றுவதற்கு ஏற்றது என்று எண்ணி இராம கிருட்டின மடத்தைச் சார்ந்து சிவானந்த அடிகளை வணங்கித் துறவியானர். அந்நிலைக்கேற்ப விபுலானந்தர் என்ற பெயரும் பெற்றார். அன்று முதல் சமயப் பணியும் தமிழ்ப் பணியும் செய்யத் தொடங்கினர்.

நம் அடிகள் ஆங்கிலமொழியிற் பெரும் புலவராகிய ஷேக்ஸ்பியரது நாடக நூல்களையும் வடமொழியிலுள்ள நாடக நூல்களையும் நன்கு ஆய்ந்து **மதங்கசூளாமணி** என்னும் நாடகத் தமிழ் நூலினை வெளியிட்டார்; அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் இருந்து தொண்டாற்றியுள்ளார். அக்காலத்தில் இசைத் தமிழ் ஆராய்ச்சியினை தொடங்கினர். இவ்வாராய்ச்சி இவர் திருக்கயிலாய யாத்திரை செய்து திரும்பிய பின்னர் முடிவுற்றது. இவர் இமயமலைச் சாரலில் உள்ள ஆசிரமத்தில் சில ஆண்டுகள் தங்கி 'பிரபுத்த பாரதம்' என்ற ஆங்கில மாத வெளியீட்டை நடத்தித் தொண்டாற்றினர். அடிகளார் செய்து முடித்த

இசைத் தமிழ் ஆராய்ச்சி இசைத் தமிழ் முதல் நூலாக "யாழ் நூல்" என்ற பெயருடன் வெளியாயிற்று.

இசைத் தமிழ் நூல்களெல்லாம் வழக்கற்று மறைந்தன என்றுகூறி இரங்கிய துன்பத்தினை நீக்கி அங்ஙனம் இழந்த பெருஞ் செல்வத்தை மீண்டும் உருவாக்கித் தமிழகத்திற்கு உதவியர் இவரே. ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து கிடந்த கலைச் செல்வத்தைத் தமிழ் மக்கள் மீட்டும் பெறுவதற்கு உதவி புரிந்த யாழ் நூலின் அரங்கேற்றுவிழா 1947-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5-ஆம் நாள் திருக்கொள்ளம் பூதூர்த் திருக்கோயிலில் நடைபெற்றது அவ்வரங்கேற்று விழாவில் தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் வீற்றிருக்கக் கல்வி மந்திரி உயர்திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்.

தமிழ் என்ற சொல்லிற்கு இனிமை என்று பொருள் உண்டு. இச்சிறந்த பொருள் இடைக் காலத்தில் இசைத் தமிழ் நூல்கள் ஒன்றும் வெளியிடப் படாமையால் பொய்யாகிவிடுமோ என்று தமிழ்மக்கள் வருந்தி நின்றனர். இக்காலத்தில் தம்முடைய கூரிய மதியால் தமிழ் நூல்களை ஆராய்ந்து, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் இசைத் தமிழில் முற்றுந் துறை போகியவர்களாக விளங்கினார்கள் என்று உலகத்தார் அறியும் வண்ணம் செய்தருளிய விபுலானந்த அடிகளின்

தொண்டு தமிழ் நாட்டவரால் என்றும் மறக்கற்பாலதன்று. அவரியற்றிய 'யாழ் நூல்' என்னும் இசைத் தமிழ்நூல் தமிழ்மொழி உள்ளளவும் அழியாது நின்று நிலவும்.

பயிற்சிகள்

1. குமரிக்கண்டம் என்று எது பெயர் பெற்றது?

2. இசைத் தமிழ் என்றால் என்ன? இசைத் தமிழ் நூல்கள் எல்லாம் என்ன ஆயின?

3. அடிகளாரின் இயற் பெயரென்ன?

4. அவர் துறவறம் பூண்டதேன்?

5. விபுலானந்தர் இயற்றிய "மதங்கசூளாமணி," "யாழ்நூல்" களைப் பற்றியும், "அவர் பிரபுத்த பாரதம்" என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்து செய்த தொண்டைப்பற்றியும் சிறு குறிப்புகள் வரைக.

6. விபுலானந்தரின் தமிழ்த் தொண்டைப்பற்றிப் பதினைந்து வரிகளுக்குள் ஒரு கட்டுரை வரைக.

7. இன்னிசை, கடல்கோள், உணர்விழந்து, ஈடும் எடுப்புமற்ற, இழுக்கு, இசைக்கலை நுட்பம், குடத்தினுள்ளிட்ட விளக்கு, நுண்ணறிவு, இழிநிலை, சமயப்பணியும் தமிழ்ப்பணியும், தமிழ்ப்பேராசிரியர், கலைச்செல்வம், நின்றுநிலவும்—இச்சொற்றொடர்களை விளக்கி உம் வாக்கியங்களில் தனித்தனி அமைத்து எழுதுக.

8. கீழ் வருவனவற்றைக் கவனியுங்கள் ;—

போ	தன்வினை	போக்கு	பிறவினை
பாய்	,,	பாய்ச்சு	,,
உருள்	,,	உருட்டு	,,
இரு	,,	இருத்து	,,
இளைப்பாறு	,,	இளைப்பாற்று	,,
வா	,,	வருவி	,,
படி	,,	படிப்பி	,,

தொழில் செய்பவர் (தான்) செய்யும் வினை தன்வினை ; ஒருவர் பிறரைக் கொண்டு செய்விக்கும் வினை பிறவினை எனப்படும். இதுபோலவே இப்பாடத்திலும் பிற பாடங்களிலும் இருந்து சில தன வினைகளைப் பொறுக்கி எழுதி, அவற்றிற்கு நேராக அவற்றின் பிறவினைகளையும் எழுதுக.

12. வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

(ஒரு சிறு நாடகம்)

உறுப்பினர் :— ஆதன், ஔவையார்.

இடம் :— தகடூர் நெடுவழி.

பொழுது :— நடுப்பகல்

[ஆதன் துணையால் ஔவையார் தகடூரை அறிந்து செல்லுதல்.]

ஆதன் :— (நெடுவழியின் ஒரு புறத்திலிருந்து கொண்டு) அடடா! என்ன அருள்!! கொடையாளிகள் என்று பெயர் தாங்கி இவ்வுலகில் எத்தனையோ செல்வர்கள் உள்ளார்கள்; பாரதம் நடந்த நாளில் கூடக் 'கன்னன்' என ஒரு வள்ளல் இருந்தானும். அவன் என்னென்னவோவெல்லாம் தாராளமாகத் தந்தானும். அவற்றை நாம் நேரிலா கண்டோம்? ஏதோ நூல்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு நம் கண்களுக்கு முன்னே, என்ன அன்பு! என்ன மகிழ்ச்சியோடு கூறு கின்ற சொல்! அடடா! என்னைக் கண்டதும் எவ்வளவோ விருப்பத்தோடு என் பெயரைச் சொல்லி அழைத்து, எங்களூர்ச் செய்திகளை யெல்லாம் கேட்டுக் கொண்டார். என்னவோ இப்படிப்பட்ட இடத்தில் எனக்கும் ஒரு நட்பு ஏற்பட்டது; ஏழைகளிடம் அவருக்கு என்ன கருணை தெரியுமா? சில நாள், நான் அவர் அடிகளில் தொண்டு புரிந்து கொண்டிருப்பதற்குள், சாலையில் ஒருவன் வருவான் என்னென்னவோ வெல்

லாம் சொல்லி அழகாகப் பாடுவான். தூக்கமுடியாதபடி காசும், பொருளும், ஆடையும் பெற்றுச் செல்வான். அதே ஆள் சில நாட்களுக்குள் இன்னும் எவனையோ அழைத்து வந்து எதெதையோ சொல்லி இன்னும் ஏதாவது பெற்றுப் போவான். ஐயா! முன்னர் வந்தவன் தானே என்ற கேள்வி கேட்கலாமா? அவன்தான் வரக் கூடாது என்ற நியதிதான் உண்டா?

(ஔவையார் நெருங்க உற்றுப் பார்த்தல்.)

ஔவையார் ஏன் அப்பா! நீ எந்த ஊர்? தகடூர் உனக்குத் தெரியுமா?

ஆதன்.—என்ன கிழவி? நான் எந்த ஊராக இருந்தால்தான் உனக்கென்ன? தகடூரைப் பற்றிய கேள்வி

உனக்கு எதற்கு? தகடூர் செல்லும் வழி தெரியாமலா இவ்வழியே வந்தாய்?

ஔவையார் :— இல்லையப்பா. நான் கேட்டவற்றில் என்ன பிழைகள் உள்ளன? தகடூருக்குப் போகவேண்டும் என்று நெடுந்தொலைவில் இருந்து வருகிறேன்; மிகவும் அலுத்துப் போயிருக்கிறேன்; ஊர் அருகிலிருந்தால் தட்டித் தடவி எப்படியாவது போய்ச் சேர்ந்து அதியமானைக் காண்பேன். அதியமான் கற்றவன்; பெரியவீரன்; செல்வமுள்ளவன்; அண்டினவரைக் காப்பவன்; சிறந்த கொடை வள்ளல் என்றெல்லாம் கேள்விப்பட்டுள்ளேன். இதற்காகத்தான் உன்னைக் கேட்டேன்.

ஆதன் :— ஓஹோ! எனக்குத் தெரியுமே கிழவி நீ தகடூர் போகவேண்டும் என்றபோதே. எங்கள் மன்னர் அதியமான் பெருமானை அடைந்து ஏதாவது காசு பறிக்க நீ போகிறாய்.

ஔவையார் .— அடா மகனே, அப்படிச் சொல்லாதே. நீ கல்லாதவனாகக் காணப்படுகிறாய். உனது வேந்தனின் சிறப்பை உள்ளவாறு நீ உணராதவன் ஆகிறாய்; உன் மன்னன், சிறந்த வள்ளன்மை உடையவனாதலால், கற்றவர்கள் அவனைக் கருதி நாளும் வருவார்கள். அவ்வாறு அவர்கள் அவனையடைந்து பொருள் முதலியன பெற்றுச் செல்வதால் அவன் செல்வம் குறைந்து வறுமையாளனாக ஒருநாளும் மாறமாட்டான். இன்னும், உனது அதியமான், புல

வர்களிடம்மிருந்த அன்புள்ளவன் ஆவான். அதற்குச் சான்றாக வேறு எதுவும் தேவையில்லை. 'நான் இங்கு இருக்கிறேன்' என்ற செய்தி அவன் காதுகளுக்கு எட்டினாலே போதும். என்னை முன்னே பார்த்தறியாதவனாக இருப்பினும், அவனே இங்கு வந்து விடுவான் என்பது திண்ணம்.

ஆதன்:— அப்படியானால் ஏன் கிழவி, உனக்கு அறிமுகமில்லாதவர்களையும் நேரே அழைக்கக் கூடிய திறமையுள்ள நீ ஏன் இவ்வாறெல்லாம் கால் கடுக்க, கண் இருள, மெய் சோர நடந்து வரவேண்டும்?

ஔவையார்.—உலகியல் உணராதவன் நீ. பொது வாழ்வின் நன்மைக்காகப் பாடுபடுபவர்கட்கு ஒருவர் தம் நலத்துக்காகத் தொந்தரவு தருதல் முறையாகாது. இன்னும் எம்போன்ற புலவர்கள் 'இன்று இங்கும், நாளை அங்கும்' என ஓரிடத்தும் நிலைத்திராது பல நாடுகட்குச்சென்று ஆங்காங்குள்ள மக்கள் அறிவும், நலனும் பெற்று மகிழப் பாடுபடுபவர்களாதலால், மன்னர்க்கு ஆட்போக்கி அவர்கள் வரும் வரையில் காத்துக் கொண்டு ஓரிடத்திலேயே தங்கி இருக்கவும் இயலாது.

ஆதன்:—(சற்று அச்சம் கொண்டவனாய்) ஆமாம் தாங்கள் 'எம்—போன்ற புலவர்கள்' என்றீர்களே, தாங்கள் யாராக இருக்கலாம்?

ஔவையார்:—உனக்கு என் பெயர் தெரியவேண்டுமா? என்னை 'ஔவை' என்பார்கள்.

ஆதன் :—அம்மையே, என்னைக்காப்பாற்ற வேண்டும். (அடிகளில் வணங்குகிறான்). நான் யாரோ, வழிப்போக்குக் கிழவி என அறியாமல் பலவாறு கூறிவிட்டேனே! என்ன செய்வேன், என் தாயே! என்னைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

ஔவையார் ;—அப்பா! அஞ்சாதே, எழுந்திரு. நீ யாவன்?

ஆதன் :—அருள்மிக்க தாயே! நான் அதியமான் வேந்தரின் அடிமை; அவர் தம் ஊழியன்; ஏழை அம்மே! எமது இறைவர் தங்களது பெயரையும், புகழையும் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார். என் குற்றத்தை மன்னித்து என்னைக் காப்பாற்ற வேண்டும்.

ஔவையார் :—மகனே! அச்சம் தவிர்க. ஒருவர் அறியாமற் செய்த பிழையைச் சிறிதும் பொருட்படுத்தார் எம்போன்றவர். எத்தனையோ செல்வர்களும், கற்றவர்களும், தாம் செய்வன தீமையென்பதை நன்கு உணரினும் அவற்றைத் தவிராது செய்து தீப்பழியைத் தேடிக் கொள்ளுகின்றனரே, அவை தாம பொறுத்தற்கு இயலாதனவே யன்றி, நீ கூறியன பிழையின்பாற் படாதன வாகும். இப்பொழுது விரைவில் எனக்குக் களைப்பு மேலிடும் போலிருக்கிறது. அதற்குள் தகடூரை நான் அடைந்தால் நலமெனக் கருதுகிறேன். அஃது இன்னும் எவ்வளவு தொலைவில் உள்ளது.

ஆதன் ;— தாயே ! என்னை மன்னித்தருள்க. தாங்கள் இப்படி நிழலில் இருக்க வேண்டும். களைப்புடன் செல்லுதல் ஆகாது. தகடூர் சற்றுத்தொலைவில் இருக்கிறது. இன்னும் இரண்டு நாழிகை நடக்கவேண்டும். எளியவன் அன்புடன் தருகின்ற இச்சிறியவுணவை மனமுவகக ஏற்றுத் தங்களது களைப்பைச் சிறிது தணித்துக்கொள்ள இறைஞ்சுகின்றேன். இதோ நீரும் உள்ளது. இவற்றை ஏற்றுக்கொள்க. (ஔவை அவலும் நீரும் ஆதனிடம் பெற்றுண்கிருள்.)

ஔவையார் ;—மகனே! நீ நெடிது வாழ்க! அதியனின் ஊழியன் என்பதை இச்சிறு செயலே எனக்கு நன்கு உணர்த்திற்று. தலைவனைப் போலவே நீயும் உன் அளவுக்குத் தக்கவாறு கொடைத்திறன் கொண்டுள்ளமையை நான் மிகவும் போற்றுகிறேன். வாழ்க நீ பல்லாண்டு. தகடூர் செல்லும் நெறியை உணர்த்தி, நீ சென்று வருக.

ஆதன் :—அன்னையே ! இவ்வழியில் இன்னும் இரண்டு நாழிகைத் தொலைவுக்குப் பிறகு, வலப்புறம் ஓர் இடைவழி பிரியும். அதில் திரும்பினல் தகடூர் மன்னர் அரண்மனையின் 'முதல் வளைவு' நன்கு தோன்றும்.

ஔவையார் :—நல்லது மகனே ! சென்று வருகிறேன் நான். நீ நன்கு வாழ்க !

ஆதன் .—வணக்கம் தாயே, வணக்கம்! (ஔவை செல்கிருள்)—அப்பா ! நல்லவேளை ! என் பெயரை

அந்தக் கிழவிக்கு நான் சொல்லவில்லை. ஏதோ இன்றைக்குக் கண் விழித்தபொழுது, நல்ல பொழுதாக இருக்கும் போலிருக்கிறது; என்னவோ தலைக்கு வந்தது தவறித் தலைப்பாகையோடு ஒழிந்தது. பொதுவாக எனக்குப் புலவர்கள் என்றாலே மிகுந்த நடுக்கம். அதிலும் ஔவையாம்; அடே அம்மா! நல்ல கிழவி. அன்பாகத்தான் பேசினார்கள், என்னைப் போலவா? கல்வி என்றால் அதற்குத் தனித் தகுதிதான் இருக்கிறது. அடே! பொழுது போயிற்றே. விரைந்து வீட்டுக்குப் போகிறேன்.

(பாடிக்கொண்டே போகிறான்) **—தமிழ்ப் பொழில்**

பயிற்சிகள்

1. கொடையாளி, நியதி, அறிமுகம், ஆட்போக்கி, இறைஞ்சினான், வழிப்போக்கு, பல்லாண்டு - இவற்றைத் தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக.

2. (i) ஔவையார் ஒரு சிறந்த பெண்பாற் புலவர் —இது ஒரு தனி வாக்கியம்

(ii) புகழேந்தி ஒரு சிறந்த புலவர் என்பதை எவரும் அறிவர். இது ஒரு கலவை வாக்கியம்.

(iii) நான் நன்கு தமிழ் படித்திருக்கிறேன்; ஆனால், தேர்வில் தேர்ச்சி பெறுவது ஐயமே. இது தொடர் வாக்கியம்.

இம் மூவகைகளுக்குத் தனித்தனியே மூன்று மூன்று எடுத்துக் காட்டுகளாக இப்பாடத்திலிருந்து எடுத்து எழுதிக் காட்டுக.

3. தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக—

(i) அவள் நன்றாகப்படித்ததனால் தேர்வில் தேறினாள்.

(ii) நான் கழகஞ் சென்று சொற்பொழிவைக் கேட்டேன்.

(iii) அடியார்கள் கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கி வீடு திரும்பினர்.

(vi) புதிய வீட்டில் குடியேறியது முதல் எனக்கு உடல் நிலை நன்றாக இல்லை.

4. ஆதன் தகடூருக்குச் செல்லும் வழியில் தனியாகப் பேசிக்கொண்டு சென்றது என்ன?

5. அதியமானை அடைந்து "காசு பறிக்கவா நீ போகிறாய்? என்ற ஆதனுக்கு ஔவையார் கூறிய விடை யாது?

6. தன் குற்றத்தை மன்னிக்க வேண்டும் என்று வேண்டிய ஆதனை ஔவையார் எவ்வாறு தேற்றினார்?

7. அதியமான், தகடூர்-சிறு குறிப்புகள் வரைக.

8. நீ—முன்னிலைப் பெயர்   போனாய்—முன்னிலை ஒருமை வினை முற்று

நீர், நீங்கள்—முன்னிலைப் பன்மைப் பெயர்   போனீர்கள்—முன்னிலைப் பன்மை வினைமுற்று

இதுபோல, இப்பாடத்திலும் பிற பாடங்களிலும் இருந்து முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை வினைமுற்றுகளை

அவற்றின் எழுவாய்களோடு தொகுத்துப் பின் கீழ்க் கண்ட அட்டவணைப்படி வகைப்படுத்தி எழுதுக:—

முன்னிலை ஒருமைப் பெயர்கள் (எழுவாய்கள்)	முன்னிலைப் பன்மை வினை முற்றுகள்	முன்னிலைப் பன்மைப் பெயர்கள் (எழுவாய்கள்)	முன்னிலைப் பன்மை வினை முற்றுகள்

---

13 பிளாஸ்டிக் ஸெல்லுலாய்டுப் பொருள்கள்

இக் காலத்தில் எங்கும் பிளாஸ்டிக் பொருள்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவை புகாத துறை கிடையாது. பல் தேய்ப்பான் முதல் படுக்கையில் விரிக்கும் விரிப்பு வரையில் காலை முதல் இரவு வரையில் - ஒவ்வொரு காரியத்திலும் - அவை நமக்கு உதவுகின்றன. நமது வீட்டிலும், நம்மை ஏற்றிச் செல்லும் பலவகை வாகனங்களிலும், அலுவலகங்களிலும் அவை காணப்படாத இடமே கிடையாது. என்று ஆகிவிட்டது. ஒரு புதுமைப் பெண் என்றால்

அவனுடைய பளபளப்பான பிளாஸ்டிக் கைப்பை யும் அழகிய வர்ணங்களில் நேர்த்தியான வேலைப் பாடமைந்த பிளாஸ்டிக் செருப்புகளும் கண்ணைப் பறிக்கும் பிளாஸ்டிக் வளையல்களுமே நமது கண் முன் தோன்றுகின்றன. இப்படியாக, "எங்கும் பிளாஸ்டிக் மயம் உலகம்" என்று இருக்கிறது. ஆமாம், இதன் பழங்கதை யென்ன? முதன் முதலாக இது எப் பொழுது தோன்றத் தொடங்கிற்று?

1833-ஆம் வருஷத்தில் பிரஞ்சு தேசத்திலே இருள்சூழ்ந்த ஓர் ஆராய்ச்சிச்சாலையில் பிராக் கொன்னோ என்னும் ஓர் அறிஞர் மிகவும் தீவிரமாக ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். ஒருநாள் அவர் கண் ணாடிக் குடுவை ஒன்றை தமது கையில் வைத்துகொண்டு அதை உற்றுப்பார்த்த வண்ணம் இருந்தார். அந்தக் குடுவையின் உள்ளே கெட்டித் தேனைப்போல் இளகிய நீர் இருந்தது. அது தெளிவாயும், அசைத்தால், மிக மெதுவாய் இயங்குவதாயும் இருந்தது. அந்தக் குடு வையைச் சற்றே சாய்த்தபோது, அதன் அடிப்பகுதி யிலே கொஞ்சமாய் இருந்த நீரானது, இடம்விட்டு நகர்வதற்கு மனமில்லாத சோம்பேறியைப் போல், மெதுவாக இடம் பெயர்ந்தது அப்படி நகர்ந்த போது அது முன்னால் படிந்திருந்த இடத்தில் அந்த நீரின் ஒரு சிறு பகுதி மெல்லிய பூச்சியைப்போல் கண்ணாடிக் குடுவையின் ஓர் இடத்தில் இலேசாக ஒட் டிக் கொண்டிருந்தது.

அவர் ஆராய்ச்சிச்சாலையில் வேலை செய்துவந்த மேசையின்மீது அதில் சில துளிகள் சிந்தியிருந்தன.

அவை காற்றில் மெதுவாக உலர்ந்து, கெட்டி வில்லைகளைப் போல் இறுகின. பிராக்கொன்னே அவற்றைத் தமது கைவிரலால் அழுத்திப் பார்த்தார். அவை கல்லைப் போல் கெட்டியாக இருந்தன. அவை உள்ளும் புறமும், நன்றாக இறுகி விட்டன என்பதை அவர் உணர்ந்தார். அவற்றைத் தமது விரலால் மேசையிலிருந்து தள்ள முயன்றார். அப்போது அவருக்கு மற்றொரு விந்தை புலப்பட்டது. அவ்வில்லைகள் வச்சிரத்தால் ஒட்டியதுபோல மேசையோடு மிகவும் நன்றாக ஒட்டிக்கொண்டுவிட்டன. அதைக் கண்டதும் அவருடைய மனதில் ஒரு ஐயம் உண்டாயிற்று. தமது குடுவையிலிருக்கும் திரவப் பொருளும் உறைந்து கெட்டியாகிவிட்டதோ என்பதுதான் அந்த ஐயம். ஆனால் அது மூடிய குடுவையினுள்ளே முன் போல் கெட்டித்தேனைப் போலவே இருக்கக் கண்டார்

காற்றுப்படாத நிலையில் நீர் உருவத்திலேயே இருப்பதாயும், காற்றுப் பட்டதும் மெதுவாக உறையத் தொடங்கிக்கல்லைப்போல் இறுகிவிடுவதாயும், உறையும் போது தன்னோடு பொருந்தியிருக்கும் பொருளோடு மிக நன்றாய் ஒட்டிக் கொள்வதாயுமுள்ள அந்த விந்தைப் பொருளைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைந்தார். தாம் இயற்றவேண்டும் என்று நெடு நாளாகப் பாடுபட்டு வந்த முயற்சி வெற்றியுடன் நிறைவேறினால் யாருக்குத் தான மகிழ்ச்சி உண்டாகாது? அவர் இயற்றிய பொருள் தான் ஸெல்லுலோஸ்நைட்டிரேட்டு. இதற்கு பைராக்ஸிலின் என்றும் மற்றொரு பெயரும் உண்டு.

அவர் இதைக் கண்டுபிடித்ததற்கு இருபது ஆண்டு களுக்குப்பின்பு ஸ்காட்டிலாந்து நாட்டிலுள்ள அலெக் ஸாண்டர் மார்க்ஸ் என்னும் ஓர் அறிஞர் ஸெல்லுலோஸ் நைட்டிரேட்டோடு கற்பூரத்தைக் கலந்தார். அப்போது கிடைத்த பொருள் எளிதில் இளகுவதாயும், எளிதில் உறைந்து இறுகுவதாயும் பலவகைகளில் கொம்பைப் போலும், தந்தத்தைப்போலும் பயன்படுவதாயும் இருக்கக் கண்டார். அந்தப் பொருளால், சீப்புகள், மூக்குக் கண்ணாடிச் சட்டங்கள், முதலிய சாமான்கள் சிலவற்றை இயற்றி வந்தார். அவருடைய பெயரைக் கொண்டு அந்தப் பொருளுக்கு பார்க்கிஸைட்டு என்ற பெயர் இடப்பட்டது.

இதற்கும் பத்து ஆண்டுகளுக்குப் பின்பு, 1865-ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டினரான ஜான்ஹையட்டு என்பவரும் அவருடைய சகோதரரான ஐஸையா ஹையட்டு என்பவருமாக அவ்விரண்டு பொருள்களையே கொண்டு மற்றொரு பிளாஸ்டிக் பொருளை அமைத்தார் கள். தாங்களியற்றிய பொருளுக்கு ஸெல்லுலாய்ட் என்று அவர்கள் பெயரிட்டார்கள்.

அந்தப் பொருளினால், அவர்கள் பலவகையான சாமான்களை இயற்றினார்கள். அந்தப் பொருள்களுக் குச் சில சிறந்த குணங்கள் இருந்தன. அவை எளிதில் அழுக்கேறாமை அந்தக் குணங்களில் ஒன்று. பந்து கள், பொம்மைகள், வளையல்கள், குவளைகள், கோப்பை, தட்டு, கிண்ணம் முதலியவைகளெல்லாம் ஸெல்லுலாய்டினால் இயற்றப்பட்டு எங்கும் வழங்கி வந்தன.

ஆனால், இதற்கு ஒரு பெரிய கெட்ட குணம் இருந்தது. அது மிகவும் எளிதாகத் தீப்பற்றிக் கொள்ளும் குணமுடையது. ஆகையால் ஸெல்லுலாய்டு சாமான்கள் எளிதில் தீப்பற்றிக் கற்பூரம் போல் கரிய புகை விட்டு எரிந்து இருந்த இடமே தெரியாமல் மறைந்து விடும். அவைகள் சமையலுக்கு ஏற்றதல்ல. மேலும் அவை நசுங்கி, அதுங்கி, உருவமே தெரியாது உரு மாறிப் போய்விடும். பிறகு, சூடான காப்பியோ, அல்லது வெந்நீரோ ஸெல்லுலாய்ட் கோப்பைகளில் அருந்தினால், அந்தச் சூட்டில், ஒருவித ரப்பர் நாற்றம் அடித்துக் காப்பி முதலியவற்றின் சுவையைக் கெடுத்து விடுகிறது.

அதனால், இக்கெட்ட குணங்கள் இல்லாத ஒரு பொருளை இயற்ற வேண்டும் என்று அறிவியல் அறிஞர் பாடுபட்டு முயன்று வந்தார்கள். அவர்களுடைய முயற்சி பயன்பட்டது. பிரெஞ்சு நாட்டினரான டிரேபஸ் என்பவர் ஸெல்லுலோஸ் நைட்டிரேட்டுக்குப் பதிலாக, ஸெல்லுலோஸ் அஸிடேட்டு என்னும் பொருளைப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடித்தார். இது அவ்வளவாகத் தீப்பற்றாது. ஆகையால் இதை வழங்கத் தொடங்கிய பின் தீத் துன்பங்கள் குறைந்து விட்டன.

பிளாஸ்டிக் சாமான்கள் ஏராளமாக அமெரிக்காவில் செய்யப்பட்டன. எதைப் பார்த்தாலும் பிளாஸ்டிக்; எதைத் தொட்டாலும் பிளாஸ்டிக்; என்று சொல்லும்படியாகி விட்டது.

எத்தனையோ விதமான பாத்திரங்கள், பேஸின்கள், கிண்ணங்கள், குவளைகள், கோப்பைகள், தட்டுகள் கரண்டிகள், காப்பி வடிகட்டிகள் முதலியன பிளாஸ்டிக்கில் அழகழகான கண்ணுக்குக் குளிர்ச்சியான நிறங்களில் செய்யப்படுகின்றன. இவைகள் எளிதில் அழுக்கேறுவதில்லை. அப்படி ஏறினாலும் தண்ணீரில் கழுவி, ஈரத்துணியால் துடைத்துவிட்டால் இவை மறுபடியும் பளிச்சென்றாகிவிடும். இப்பிளாஸ்டிக் பாத்திரங்களுக்குப் பித்தளைப் பாத்திரங்களைத் தேய்ப்பது போல் புளியும் சாம்பலும் வேண்டியதில்லை. மேலும் இவை கண்ணாடிச் சாமான்களைப் போல் எளிதில் உடைவதில்லை. பித்தளைப் பாத்திரங்களைப் போல் நசுங்குவதில்லை. அலுமினியப் பாத்திரங்களைப்போல் ஓட்டையாவதில்லை. ஆதலால் முதலில் அதிகக் காசைக் கொடுத்து வாங்கினாலும், நாளடைவில் அதுவே மலிவாக முடியும்.

இன்றும் இங்கு பிளாஸ்டிக் பாத்திரங்களை நேரடியாக அடுப்பில் வைத்துச் சமையல் செய்வதில்லை. அதற்கு ஏற்ற வகைப் பாத்திரங்கள் இன்னும் செய்யப்பட்டு நம் நாட்டில் விற்பனைக்கு வரவில்லை. அப்படி வந்தாலும் நம்மிடையே தொன்று தொட்டு வழங்கி வரும் வெண்கல, பித்தளை, அலுமினியப் பாத்திரங்களைத் திடீரென்று கைவிட மனம் வராது.

—குமாரி பி. ஏ. அம்மணி,
சென்னை.

(வானொலி நிலையத்தில் பேசியது.)

பயிற்சிகள்

1. பிளாஸ்டிக் தற்காலத்தில் எவ்வெவ்விதங்களில் பயன் படுகின்றது?

2. பிராக்கொன்னே என்பவர் எங்கு எதைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்?

3. அவர் செய்த ஆராய்ச்சியை விவரிக்க.

4. ஆராய்ச்சி செய்த பிராக்கொன்னே எத்தகைய விந்தைப் பொருளைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்?

5. 'பார்க்கிஸைட்டு' என்பது யாது?

6. ஸெல்லுலாய்ட் என்று எதற்குப் பெயரிடப் பட்டது.

7. ஸெல்லுலாய்டுக்குள்ள சிறந்த குணங்கள் யாவை?

8. அதற்கிருந்த கெட்ட குணங்கள் யாவை?

9. பிளாஸ்டிக் பாத்திரங்கள் என்பது பற்றிப் பதினைந்து வரிகளில் கட்டுரை ஒன்று எழுதுக.

10. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:— தொன்று தொட்டு, நாளடைவில், இயற்றப்பட்டு, வழங்கி வந்தது, புலப்பட்டது, உள்ளும் புறமும்.

செய்யுட் பகுதி

[பொது]

1. வாழ்த்துப் பகுதி

1. பொதுமை வேட்டல்

உன்னையே நினைக்க உன்னையே பேச
உன்னருட் டொண்டையே ஆற்ற
என்னையோ செய்தேன் ஏக்கறு கின்றேன்
எப்படி உய்குவன் ஏழை
உன்னியே பார்த்தேன் உளமெலாம் நடுக்கம்
உறுவதை நீயுநான் அறிவேம்
கன்னலே கரும்பே கருணையங் கனியே
கடையனேன் பிழைபொறுத் தருளே!

—திரு. வி. க.

பொது நோக்க நன்னெறியாகிய "சமரச"த்தைப் புகட்டும் இக்காலப் பெரியார்களுள் தலை சிறந்தவர் திரு. வி. க. அவர்கள். "தமிழ்ப்பெரியார்" என்றும் "தமிழ் நாட்டின் தந்தை"யெனவும் போற்றப்பெறும் இவர் சென்னை இராயப்பேட்டைப் புதுப்பாக்கத்தில் வாழ்ந்து வருகின்றார். தமிழுக்கும், நாட்டிற்கும், தொழி லாளருக்கும், சைவத்திற்கும், சமரசத்திற்கும் இவர் செய்திருக்கும் தொண்டு அளவிடமுடியாததாகும்

இவர் கவிதைகளும், கட்டுரைகளும், நூல்களும் எண்ணிலடங்கா. 'பொதுமை வேட்டல்' என்னும் நூலில் 'முறையீடு' என்னும் பகுதியில் இஃது உள்ளது

அருட்டொண்டை, அருள் + தொண்டை எனப் பிரிக்க. ஆற்ற—செய்ய. என்னையோ—என்ன என்னவோ. எக்குறுகின்றேன்—எக்கம் அடைகின்றேன். உன்னி—நினைத்து. கன்னல்—கரும்பு.

2. மலரும் மாலையும்

இன்னிசை நீ பாடுமுறை ஏதுமறியேன்யான்
இரவுபகல் கேட்டின்பம் எய்திவியந் திடுவேன்
மன்னுலகை ஒளிசெய்வ துன்னிசையின் ஒளியாம்
வானெங்கும் உலவுயிரும் உன்னிசையின் உயிராம்
பன்னரிய நின்னிசையின் பாலாறு பொங்கிப்
பாறைகளும் உடைந்துருளப் பாய்ந்தொழுகும் அதனை
டென்னிசையுங் கலந்தொழுக ஏற்றகுரல் காணேன்
எண்ணிலிசை வலையில் விழுந்தெனை யாளும் இறையே 1

சின்னஞ் சிறிய மலர் இந்தச்
சிறிய மலரைக் கொய்திடுவாய்!
இன்னுங் காலஞ் செல்லின் ஒளி
இழந்து வாடி விழுந்திடுமே. 2

ஐய னோர் அணிமாலைக்
காகா மலரே யானாலும்
செய்ய உன்றன் திருக்கரத்தால்
தீண்டும் பெருமை அளிப்பாயே! 3

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

THE MADURA TAMIL SANGAM

(1–3) இச் செய்யுட்கள் "மலரும் மாலையும்" என்னும் கவிதைத் திரட்டில் 'அஞ்சலி' என்னும் பகுதியில் உள்ளவை. இவற்றின் ஆசிரியரான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் திருவிதாங்கூர் நாட்டிலுள்ள சுசீந்திரத்தை அடுத்துள்ள தேரூர் எனும் சிற்றூரில் கி. பி. 1876-ம் ஆண்டிற் பிறந்தவர். இவர் பெற்றோர் சிவதாணுப் பிள்ளை; ஆதிலெக்ஷ்மி அம்மாள். இவர் கவிதைகள் எளிமை, இனிமை, பொருள்நயம், சொல்நயம் பொருந்தி, சிறுவர் முதல் பெரியோர் முதலிய பலரையும் இன்பத்துள் ஆழ்த்தவல்லன.

(1) இன்னிசை - இனிய பாட்டு ஏதும் - ஏதுவும் மன் - நிலைபெற்றுள்ள. பன்னரிய (எடுத்துச்) சொல்லுவதற்கரிய. இசைபாலாறுபோல் பெருகி, பாறைகளையும் உடைத்து உருளும்படி பாய்கிறது. இசையால் கல்லும் கரையும் என்பதாம். எண்ணில் எண்ணற்ற 'இசைவலை' இசையை வலையாகக் கூறினார். (2) கொய்தல்-பறித்தல். ஒளி இழந்து-அழகு கெட்டு. (3) திருக்கரம்-அழகியகை. தீண்டும் தொடும்.

6396

3. தமிழன் இதயம்

அல்லா வென்பார் சிலபேர்கள்
அரன் அரி யென்பார் சிலபேர்கள்
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்றும் சிலபேர் சொல்வார்கள்
எல்லா மிப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே! 1.

அந்தப் பொருளை நாம்நினைந்து
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப் படியாய் எவர்அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போமதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம். 2.

—நாமக்கல் கவிஞர். இராமலிங்கம் பிள்ளை

தமிழன் இதயம் 'என்னும் நூலில் 'தெய்வம்' என்னும் பகுதியில் இப் பாடல்கள் உள்ளன. இந்நூல் ஆசிரியர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை அவர்கள். இவர் நாட்டிற்கும் மொழிக்கும் மிகவும் தொண்டு செய்துள்ளார். இவர் கவிதைகள் படிக்கப் படிக்க இன்பந்தருவன; தமிழர் மனத்திலிருந்து குல, சமய, அரசியல், பூசல்களை விரட்டியடிக்கும் சங்க நாதமாகும். அடிமையின் மனத்திலும் உரிமை (சுதந்திர) வேட்கையை உண்டாக்குவன. இவர் இப்போது சென்னை அரசியல், அவைக்களப் புலவராக (ஆஸ்தான கவியாக) நியமிக்கப்பட்டுள்ளார். (i) பரமண்டலம்-சிறந்த வீட்டுலகம். சமணர் கடவுள் நிலையை நிர்வாணநிலை என்பர். (ii) குலவிடுவோம்-கொண்டாடுவோம். நிந்தை-வசை. வந்திப்போம்-பணிந்திடுவோம்.

4. நாடு

சங்கொலி

வாள்கொண்டு நேர்நின்று போர்தந்த போதும்
வஞ்சகங்கள் புரியாத தமிழ்நாடு வாழ்க!
கோள்கொண்டு பொய்சொல்லிக் குற்றேவல் செய்யாக்
குணமிக்க ஜனமிக்க தமிழ் நாடு வாழ்க.

—நாமக்கல் கவிஞர். இராமலிங்கம் பிள்ளை,

சங்கநாதம் கேட்குது

2. சாந்தி காந்தி சத்தியத்தின்
சங்கநாதம் கேட்குது
ஆய்ந்துபார்க்கத் தேவையில்லை
அதிலிருக்கும் நன்மையை
மாந்தருக்குள் சமூக வாழ்வு
மாறுமிந்தப் பொழுதிலே
சோர்ந்திடாமல் நமதுநாட்டை
துயில்எழுப்பும் ஓசையாம்:

3. இடி இடித்து மின்னல் மின்னி
இருள்கவிந்து எங்கணும்
கிடுகிடுத்து உலக மெங்கும்
கிலி பிடித்த வேளையில்

குடுகுடுத்த கிழவர்காந்தி
குமரர்நாணக் கூவினர்
துடி துடித்து உண்மை போற்றும்
தொண்டர் யாரும் கூடுவோம்.

—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை,

1. நேர் நின்று போர் புரியும் போதே வஞ்சம் செய்யார்கள் என்பது, பகைவர் புறமுதுகு கொடுத்து ஓடும் போதும் வஞ்சம் செய்யாத நேர்மை உடையவர்கள் தமிழர் என்பதைக்காட்டும். குற்றேவல் - அடிமைத்தொழில். இப் பாடல் புலவரின் சங்கொலியிலிருந்து எடுக்கப்பெற்றதாகும்.

2. இப்பாடல்களும், கவிஞரின் சங்கொலி எனும் கவிதைத் தொகுதியினின்றும் எடுக்கப் பட்டவை யாகும். சாந்தி காந்தி-அமைதியே உருவாகிய காந்தியடிகள். ஆய்ந்து -ஆராய்ந்து. நன்மை தீமைகளை ஆராய்ச்சி செய்து காண வேண்டியதில்லை. பொது மக்களின் வாழ்க்கை மாறுத லடையும் இக்காலத்தில் நம்பிக்கையே போதுமானது. சோர்ந்திடாமல்-தளர்ச்சி அடையாமல். துயில் எழுப்பும்-விழிப்புக் கொள்ளச் செய்யும்.

3. கவிந்து - சூழ்ந்து. கிடுகிடுத்து - அச்சத்தினால் நடுங்கும்படி செய்து. கிலி - அச்சம். குடு குடுத்த - மூது மையைக் கொண்ட. குடு குடுத்தல்-முதுமையைக் காட்டும் செயம். துடி துடித்து - (தொண்டாற்றும் ஆர்வம் (பொங்குதலால்) உள்ளம் மிகு துடிப்பு அடைந்து.

II. அறவுரைப் பகுதி

(அ) திருக்குறள்

கடவுள்

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

அறமே சிறப்பு

சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. 2

மகன் கடமை

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்என்னும் சொல். 3

இன்சொல்லே கனி

இனிய உளவாக இன்னாத கூறல்,
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 4

நன்றி மறவாதே

நன்றி மறப்பது நன்றுஅன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று 5

நாக்கும் நெருப்பும்

தீயினாற் சுட்டபுண், உள் ஆறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. 6

பொருள் எதற்கு ?

தாளாற்றித் தந்த பொருளெல்லாம், தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு, 7

புகழ் வேண்டும்

தோன்றின் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
தோன்றலின் தோன்ருமை நன்று. 8

கொல்லாதே

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. 9

கல்வியே கண்

எண்என்ப ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு. 10

கற்ருரே கண்ணுடையார்

கண்ணுடைய ரென்பவர் கற்ருேர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 11

அறிவுடையார்

அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர். 12

எண்ணித்துணிக

எண்ணித் துணிக கருமம் ; துணிந்தபின்,
எண்ணுவம் என்ப திழுக்கு. 13

செயலே பெருமை

*பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.* 14

முயற்சி

*முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.* 15

நட்பு

*உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.* 16

பேதையிற் பேதை

*ஓதி யுணர்ந்தும், பிறர்க்குரைத்தும், தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.* 17

மருந்து

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தி
அற்றது போற்றி உணின்.* [யது. 18

நல்ல குடிப்பிறந்தார்

*அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.* 19

உழவர் பெருமை

*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.* 20

திருக்குறள், கடைச்சங்ககாலத்தில் தோன்றிய "பதினெண் கீழ்க்கணக்கு" என்னுந் தொகுதியில் ஒன்றாகும். இந்நூல் குறள் வெண்பாக்களாலாகியதனுல் குறள் எனப் பெயர் பெற்றது. திரு என்னும் அடைமொழி சிறப்புக் கருதிச் சேர்க்கப்பட்டது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளையும் 133 அதிகாரங்களையும் கொண்டு உள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறள்கள் உள்ளன. திருக்குறள் எல்லோருக்கும் உரிய பொதுமறை. இதை இயற்றியவர் திருவள்ளுவர்.

(1) ஆதிபகவன் - எல்லாவற்றிற்கும் முதலாகிய இறைவனை. முதற்றே - முதலாகக் கொண்டதே. (2) ஊங்கு - மேலான. எவனோ - எதுவோ? (3) என் நோற்றான் கொல் - என்ன தவம் செய்தாரோ (4) இனிய - இனிமையான தீஞ்சொற்கள். இன்னாத - கடுஞ்சொற்கள். கவர்ந்தற்று—உண்பதுபோலாகும். (5) ஒருவர் செய்த நன்மையை என்றும் நினைக்கவேண்டும். தீமையை அப்பொழுதே மறக்கவேண்டும். (6) உள் ஆறும்—உள்ளே ஆறிப்போகும். கடுஞ்சொல்லால் சுட்ட மனப்புண் என்ன செய்தாலும் மாறாது. அதன் வடு உள்ளே உறுத்திக் கொண்டிருக்கும். (7) தாள் ஆற்றி - முயற்சி செய்து. வேளாண்மை - உதவி. (8) அஃது இலார்—அப்படிப் புகழ்பெறும் ஆற்றல் இல்லாதவர்கள். (9) செய்யற்க—செய்யாதே. (10) எண் - கணக்கு. எழுத்து . இலக்கியம். (11) என்பர் - எனப்படுவர். கற்றவரே கண்ணுடையார்; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையவர்: அவர்கள் கண்ணிருந்தும் காணார். (12) என்னுடைய

ரேனும் - என்ன செல்வம் உடையாரேனும். இலர் - ஒன்றும் இல்லாதவர் போல்வர். அறிவுச் செல்வமே செல்வம். (13) கருமம் - ஒரு செயல். எண்ணுவம் - கருதுவோம். (14) கட்டளைக்கல் - உரைகல். அவரவர் செயலே பெருந்தன்மைக்கும் சின்னத்தனத்திற்கும் உரைகல்லாகும். (15) முயற்றின்மை - முயற்சியில்லாத சோம்பேறித்தனம். இன்மை - வறுமை (யான குழியில்). (16) உடுக்கை - ஆடை. ஆங்கே - உடனே, அங்கேயே. இடுக்கண் - துன்பம். களைவது - தீர்த்தல். நட்பு - நட்புரிமை. (17) ஓதி உணர்ந்தும்-நூல்களைக் கற்றறிந்தும். பேதையின்-மூடனைவிட. (18) யாக்கை - உடம்பு. அருந்தியது - உண்டது. (19) குன்றுவ - குடிப்பெருமை குறையும்படியான எந்தச் செயலையும். செய்தல் இலர் - செய்யமாட்டார். (20) உழுது உண்டு வாழ்வாரே - உழுது பயிர் செய்து வாழும் வேளாளரே. வாழ்வார் - (மானமுடன்) வாழ்பவர் ஆவர்.

(ஆ) மூதுரை

அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு. 1

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு. 2

உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். 3

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம். 4

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை. 5

மூதுரை என்னும் நூலை இயற்றியவர் ஔவையார். பல பெரிய நூல்களின் சாரமாக உள்ள நீதிகளும் கருத்துக்களும் ஔவையார் நீதி நூல்களில் அமைந்து விளங்குகின்றன. மூதுரைக்கு வாக்குண்டாம் என்னும் மற்றொரு பெயரும் உண்டு.

1. கடக்க - (அவரை) வெல்லுதற்கு. மடைத் தலையில் - நீர் மடையினிடத்து. உறுமீன் - பெரிய மீன். வாடி இருக்கும் - அடங்கியிருக்கும்.

2. அறு - நீங்குகின்ற. உற்றுழி - வறுமை நேர்ந்த பொழுது. தீர்வார் - நீங்குவார். ஒட்டி உறுவார் - நீங்காது சேர்ந்திருந்து துன்பம் அனுபவிப்பவர்.

3. உற்ற இடத்தில் - மானக்கேடு உண்டான இடத்தில். பற்றலர் - பகைவர். பணிவாரோ - வணங்குவாரோ.

4. சாந்தனையும் - இறந்து போமளவும். ஆம் தனை யும் - ஆகுமளவும். குறைக்குந்தனையும் - வெட்டுமளவும். ஆம் - அசை. கண்டீர் - முன்னிலையசை.

5. ஆங்கே - அவ்விடத்திலுள்ள. புல்லுக்கும் பொசி யும் என்று கூட்டுக. பொசியும் - கசிந்தூறும்.

(இ) நல்வழி

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 1

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 2

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல் [கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போ [விப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம். 3

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானா நாடு. 4

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்-இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய் வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்.

ஔவையார் இயற்றிய நூல்களில் நல்வழி என்பது ஒன்று. பல பெரிய அற நூல்களின் கருத்துக்கள் இந் நூலில் அமைந்து விளங்குகின்றன. பல செய்யுட்கள் மெய்ந்நூற்களின் முடிந்த கருத்துக்களை விளம்புவன வாகும். கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர்களோடு அதே காலத்தில் வாழ்ந்த இரண்டாம் ஔவையார் இயற்றியவை மூதுரையும் இந்நூலும் என்பர்.

1. அற்று - வற்றிப்போய். உலகு ஊட்டும் - உலகத்தாரை உண்பிக்கும். நல்கூர்ந்தார் - வறுமையடைந்தார். ஏற்றவர்க்கு - இரந்தவர்க்கு.

2. விழும் அன்றே - அழிந்து விடும் அல்லவா. ஏற்றம் - உயர்வு.

3. பாவித்தும் - (ஒருவரைப் பெரியவராகப்) பாவித்தும். பாழின்-வீணிலே. போவிப்பம்-செலுத்துகின்றோம்.

4. செலவு அதிகம் ஆனால் என்று கூட்டுக. நாடு - இதனை ஆராய்ந்து அறியாயாக. வரவுக்கு மிகுதியாகச் செலவு செய்பவன் பழி பாவங்களை அடைவான்.

5. எதிர் கொள்வர் - எதிர்கொண்டு உபசரிப்பர். அவன் வாயில் சொல் செல்லாது - அவன் வாயிற் பிறக்கும் சொல்லானது பயன்படாது. அதாவது, அவர் செல்வாக்கு அற்றவராவார். ஆங்கு, மற்று - அசை.

(ஈ) அறப்பளீசுர சதகம்

செய்யத்தக்கவை

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டும்; கற்ற
வழியிலே நிற்க வேண்டும்;
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண்டும்;தேடி
வளரறஞ் செய்ய வேண்டும்;
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்;பிரிதல்
செய்யா திருக்க வேண்டும்;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டும்;
தியாகம் கொடுக்க வேண்டும். [கொண்டு
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண் டும்;நாட்டி
நன்றாய் நடத்த வேண்டும்.
நம்பனிணை அடிபூசை பண்ணவேண் டும்;பண்ணி
னுலுமிகு பக்தி வேண்டும்.
ஆலமமர் கண்டனே! பூதியணி முண்டனே!
அநக! எம தருமை மதவேள்!
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்ப ளீசுர தேவனே!

சீலம் - ஒழுக்கம். தியாகம்-ஈகை. (தானம்). ஞாலம்-உலகம். நம்பன்-கடவுள். இணையடி-இரண்டு பாதங்கள்.

ஆலம் அமர் கண்டன் - நஞ்சு கழுத்திலே தங்கப்பெற்ற சிவபெருமான். முண்டன் - நெற்றியை உடையவன், அநக - குற்றமற்றவனே.

(உ) திருவேங்கட சதகம்

சிறப்படையினும் பயனற்றவை

காட்டில்இண் டஞ்செடி தழைத்தென்ன ?
காஞ்சிரங் கனியது சிவக்கி லென்ன ?
கரைநாணல் எல்லாம் மலர்ந்தென்ன காகம்
கழுத்திடை வெளுக்கி லென்ன ?
ஆட்டின்க ழுத்திலதர் நீண்டென்ன ? நீர்ப்பாசி
யதுபச்சை யாகி லென்ன ?
அற்பருக் கதிகாரம் வந்தென்ன ? பேடிகையில்
ஆயுத மிருந்து மென்ன ?
நீட்டமொடு கரடிக்கு மயிர்வளர்ந் தாலென்ன ?
நீதியறி யாத மூடர்
நிறைசெல்வர் ஆயென்ன ? ஞானமில் லாக்கல்வி
நெறிபோல் இருக்கு மென்பார் ;
வாள்தடங் கண்ணிபுனை கண்ணிமகிழ் கண்ணனே
மணவாள நாரா யணன் !
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே !
வரத வேங்கட ராயனே !

அதர் - ஆட்டின் கழுத்தில் தொங்கும் தசைப்பாகம். பேடி - ஆண்மை இல்லாதவன். கண்ணிபுனை - கண்ணை உடையவள் தொடுக்கும் ; கண்ணி - (தலையிற்சூடும்) மாலை.

(ஊ) விவேக சிந்தாமணி

கற்றோர் பெருமையும் புல்லோர் சிறுமையும்

தண்தா மரையின் உடன்பிறந்தே தண்தேன் நுகரா
[மண்டூகம்;
வண்டோ கானத் திடையிருந்து வந்தே கமல மது
[வுண்ணும்
பண்டே பழகி இருந்தாலும் அறியார் புல்லோர்
[நல்லோரை
கண்டே களித்தங்(கு) உறவாடித் தம்மிற் கலப்பர்
[கற்றூரே.

1. தண் - குளிர்ந்த நுகரா - அநுபவிக்கமாட்டா. மண்டூகம் - தவளைகள்.

III. வரலாற்றுப் (கதைப் போக்குப்) பகுதி

1. தேசிங்குராஜன் கதை

டில்லிபதுரை தேசிங்குராசனுடைய வளப்பத்தைக் கேட்டல்

[செஞ்சிக் கோட்டை யரசனின் மகனை இளவரசன் தேசிங்கு மன்னன், டில்லிபதுரையின் "பாராசாரிக்" குதிரையை ஏறிச் சவாரி செய்து அடக்கி அங்கு அடை

பட்டிருக்கும் தன் தந்தையாகிய தேரணி மஹாராஜனேயும் மீட்டுக்கொண்டு போகவும் டில்லி போந்தான். டில்லி அரசன் அவைக்களம் போக அவன் யார் என்று அரசன் கேட்பத் தான் யார் என்று தெரிவிப்பதை டில்லி அரசன் கேட்டறிகிருன். இனி, அரசன் கேட்பதையும் தேசிங்கு கூறுவதையும் குதிரையேறி அடக்கியதையும் படிப்போம்.]

ஐயா கேளும் ஐயா கேளும் அறியாத பாலகனே
எந்த தேசத்தி லிருந்து நீயும் தேடி வந்தா யப்பா
உந்தனூரும் பேரும் நாடும் உன் தகப்பன் பேரும்
நலமாய்ப்பெற்றதாயின்பேரும் சலுதியிற்சொல்லு
[மென்ருன்.

அந்தவார்த்தை காதிலேகேட்டான் அலறும்
[சிங்கம் போல
சொல்லுகிறேன் கேளும் சொல்லுகிறேன் கேளும்
[டில்லிப துரையே நீ
தெற்கே வெகுதூரம் இருக்குது பாரு செஞ்சிக்
[கோட்டை நகரம்
செஞ்சிக்கோட்டை ஆளுமரசன் தேரணி
[மஹாராஜன்.
தேரணி மஹாராஜன் குமரன் நான் தேசிங்கு
[பாலகன்

சிற்றப்பதுரை தரணிசிங்குமே சிறையி லிருக்
[கிருராம்
குதிரை யேற வலுவில்லாமல் கொலுவி லிருக்
கிருராம்

குதிரை யேறிச் சவாரி செய்துநான் கொண்டு
போக வந்தேன்
சல்தி சல்தி குதிரை கொண்டுவா டில்லிப
துரையே நீர்
கொல்லுஞ்சிங்கக்குட்டிபோலேசீறியே நின்றானும்

அந்தச் சொல்லைக் காதிலே கேட்டான் டில்லி
மஹராஜன்
தேரணி ராஜன் காதிலே கேட்டுத் தேடியே
வந்தானும்
சிற்றப்ப துரை தரணிசிங்குமே தேடி ஓடி வந்தார்
வாரியெடுத்து மடிமீதில்வைத்து மகனைமுத்த
மிட்டார்
சந்தோஷமாகத் தடவியெடுத்து திருஷ்டி
[கழித்தாராம்

ஐம்பத்தாறு தேச ராஜர்கள் அதிசயப்பட்டாராம்
டில்லிப துரையும் சந்தோஷமாக சேரவோடி
[வந்தாராம்
கண்ணேமணியே ரத்தினமேயென் கருவிளமே
[கேளாய்
என்மகனைக் கண்டு நானும் மகிழ்ச்சி யடையாமல்
உந்தன் சொல்லைக்கேட்டு நானும் உள்ள
[மகிழ்ந்தேனே

பெற்ற தாயும் உன்னைப்பிரிந்து பின்னுயிர்
[வைப்பாளா
அரசனைக்கேட்டு செஞ்சிக்குப் போவோம்
அருமைக்கண் மணியே

மனுகேட்டு வருகிறேனப்பா வாருங்குழந்தை
[யென்றான்
அந்தப் பேச்சைச் காதிலே கேட்டான் அழகு
[பாலகனும்
கலகலவென்று சிரித்தெழுந்தான் கதும்புஞ்
[சிங்கம் போல்
ஐயாகேளு மையாகேளும் என்னைப் பெற்ற
ராஜாவே
குதிரையைப் பார்த்துப் பயப்பட்டு நீங்கள் கொ
[டிய சிறை யிருந்தீர்
பாராசாரியைப் பார்த்து நீங்கள் பயந்து சிறை
[யிருந்தீர்
ஏறிசவாரி செய்து நானுமே இட்டுபோகிறேன்
[பார்
குதிரையேறிச் சவாரி செய்து நான் கொண்டு
போவே னென்றான்
போகாமற்போனா லுந்தன் வயிற்றில் பிறந்த
[தென்னத்திற்கு
அந்தவார்த்தை காதிலே கேட்டு அலறி வீழ்ந்
[தாராம்,

தேசிங்கு குதிரையேறுதல்

கனைத்துக் கதும்பி வெளியிலே வந்தான் காளை
[சிங்கம் போல்
குதிரையிருக்குங் கொட்டடி தேடிக் குதித்தோடி
[வந்தான்
ஓடிவருகிற ராஜரைக் கண்டு உதும்பி
[யெழுந்தது பார்

அண்டமிடிந்து வீழ்ந்தாற்போல அலறிக் கனைத்
[தது பார்
கோட்டையிடிந்து விழுந்தாற்போல குலுங்கக்
[கனைத்தது பார்
நாற்றிசையுள்ளவர் கலங்கியங்கே நடுங்கக்
[கொண்டார்கள்
ஐம்பத்தாறு தேசராஜர்கள் அலறிவிழுந் தார்கள்
குழந்தை குழந்தை யென்று சொல்லிக்
[கூவியழுதார்கள்

டில்லிபதுரை தேரணி ராஜனுந் திகைத்து
[விழுந்தார்கள்
விழுந்தவுடனே குழந்தையென்று தேடியே
[வாரார்கள்
கனைத்த குதிரைக் கண்ணாலே கண்டு கடுகவோடி
[வந்தான்
குதிரையைத்தட்டி சலாம் வாங்கினான்
கொல்லுஞ் சிங்கம் போல
அண்ணவாடா தம்பிவாடா மோவுத்துக் காரா நீ

கால்கயிற்றைக் கழுத்துக்கயிற்றைக் கடுக
[அவிழுமென்றான்
அந்தச் சொல்லைக் காதிலே கேட்டான் மோவுத்
[துக்காரனும்
சொன்னவுடனே சல்தியாய்ப் பாய்ந்து சுருக்கா
[லெழுந்தானும்
தங்கத்தாலே சீனிப்போட்டுத் தடவிக்
[கொடுத்தானும்
அந்தக்குதிரையைக் கண்ணாலே கண்டு அகமுங்
[குழைத்தானும்

அரிபரந் தாமாவென்று அலறி யெழுந்தானும்
கோவிந்தா ஸ்ரீகிருஷ்ணவென்று கும்பிட்
[டெழுந்தானும்
பாராசாரியைச் சலாம் வாங்கிப் பாய்ந்தேறினானும்
புலிக்குட்டிபோலே பாய்ந்தவனும் புரவியேறி
[னானும்
ஏறினவுடனே பாராசாரியுமென்ன செய்யுதுபார்

தடதட தடவென்று தவிக்குதுபார் குதிரை
கிடகிட கிடவென்று கிளம்பிக் குதித்தது பார்
லகானை யிழுத்துக் கையிலே பிடித்தான் ராஜா
தேசிங்கு
ஐயாகேளு மையாகேளு மென்னைப் பெற்றவரே
புரவியேறிச் சவாரி போகிறேன் பெற்றவரே ஐயா

தப்பித்தவறி வந்தேனானல் தழுவிக்கொள்ளு
மையா
இன்றைக்குஞ் சாவு நாளைக்குஞ் சாவு இருக்குது
தலைமேலே

ஒன்றுக்கு நீ யஞ்சவேண்டாம் உறுதி கொள்ளு
[வீரே.

தேசிங்கு ராஜன் கதை நாட்டுப் பாடல்கள் (balads) என்று சொல்லக்கூடிய பாடல் வகையைச் சேர்த்தது. இதை, "அவ்லியாசாணிமாலை," "பஞ்சபாண்டவர் வனவாசம்" போன்ற நூல்களைப்போல், புகழேந்திப்புலவர் பாடியதாக அவர் மேல் ஏற்றிக் கூறப்படினும் நடையையும்

போக்கையும் பார்க்கும்போது அப்படித் தோன்றவில்லை. புகழேந்தி காலத்தால் முந்தியவர். இப்பாடலை மிகவும் விருப்போடும் ஆர்வத்தோடும் சிறுவரும், நாட்டுப்புற மக்களும் படித்து இன்புறுகின்றனர்.

(1) பாலகனே - இளைஞனே (4) சனுதியில் - விரைவில் (11) வனு - ஆற்றல் (சக்தி) (19) திருஷ்டி _ பார்த்தோர்கண் போடுவது. (29) கதும்பும் - உறுமும் (33) இட்டு - கூட அழைத்துக்கொண்டு (39) உதம்பி - உதைத்து (40) அண்டி - அடைந்து ; நெருங்கி மிடிந்து - துன்புற்று (51) மோவுத்துக்காரன் - குதிரைக்காரன்.

2. கண்ணன் பாட்டு

கண்ணன் என் அரசன்

1. பகைமை முற்றி முதிர்ந்திடு மட்டிலும்
பார்த்திருப்ப தல்லா லொன்றுஞ் செய்திடான்;
நகைபு ரிந்துபொ றுத்துப்பொ றுத்தையோ
நாட்கள் மாதங்க ளாண்டுகள் போக்குவான்.

2. கண்ணன் வென்று பகைமை அழிந்துநாம்
கண்ணிற் காண்ப தரிதெனத் தோன்றுமே;
எண்ண மிட்டெண்ண மிட்டுச்ச லித்துநாம்
இழந்த நாட்கள் யுகமெனப் போகுமே.

3. படைகள் சேர்த்தல் பரிசனம் சேர்த்திடல்
பணமுண் டாக்க லெதுவும் புரிந்திடான்
'இடையன் வீரமி லாதவன் அஞ்சினேன்'
என்ற வர்சொ லும் ஏச்சிற்கு நாணிலான்.

4. வான நீர்க்கு வருந்தும் பயிரென
மாந்தர் மற்றிவண் போர்க்குத் தவிக்கவும்,
தானங் கீர்த்தனை தாளங்கள் கூத்துக்கள்
தனிமை வேய்ங்குழ லென்றிவை போற்றுவான்.

5, காலி னைக்கையி னுற்பற்றிக் கொண்டுநாம்
கதியெ மக்கொன்று காட்டுவை யென்றிட்டால்
நாலி லொன்று பலித்திடுங் காணென்பான்
நாமச் சொல்லின் பொருளெங் குணர்வதே?

6. நாம வன்வலி நம்பி யிருக்கவும்
நாண மின்றிப் பதுங்கி வளருவான்
தீமை தன்னை விலக்கவுஞ் செய்குவான்
சிறுமை கொண்டொளித்தோடவுஞ் செய்குவான்.

7. தந்தி ரங்கள் பயிலவுஞ் செய்குவான்.
சவுரி யங்கள் பழகவுஞ் செய்குவான்
மந்தி ரத்திற னும்பல காட்டுவான்
வலிமை யின்றிச் சிறுமையில் மூழ்குவான்.

8. காலம் வந்துகை கூடுமப் போதிலோர்
கணத்தி லேபுதி தாக விளங்குவான்
ஆல கால விடத்தினைப் போலவே
அகில முற்று மசைந்திடச் சீறுவான்.

9. 'வேரும் வேரடி மண்ணு மில்லாமலே
வெந்து போகப் பகைமை பொசுக்குவான்
பாரும் வானமு மாயிர மாண்டுகள்
பட்ட துன்பங் கணத்திடை மாற்றுவான்.

10. கண்ண னெங்கள் அரசன் புகழினைக்
கவிதை கொண்டெந்தக் காலமும் போற்றுவேன்;
திண்ணை வாயில் பெருக்கவந் தேனெனைத்
தேசம் போற்றத்தன் மந்திரி யாக்கினன்.

—**பாரதியார்**

நாட்டுக் கவி (தேசியக் கவி) என்று நானிலம் போற்றும் புலவர் சுப்பிரமணிய பாரதியார் தமிழ் நாட்டு மறுமலர்ச்சியின் தலைவராவர். இவர் பாடல்கள் உரிமை

வேட்கை, தொழிலின் பெருமை, தமிழ் மொழிச் சிறப்பு, பெண்ணின் பெருமை, தொண்டின் சிறப்பு, பெருமிதம், வீரம், அடிமை ஒழிப்பு போன்ற இனிய பண்புகளையும் நாட்டுப்பற்று மொழிப்பற்று கடவுட் பற்றுகளையும் ஊட்ட வல்லன. இவர் பாடல்கள் எளிமையும் இனிமையும், இன்னோசை நயமும் வாய்ந்தன. கண்ணன் பாட்டு என்னும் பகுதியில், கண்ணனைத் தம்மரசராகவும், தம்மை மந்திரியாகவும் கருதிப் பழிப்பது போலப் புகழ்ந்து கூறுகிறார். படித்தின்புறுங்கள்.

3. ஏச்சு — இகழ்ச்சியுரை
4. வேய்ங்குழல் — புல்லாங்குழல்

IV. பல்சுவைப் பகுதி

I. இன்னிசைப் பாடல்கள்

(அ) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

விரும்பிநின் றேத்த மாட்டேன் விதியிலேன் மதி
[யொன்றில்லை
இரும்புபோல் வலிய நெஞ்சம் இறையிறை உருகும்
[வண்ணம்
சுரும்பமர் சோலை சூழ்ந்த அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டேன் கண்ணிணை களிக்கு
[மாறே.

—தொண்டரடிப் பொடி ஆழ்வார்

திருமாலைப் பாடிய ஆழ்வார்கள் அருளிச் செய்தவற்றை யெல்லாம் "நாலாயிரத் திவ்வியப் பிரபந்த"மெனத் திரட்டியுள்ளனர். இப் பாடல் தொண்டரடிப் பொடி ஆழ்வார் பாடிய "திருமாலை"யில் உள்ளது. பன்மலர் கொண்டு கட்டும் பூமாலை போல், அழகிய பாடல்களால் ஆகிய இதுவும் திருப்பாமாலை ஆயிற்று. மதி—அறிவு. இறை இறை - சிறிது சிறிதாக. சுரும்பு - வண்டு. அரங்கமா திரு அரங்கமாகிய பெரிய - கரும்பினை - கரும்புபோல் இனிக்கும் திருமாலை. கண் இணை - இரு கண்கள்.

(ஆ) தேவாரம்

பொறியரவம் அது சுற்றிப் பொருப்பேமத் தாகப்புத்
[தேளிர் கூடின்,
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட கண்டத்தோன்
[மன்னுங் கோயில்

செறியிதழ்தா மரைத்தவிசில் திகழ்ந்தோங்கும் அலைக்
[குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச்சா மரையிரட்ட இளஅன்னம் வீற்றிருக்
[கும் மிழலை யாமே,

—திருஞானசம்பந்தர்

சைவ சமய ஆசிரியர்கள் சிவபெருமான்மீது பாடிய பாமாலைகள் தேவாரம் எனப்படும். தேவருக்கு ஆரம் அல்லது தேவருக்கு உரியன அல்லது தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல் என்பது இதன் பொருள். இது திருஞானசம்பந்தர் திருவீழிமிழலையில் பாடியது. பொறி - புள்ளி. பொருப்பு - மலை. புத்தேளிர் - தேவர். செறி - நெருங்கிய. மறி - (அலை) மீண்டும் மீண்டும் வருகின்ற. மன்னும் - எழுந்தருளி இருக்கும். தவிசு - இருக்கை (ஆசனம்). செய் - வயல்.

(இ) திருவிசைப்பா

தாயினே ரிரங்குந் தலைவவோவென் றுந்
தமியனேன் றுணைவவோ வென்றும்
நாயினே னிருந்து புலம்பினு லிரங்கி
நலம்புரி பரமர்தங் கோயில்
வாயினே ரரும்பு மணிமுருக் கலர
வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயனே ரரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

—கருர்வூத்தேவர்

திருவிசைப்பா : அழகிய இசைமிக்க பாடல்கள். சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள், கருவூர்த்தேவர் முதலிய ஒன்பது பேர் பாடிய இசைப்பாக்கள் 9-ஆம் திரு முறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. நேர் - ஒத்து. தமியனேன் - அடியேன். மணிமுருக்கு - அழகிய (முள்) முருங்கை மரம்.

(ஈ) திருவாசகம்

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
　　பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
　　யுலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
　　செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
　　னெங்கெழுந் தருளுவ தினியே.

திருவாசகம் :— அழகிய வாய்மொழி. மாணிக்க வாசகர் பாடியது. செல்வத் திருமுறைகள் பன்னிரண் டில், திருவாசகம், திருக்கோவையார், ஆகிய மாணிக்க வாசகர் பாடல்கள் எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப் பட்டன. பானினைந்து-பால் நினைந்து எனப்பிரிக்க. சால-மிகுதியும். உலப்பிலா-கெடுதல் இல்லாத. புறம்-வெளியே. சிக்கென-அகப்படும்படியாக.

---

2. இயற்கை வருணனை

(அ) கிளி

பேசு மரகதமே—உனைத் தினம்
பேணி வளர்த்திடுவேன்
ஆசை யமுதமொழி—அளிக்கநீ
அண்டையில் வந்திடாயோ ! 1

பண்ணுக் கிசைந்ததம்மா—பழத்தோடு
பாலுங் கலந்ததம்மா
மண்ணுக் கமுதமம்மா உனதுசெவ்
வாய்மொழி தத்தை யம்மா. 2

மாணிக்கச் செப்பினுலே—அமுதை
வடித்துச் சுவைபெருக்கி
பேணி யுனக்களித்த—பிரமன்
பெரியன் பெரியனம்மா. 3

சின்னஞ் சிறுபள்ளியில்—உனக்கொரு
சிங்காரப் பெஞ்சுமிட்டுத்
தின்னக் கனியறுத்துப்—பாலபாடம்
செப்புவன் வாகிளியே, 4

கண்ணுக் கினிமையாகி—எனதிரு
காதும் குளிரச்செய்யும்
வண்ணப் பசுங்கிளியே—குயிலுமுன்
மாதவஞ் செய்ததுண்டோ ? 5

பாலுக்குச் சீனியைப்போல்—பசுந்தமிழ்ப்
பாடலுக் கின்னிசைபோல்
சோலைக்குப் பைங்கிளியே—உனது
துணையும் பெரிதேயம்மா. 6

—கவிமணி. தேசிகவிநாயகம் பிள்ளை

மரகதம் - பச்சைமணி. கிளி பச்சையாய் இருப்பதால் இதை மரகதம் என்றார். பச்சைமணி பேசாது. கிளியோ இனிமையாய்ப் பேசும். ஆதலால் இதைப் "பேசும் மரகதம்" என்றார். அண்டையில் - பக்கத்தில். பண் - இசை, பண்ணுக்கு இசைந்தது - இசையை ஒத்தது. இனிமையில் பாலும் பழமும் கலந்தது போன்றது. சிங்கார அழகிய. வண்ணம் - அழகிய. உன்னைப் போல் குயில் பெரிய தவத்தைச் செய்துள்ளதா இல்லை. ஏன்? நீ அழகால் கண்ணையும், இசையால் காதையும் குளிரச் செய்கிறாய். ஆனால், குயிலோ இசையால் காதை மட்டும் குளிரச் செய்கிறது. காண்பதற்குக் கிளிபோல் அவ்வளவு அழகாய் இல்லாததால், கண்ணுக்குக் குளிர்ச்சியாய் இல்லை. ஆதலால் கிளியே, குயிலைவிட மேலான தவம் செய்ததாகும் என்கிறார்.

சிறுவர் சிறுமியர் கிளியை இணைபிரியாத இன்பத் தோழராய்க் கொள்வர். அது, பாலும் சர்க்கரையும், தமிழும் இசையும் இணைபிரியாமல் சேர்ந்திருப்பது போலிருக்கிறது.

(ஆ) ஆறு

கல்லும் மலையும் குதித்து வந்தேன்—பெருங்
காடுஞ் செடியும் கடந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி எங்கும்நான்
இரங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடி வந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்து வந்தேன்
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன் மடைச்
சீப்புகள் மோதித் திறந்து வந்தேன், 2

காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டு வந்தேன்.
ஆயும், மலர்ப் பொழில் செய்து வந்தேன்—[அங்கென்
ஆசை தீரவிளை யாடி வந்தேன். 3

ஏருத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன், 4

ஆயிரம் காலால் நடந்து வந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்து வந்தேன்.
நேயமுறப் புன்செய்க் காட்டிலும் அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன், 5

பஞ்சை அறைத்துநூல் நூற்று வந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்து வந்தேன்
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரிற்—குழாய்
நீராக வும்சென்று பாய்ந்து வந்தேன், 6

மாங்கனி தேங்கனி வாரி வந்தேன்—நல்ல
வாசு மலர்களும் அள்ளி வந்தேன்
திங்கரும் பாயிரம் தள்ளி வந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன். 7

அல்லும் பகலும் அலைந்துவந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டு மம்மா. 8

—கவிமணி. தேசிகவிநாயகம் பிள்ளை

1. தேசிக விநாயகம் பிள்ளையின் இப்பாடல்களும் சிறுவர் சிறுமியர் மிக விரும்பி, மகிழ்ந்து, பாடி இன்புறத் தருவனவாகும். ஆறு, மலை, காடு, வயல், பாலம் முதலிய வற்றில் துள்ளிக் குதித்து வருவதைப்போலவே, பாடல் களும் துள்ளிக் குதித்துப் போகின்றன. (இவை குட்ரிச் என்பவர் எழுதிய ஆங்கிலப் பாடல்களைத் தழுவியவை யாகும்.)

2. சாடி - தாண்டி. கண்ணறை - (தண்ணீர் வருவ தற்கு) வழிகள் விட்டுள்ள அறைகள். மடைச் சிப்புகள் - பாலங்களில் தண்ணீரைத் தேக்கித் திறந்து விடுவதற்கு வைக்கப்பட்டிருக்கும் கதவுகள்.

3. நிலத்தழல் - நிலத்திற்குள்ளிருக்கும் சூடு. ஆயும்- கொய்து கொள்ளக்கூடிய 5. சீனி - சர்க்கரை, 6, தீங் கரும்பு - இனிய கரும்புகள்- ஆழி இறைவன் : கடலாகிய தலைவன், ஆறுகளைப் பெண்களாகவும் அவை சென்று சேரும் கடல்களை ஆறுகளின் கணவர்களாகவும் பாராட்டு தல் கவிகளின் மரபாகும்.

(இ) காடு

(காவடிச் சிந்து இசையிற் பாடுக)

1. முட்புதர்கள் மொய்த்ததரை எங்கும்—எதிர்
முட்டுகருங் கற்களும் நெருங்கும்—மக்கள்
இட்டடி எடுத்தெடுத்து வைக்கையிலே
கால்களில்த டுங்கும்—உள்
நடுங்கும்

2. கிட்டிமர வேர்கள்பல கூடும்—அதன்
கீழிருந்து பாம்புவிரைந் தோடும்—மர
மட்டை யசை வால்புலியின்
குட்டிகள போய்த் தாய்ப்புலியைத்
தேடும்—பின்
வாடும்.

3. நீள் கிளைகள் ஆல் விழுதி னோடு—கொடி
நெய்து வைத்த நற் சிலந்திக் கூடு—கூர்
வாளெயிற்று வேங்கை யெலாம்
வால் சுழற்றிப் பாயவருங்
காடு—பள்ளம்
மேடு

4. கேளொடும் கிளம்பிவரும் பன்றி—நிலம்
கீண்டுகிழங் கேளடுத்த தன்றி—மிகு
தூளிபடத் தாவுகையில்
ஊளையிடும் குள்ளநரி
குன்றில்—புகும்
ஒன்றி.

5. வானிடைஓர் வானடர்ந்த வாறு—பெரு
வண்கிளை மரங்கள் என்ன வீறு!—நல்ல
தேனடை சொரிந்ததுவும்
தென்னைமரம் ஊற்றியதும்
ஆறு—இன்பச்
சாறு.

6. கானிடைப் பெரும்பறவை நோக்கும்—அது
காலிடையே காலிகளைத் தாக்கும்—மற்றும்
ஆனினம் சுமந்தமடி
ஆறெனவே பால்சுரந்து
தீர்க்கும்—அடை
ஆக்கும்,

—பாரதிதாசன்

காவடிச் சிந்து என்ற நல்ல இசையில், காட்டில் காணக்கூடிய விலங்குகள், நிகழ்ச்சிகள், காட்சிகள் முதலிய வற்றைப் பாரதிதாசன் நேரில் காணுவது போலப் பாடுகிறார்.

1. முட் புதர்களும், கருங்கற்களும் நெருங்கிக் கிடக்கின்றன. நடக்கும்போது கால்களை அவை தடுக்கின்றன. 2. மரத்தின் மட்டைகள் காற்றில் அசைவது, வரிகளை முதுகில் கொண்டுள்ள புலி நடமாடுவதைப்போலத் தோன்றும். அதைத் தமது தாய் என நினைந்து புலிக் குட்டிகள் போய்ப் பார்த்து, தாய், இல்லையாகப் பின் மனம் வருந்தும். (3) வாள் எயிற்று - கூர்மையான பற்களையுடைய. (4) கேளொடும் - சுற்றத்தாரோடும். கீண்டு - (கொம்புகளால்) கிளறி. தூளி - தூசி. ஒன்றி - தனியாக அல்லது பொருந்தி. (5) வானளாவ மரங்கள், (பசுமையாய்) அடர்ந்து செழித்து வளர்ந்திருப்பது "வானத்திடை இன்னொரு வானம் அடர்ந்ததை" ஒக்கும். தேனடை-தேன் அடை. தேனடையிலிருந்து ஆறு போல் இனிய சாறு (தேன்) சொரியும். தென்னை மரத்திலிருந்தும் இனிய சாறு (இளநீர்ச் சாறு) மிகுதியாகக் கிடைக்கும். (6) காலி

களே - மாட்டுக் கன்றுகளே. ஆனினம் - பசுக்கூட்டம். அடை - (பால் காய்ந்துண்டாகிய) பால் அடை.

நாட்டுப் பாடல்

கதர் விற்பனே

1. " கைகால் களேக்கநெய்த கதராடை—இரு
கண்கள் சடையநெய்த கதராடை
ஐயாநீர் வாங்கியதை அணிவீரோ—எங்கள்
அரும்பசிக் கன்னமெதும் அளிப்பீரோ."

2. " குறுக்கு முறியநெய்த கதராடை—கும்பிக்
கொதிப்பை அடக்கிநெய்த கதராடை
மறுத்துநீர் தள்ளாமல் கொள்ளுவீரோ—எங்கள்
வயிற்றில் எரிதணியச் செய்குவீரோ."

3. "தேசமெல்லாம் புகழ்ந்திடும் ஆடை ஐயா-மேலேச்
சீமையையும் நடுக்கிடும் ஆடை ஐயா
காசுபணம் இல்லாத ஏழைகளுக்காய்—அந்தக்
காந்திமகான் போற்றுங்காம தேனுஐயா."

4. " வேறு வேறு புண்ணியங்கள் செய்ய
[வேண்டுமோ—கதர்
வேட்டி வாங்கி யணிவது போதாதோஐயா
நூறுபேருக் கன்னம்நிதம் அளித்த பலன்—இந்த
நூலாடை கட்டுபவர்க் குண்டே ஐயா."

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளே

இப்பாடல்களும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் இயற்றிய "மலரும் மாலையும்" என்பதில் உள்ளனவே. ஏழை மக்களுக்குக் கதராடை வயிற்றுப் பிழைப்பிற்கு எவ்வாறு வழியாகிறது என்பதை இச் செய்யுட்கள் நன்கு விளக்குகின்றன.

கண்கள் சடைய - கண்கள் பஞ்சடைய. அரும்பசி - பொறுத்தற்கு முடியாத பசி. குறுக்கு - முதுகு. கும்பிக் கொதிப்பு - வயிற்றுப் பசியினால் விளையும் வெப்பம். மேலைச்சீமை - (மேற்கேயுள்ள) மேலை நாடுகள். காமதேனு - வற்றாத பாலை எல்லோருக்கும் எப்போதும் அளிக்கும் தெய்வத் தன்மைவாய்ந்த பசு.

6396

THE MADURA